உதயன்
UTHAYAN - A Lively National Tamil Daily
சுடர்: 29 கதிர்: 036 வள்ளுவர் ஆண்டு: 2044 | மார்கழி 17, புதன் 01.01.2014
யாழ். : ரூபா.20
கொழும்பு : ரூபா.30

மப்பான வானிலை
29 C 24 C

மணல் விலையில் வீழ்ச்சி ஏற்படும்


பக்கம் 07
ரஷ்ய குண்டு வெடிப்பு கோழைத்தனமானது



பக்கம் 09
கட்டுக்கரைக் குளத்திலிருந்து நீரை திறந்துவிட நடவடிக்கை


பக்கம் 23
ஜோகோவிச் ஹட்ரிக் பட்டம்

# சர்வதேச உதவியுடன் இந்த வருடமே தீர்வு

## நம்பிக்கை வெளியிடுகிறது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

கொழும்பு, ஜனவரி 1
2014 ஆம் ஆண்டில் சர்வதேச மத்தியஸ்தத்துடன் தமிழருக்குத் தீர்வு கிடைப்பதற்கான சாத்தியங்கள் உள் என என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நம்பிக்கை வெளியிட்டுள்ளது.
சர்வதேச விசாரணை மூலம் அரச படைகளின் வன்முறைகளினால் பாதிக்கப்பட்டவர்களுக்கும், காணாமற்போனோரின் உறவுகளுக்கும், சிறைகளில் அடைத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளுக்கும் நீதி கிடைக்கும் என்றும் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.



இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ்பிரேமச்சந்திரன் நேற்று மாலை உதயனிடம் தெரிவித்தவை வருமாறு:-
முப்பது வருடங்களுக்கு மேலாகத் தொடர்ந்த தமிழரின் ஆயுதப் போராட்டம் 2009 இல் முள்ளிவாய்க்காலுடன் மௌனித்தது. இதன் பின்னர் ஈழத்தமிழர்கள் அநாதைகள் என்ற நினைப்பில் இலங்கை அரசு செயற்பட்டு வருகின்றது.
எனினும், தமிழரின் பிரச்சினையையும், அவர்களின் நியாயமான கோரிக்கையையும், அவர்களின் போராட்டத்தின் உண்மைத் தன்மையையும் சர்வதேசசமூகம் 2009 ஆம் ஆண்டுக்குப் பின்னர் நன்றாக உணர்ந்துவிட்டது.
இதன் பிரகாரமாகத்தான் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை அரசுக்கு எதிராக இரண்டு தீர்மா

21 ஆம் பக்கம் பார்க்க

## புத்தாண்டு பரிசு: தொலைபேசி கட்டணம் அதிகரிப்பு

கொழும்பு, ஜன.1
தொலைபேசி அழைப்புக் கட்டணங்கள் இன்று முதல் 5 வீதத்தால் அதிகரிக்கப்படவுள்ளன என்று தொலைத் தொடர்புகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.
வெளிச் செல்லும் அழைப்பு கட்டணங்கள் மாத்திரமே இவ்வாறு அதிகரிப்புச் செய்யப்படுவதாக, ஆணைக் குழுவின் தலைவர் அனுஷ பெல்பிட்டி செய்தி தெரிவித்தார்.
குறுச்செய்தி, இணைய சேவை உள்ளிட்ட ஏனைய சேவைகளுக்கான கட்டணங்கள் அதிகரிக்கப்பட மாட்டாது. இதற்கமைய இதுவரையில், 100 ரூபா பெறுமதியான அழைப்புக் கட்டணங்களுக்காக அறவிடப்பட்ட 20 ரூபா வரிப் பணம் இன்று முதல் 25 ரூபாவாக அதிகரிக்கப்படவுள்ளது.
இந்த கட்டண அதிகரிப்பானது, சகல தொலைதொடர்பு நிறுவனங்களுக்கும் பொருந்தும் என தொலைத் தொடர்புகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (த-சி)

## இசை நிகழ்வில் குளறுபடி கொந்தளித்தனர் மக்கள்

### செட்டிகுளத்தில் நேற்றிரவு பதற்றம்

வவுனியா, ஜன.1
வவுனியா, செட்டிகுளம் பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்ட இசை நிகழ்ச்சி நேற்று இரவு திடீரென நிறுத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டது. இதனால் கொந்தளித்த மக்கள் நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களுடன் முரண்பட்டனர். பின்னர் பொலிஸார் தடியடி நடத்தி மக்களை ஓட ஓட விரட்டினர். இதனால் அங்கு கூடிய 600 ற்கும் மேற்பட்ட மக்கள் ஏமாற்றத்துடன் வீடு திரும்பினர்.
'வன்னியின் சக்தி' என்ற அமைப்பு இந்த இசை நிகழ்ச்சியை ஏற்பாடு செய்ததுடன் ஒலி

21 ஆம் பக்கம் பார்க்க

## தேசத்தின் வெற்றி வருடமாக 2014 அமைந்திட வேண்டும்

### ஜனாதிபதியின் புத்தாண்டு வாழ்த்து

கொழும்பு, ஜன. 1
மலர்ந்திருக்கும் இப்புத்தாண்டு எண்ணங்களும் அபிலாஷைகளும் ஈடேறும் தேசத்தின் வெற்றிமிக்க வருடமாக அமைய பிரார்த்திக்கின்றேன் இவ்வாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விடுத்துள்ள புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
விமானநிலையம், அனல்மின் நிலையம், துறைமுகம், அதிவேக நெடுஞ்சாலைகள், நகர அபிவிருத்தி ஆகியவற்றின் பிரதிபலன்களை மக்கள் தற் போது அனுபவித்துவருகின்ற னர்.
அதேபோல் மலர்ந்திருக்கும் இப்புத்தாண்டும் அபிவிருத்தியின் முக்கிய பல நடவடிக்கைகளுக்கு வழிவகுக்கும். மேலும், பல வளங்கள் உங்களுக்கும் உங்களது பிள்ளைகளுக்கும் எதிர்காலத்தில் கிட்டட்டும் என்றும் அவர் தனது வாழ்த்தில் தெரிவித்துள்ளார். (த-சி)




## விளக்கமறியலில் தொடர்ந்தும் கமல்

### விசாரணை தொடர்கிறது என்கின்றனர் பொலிஸார்



யாழ்ப்பாணம், ஜன.1
நெடுந்தீவுப் பிரதேச சபைத் தலைவர் டானியல் றெக்ஷயனை படுகொலை செய்த குற்றச்சாட்டில் கைதாகி விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட அமைப்பாளரும் வடக்கு மாகாண எதிர்க்கட்சித் தலைவருமான கந்தசாமி கமலேந்திரனுக்கு (கமல்) எதிர்வரும் 9 ஆம் திகதி வரை விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.
இரண்டாவது சந்தேகநபரான ஜசிந்தனின் மற்றொரு வாக்குமூலமே குற்றப்புலனாய்வுப்

21 ஆம் பக்கம் பார்க்க

வாசகர்களே!
உள்ளே.....
உதயனின் வர்ணநாள்காட்டி உங்கள் விநியோகஸ்தரிடம் மறக்காமல் கேட்டு வாங்குங்கள்.

## 4 இலங்கைத் தமிழர்கள் தனுஷ்கோடியில் கைது

சென்னை, ஜன 01
சட்டவிரோதமான முறையில் இந்தியாவுக்குள் நுழைய முயற்சித்த இலங்கைத் தமிழர்கள் நால்வர் இந்தியக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்களில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவரும் அடங்குவர்.
படகில் சென்ற இவர்கள் தனுஷ்கோடியில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளனர்.
நிர்மலன் அவரது மனைவி நிசாந்தினி இவர்களுடைய ஒரு வயதுக் குழந்தை டிக்ஷன் மற்றும் படகு ஓட்டியான கந்த

21 ஆம் பக்கம் பார்க்க

## காணாமற்போனவர்கள் தொடர்பில் புலம்பெயர் உறவுகள் முறையிடலாம்

### ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவர் தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 1
காணாமற்போனோர் தொடர்பாக புலம்பெயர் தமிழர்கள் முறைப்பாடுகளைத் தெரிவிக்க இந்தமாத நடுப்பகுதியில் விசேட இணையத்தளம் ஒன்று உத்தியோக பூர்வமாகத் திறந்து வைக்கப்படவுள்ளது என காணாமற்போனோரைக் கண்டறிவதற்கான ஜனாதிபதியின் ஆணைக்குழுவின் தலைவர் பரணகம தெரிவித்தார்.
அத்தோடு, இம்மாத இறுதிக்குள் வடக்கு, கிழக்கு போன்ற பகுதிகளுக்கு நேரடியாக பயணத்தை மேற்கொண்டு தகவல் திரட்டப்படவுள்ளதாகவும், காணாமற்போனோரது உறவினர்களுக்கு நஷ்டஈடு வழங்க ஏற்பாடு செய்யப்படவுள்ளதாகவும் அவர் நேற்றுத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
"ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட இந்த ஆணைக்குழுவிற்கு தொடர்ச்சியாக முறைப்பாடுகள் கிடைத்துக் கொண்டு

21 ஆம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு கியூபா உதவும்

கொழும்பு.ஜன 01

இலங்கையின் நட்பு நாடுகளில் ஒன்றான கியூபா, ஐ.நா மனித உரிமைகள் சபையின் மார்ச் அமர்வின்போது இலங்கைக்கு எதிரான தீர்மானத்தைத் தோற்கடிக்க உதவுவதாக உறுதியளித்துள்ளது.

கொள்கை அடிப்படையில் எந்த ஒரு நாட்டுக்கும் எதிரான குறிப்பான தீர்மானங்கள் சர்வதேச சட்டங்களுக்கு எதிரான வையாதலால் கியூபா அதை எதிர்க்கின்றது என கியூபத் தூதுவர் இந்திரா லோப்பஸ் கூறினார்.

இப்படி ஒரு நாட்டைத் தனியாகத் தேர்ந்தெடுத்து தீர்மானம் கொண்டுவருவது ஒத்துழைப்பாகாது. இது அந்த நாட்டின் இறைமையை மீறுவதாகும். இது ஒரு நாட்டின் உள்நாட்டு விவகாரத்தில் தேவையின்றித் தலையிடுவதாகும். இது ஒரு நாட்டின்மீது தேவையில்லாத அழுத்தத்தைப் பிரயோகிப்பதாகும். இது சர்வதேச சட்டத்தின் உண்மைப் பொருளாகாது என அவர் கூறினார்.

இருப்பினும் அமெரிக்கா விதித்துள்ள பொருளாதாரத் தடை காரணமாக இலங்கையுடன் வர்த்தக நடவடிக்கைகளை விரிவாக்க முடியாத நிலையில் கியூபா உள்ளதெனவும் அவர் குறிப்பிட்டார். (த)

## 4 வயது சிறுமி துஷ்பிரயோகம்: கடற்படைச் சிப்பாய் மறியலில்

திருகோணமலை.ஜன 01

திருகோணமலை, திரியாய் பகுதியில் 4 வயதுச் சிறுமியை துஷ்பிரயோகம் செய்ததாகக் கூறப்படும் கடற்படைச் சிப்பாயை எதிர்வரும் 8 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு திருகோணமலை நீதிமன்ற நீதிவான் தி.திருச்செந்தில்நாதன் உத்தரவிட்டுள்ளார்.

திரியாய் 5ஆம் வட்டாரத்தில் வசிக்கும் சிறுமியொருவரைக் கடந்த ஞாயிற்றுக்கிழமை துஷ்பிரயோகம் செய்ததாக மேற்படி கடற்படைச் சிப்பாய் மீது குற்றஞ்சாட்டப்பட்டது.

இந்நிலையில், மேற்படி கடற்படைச் சிப்பாயைக் கைது செய்த பொலிஸார் கடந்த திங்கட்கிழமை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தியபோதே அவரை எதிர்வரும் 8 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (த)

## 50 இந்திய மீனவர்களுக்கு தொடர்ந்து விளக்கமறியல்

யாழ்ப்பாணம்.ஜன 01

50 இந்திய மீனவர்களைத் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதிமன்றம் நேற்று செவ்வாய்க்கிழமை உத்தரவிட்டுள்ளது.

புதுக்கோட்டை, ஜகதாப்பட்டினம் மற்றும் கோட்டைப்பட்டினம் ஆகிய பகுதிகளிலிருந்து வந்த 30 மீனவர்கள் அனலைதீவுக்கு அண்மித்த கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபட்ட வேளையில் கடற்படையினரால் கடந்த டிசெம்பர் 11ஆம் திகதி கைதுசெய்யப்பட்டனர். அவர்கள் வந்த 8 படகுகளும் கைப்பற்றப்பட்டன.

அத்துடன், புதுக்கோட்டை ஜகதாப்பட்டினம் பகுதியிலிருந்து வந்த 20 மீனவர்கள் கடந்த நவம்பர் 20ஆம் திகதி காங்கேசன்துறைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டிருந்தனர். மேற்படி 50 மீனவர்களும் மல்லாகம் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர். அவர்கள் நேற்று மீண்டும் மல்லாகம் நீதிவானிடம் முன்னிலைப்படுத்தப்பட்டனர். இதன்போது குறித்த 50 மீனவர்களையும் எதிர்வரும் ஜனவரி 13ஆம் திகதி வரை விளக் கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (த-17)

> “ ” 50 மீனவர்களும் மல்லாகம் நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

## 4 நீதிபதிகளுக்கு இடமாற்றம்

யாழ். மாவட்டத்தில் உள்ள நான்கு நீதிமன்றங்களின் நீதிவான்களுக்கு வருடாந்த இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. இன்று ஜனவரி முதலாம் திகதி புதன்கிழமை அவர்கள் தத்தமது நீதிமன்றங்களில் பணிகளைப் பொறுப்பேற்கவுள்ளனர்.

ஊர்காவற்றுறை நீதிவானாகப் பணியாற்றிய ஆர்.எஸ். மகேந்திரராஜா கெப்பெற்றிக்கொலாவ நீதிமன்றுக்கும் சாவகச்சேரி நீதிவானாகப் பணியாற்றிய லெனின்குமார் ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றுக்கும் பருத்தித்துறை நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் சாவகச்சேரிக்கும் மல்லாகம் நீதிவான் கே. கஜநிதிபாலன் பருத்தித்துறை மாவட்ட நீதி மன்றுக்கும், மல்லாகம் நீதிமன்றுக்கு திருகோணமலையில் நீதிவானாகப் பணியாற்றிய சதீஸ்குமாரும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். (த-4)

## இரண்டாம் கட்டத்தில் 10,250 வீடுகள் வடக்கு-கிழக்கில் கட்டியது இந்தியா

கொழும்பு.ஜன 01

இந்திய வீட்டுத்திட்டத்தின் இரண்டாம் கட்டத்தின் கீழ் வடக்கு-கிழக்குப் பகுதிகளில் 2013ஆம் ஆண்டு இலங்கை அரசின் ஒத்துழைப்புடன் 10,250 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளதாக இந்தியத் தூதரகம் தெரிவித்துள்ளது.

போரினால் அகதியானவர்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்ட 43,000 இந்திய வீட்டுத் திட்டத்திலேயே வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளதாக இந்திய தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில்தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ். மாவட்டத்தில் 1832 வீடுகளும், 3090 வீடுகள் கிளிநொச்சி மாவட்டத்திலும் 3540 வீடுகள் முல்லைத்தீவு மாவட்டத்திலும், 1074 வீடுகள் மன்னார் மாவட்டத்திலும், 648 வீடுகள் வவுனியா மாவட்டத்திலும், 66 வீடுகள் மட்டக்களப்பு மாவட்டத்திலும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

மேலும் 100 வீடுகள் நவீனமயப்படுத்தப்பட்டுள்ளன.

ஒவ்வொரு வீட்டுக்கும் 2,50,000 ரூபா வீதம் வழங்கப்பட்டுள்ளது. 7.8 மில்லியன் ரூபா பயனாளிகளின் வங்கிக் கணக்குகளுக்கு நேரடியாக வைப்பிலிடப்பட்டுள்ளது.

இரண்டாம் கட்ட வீட்டுத் திட்டப் பணிகள் 2012 ஒக்ரோபர் 2ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டன. 2014ஆம் ஆண்டில் 16,000 வீடுகளைக் கட்டி முடிக்க எதிர்பார்க்கப்பட்டுள்ளது. 2015ஆம் ஆண்டில் 17,000 வீடுகளைக் கட்டி முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது- என்றுள்ளது. (த)

## இரண்டு பிரதேச சபைகளின் பட்ஜெட் மீண்டும் தோல்வி

கொழும்பு.ஜன 01

ஹிங்குராங்கொட மற்றும் புளத்சிங்க பிரதேச சபைகளின் 2014 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் இரண்டாவது முறையாகவும் நேற்றுத் தோற்கடிக்கப்பட்டுள்ளது.

ஹிங்குரங்கொட பிரதேச சபையின் வரவு செலவுத் திட்டம் இரண்டாவது தடவையாக 3 மேலதிக வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டுள்ளது.


பிரதேச சபைத் தலைவர் அமர்வுக்குச் சமூகமளிக்காத காரணத்தினால், உப தலைவர் தலைமையில் வாக்கெடுப்பு இடம்பெற்றது.

இதனடிப்படையில், ஆதரவாக 3 வாக்குகளும், எதிராக 3 வாக்குகளும் அளிக்கப்பட்டதுடன், மூவர் அமர்வில் கலந்து கொள்ளவில்லை.

புளத்சிங்க பிரதேச சபையின் வரவு செலவுத் திட்டமும் இரண்டாவது தடவையாகவும் நேற்றுத் தோல்வியடைந்துள்ளது.

பிரதேச சபைத் தலைவர் வரவு செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்த போதிலும், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் 8 உறுப்பினர்களும், ஐக்கிய தேசியக் கட்சியின் 3 உறுப்பினர்கள் எதிராக வாக்களித்துள்ளனர். (த)

## தெரணியகல பிரதேசசபைத் தலைவர் கைது



கொழும்பு.ஜன 01

அவிசாவளை - தெரணியகல பிரதேச சபையின் தலைவர் அநுர விஜேசூரிய கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்றுக் காலை 9 மணியளவில் தெரணியகல பொலிஸாரால் இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தெரணியகலயில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற கரப்பந்தாட்டப் போட்டியின் போது ஒரு அணி சார்பாக விளையாடிய பாலித ஹெட்டியாராச்சி என்ற 23 வயது இளைஞன் மீது தாக்குதல் நடத்திய குற்றச் சாட்டிலேயே பிரதேச சபை தலைவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் நேற்று அவிசாவளை நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

தெரணியகல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த)

## தீவிர ஆள்சேர்ப்பில் இலங்கை ராணுவம்

கொழும்பு.ஜன 01

போர் முடிவுக்கு வந்து நான்கரை ஆண்டுகள் கழிந்துள்ள நிலையிலும், இலங்கை இராணுவம் தொடர்ந்து ஆள்சேர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

வெளிப்படையாக ஊடகங்களின் மூலம் விளம்பரங்களைக் கோரி ஆட்சேர்ப்பு செய்வதற்குப் பதிலாகத் தென் பகுதியில் பல இடங்களில் சுவரொட்டிகள் மூலம் விளம்பரம் செய்து ஆள்சேர்ப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

களுத்துறைப் பகுதியில் இராணுவத்தின் கொமாண்டோ படைப்பிரிவுக்கு ஆள்சேர்ப்புச் செய்வது தொடர்பான சுவரொட்டிகளை அண்மைக் காலமாக படையினர் ஒட்டி வருகின்றனர். (த)

## 29 மீனவர்களுக்கு உலருணவுப் பொருள்

வடமராட்சி கிழக்கில் கடற் கொந்தளிப்பினால் பாதிக்கப்பட்ட 29 மீனவர்களுக்கு புலம்பெயர் கொடையாளி ஒருவர் அன்பளிப்புச் செய்த நிதியிலிருந்து உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன.

கடந்த ஒக்ரோபர் மாதம் 12 ஆம் திகதி திடீரென ஏற்பட்ட கடற் கொந்தளிப்பால் முல்லைத்தீவு தொடக்கம் பருத்தித்துறை வரையான மீனவர்கள் கடற்றொழில் உபகரணங்களை இழந்தனர்.

கடற்றொழில் உபகரணங்களை இழந்த வடமராட்சி கிழக்கைச் சேர்ந்த 29 மீனவர்களுக்கு உதவும் பொருட்டு புலம்பெயர் கொடையாளி ஒருவர் ஒரு லட்சத்து 30 ஆயிரம் ரூபாவை வழங்கியிருந்தார். அந்த நிதியிலிருந்து அரிசி, மா, பருப்பு, கடலை ஆகிய உலர் உணவுப் பொருள்களுடன் சவர்க்காரம், பனடோல் குளிசைகளும் பாதிக்கப்பட்ட 29 மீனவ குடும்பங்களுக்கு வழங்கப்பட்டன. மாகாண சபை உறுப்பினர் ச.சுகிர்தன் மருதங்கேணியில் உள்ள தமது அலுவலகத்தில்வைத்து இந்தப்பொருள்களை வழங்கினார். (த-173)

> “ ” கடற் கொந்தளிப்பால் முல்லைத்தீவு தொடக்கம் பருத்தித் துறை வரையான மீனவர்கள் கடற்றொழில் உபகரணங்களை இழந்தனர்.

## வாக்காளர் பெயர்ப் பட்டியல்; நேற்றுடன் பணிகள் முடிவு

கொழும்பு.ஜன 01

2013ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பெயர்ப்பட்டியல் நேற்று இறுதி செய்யப்பட்டுள்ளது. தேர்தல்கள் ஆணையகத்தின் பேச்சாளர் ஒருவர் இதனைத் தெரிவித்தார்.

இந்த நிலையில், இறுதி செய்யப்பட்ட வாக்காளர் பட்டியல் கிராம சேவையார்கள் மற்றும் சகல பிரதேச செயலாளர்களுக்கும் அனுப்பிவைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பொதுவாக ஒவ்வொரு வருடமும் வாக்காளர் பெயர்ப் பட்டியல் சீர்திருத்தப்படும் போது, புதிதாக சுமார் 3 லட்சம் பேர் வாக்காளர் பெயர் பட்டியலில் இணைக்கப்படுவார்கள்.

இந்த நிலையில் எதிர்வரும் காலத்தில் நடத்தப்படவுள்ள வாக்களிப்பின் போது, 2013 ஆம் ஆண்டின் வாக்காளர் பெயர்ப் பட்டியலே பயன்படுத்தப்படும்.

தற்போது கலைக்க எண்ணியுள்ள மேல் மற்றும் தென் மாகாண சபையின் வாக்களிப்பும் 2013 ஆம் ஆண்டு வாக்காளர் பெயர்ப் பட்டியலின் படியே இடம்பெறும் என்பது குறிப்பிடத்தக்கது. (த)


**வெளிநாட்டு பொதிகள் சேவையில் யாழ்ப்பாணத்தில் குறுகிய காலத்தில் முதலிடம் பதிக்க இருக்கும் ஒரே நிறுவனமான சொடோனி கூரியர் சேவை 2014 தொடக்கம் அதிரடி கட்டணக்கழிவை வழங்கத் தயாராகிவிட்டது அதன்படி கீழ்வரும் நாடுகளுக்கும் விலைகளை அதிரடியாகத் குறைத்து சிறந்த சேவையினை வழங்கத் காத்திருக்கின்றது**

| நாடு | 1Kg | 5Kg | 10 Kg |
|---|---|---|---|
| லண்டன் | 1100 | 4300 | 5500 மட்டுமே |
| ஜேர்மனி | 1200 | 5300 | 5500 மட்டுமே |
| பிரான்ஸ் | 1900 | 5750 | 7000 மட்டுமே |
| அவுஸ்திரேலியா | 1900 | 5750 | 5500 மட்டுமே |
| கனடா | 2300 | 7500 | 8500 மட்டுமே |
| சுவிஸ் | 2500 | 7000 | 9500 மட்டுமே |

★ நிபந்தனைகளுக்குட்பட்டது.

* எமது நிரந்தர மற்றும் புதிய வாடிக்கையாளர்களுக்கு மட்டுமே இவ் விலை குறைப்பு வழங்கப்படும்.
* உங்கள் வீடுகளுக்கே நேரடியாக நாம் வந்து பொதிகள் பெற்று வெளி நாடுகளில் உள்ள உங்கள் உறவினர்களின் வீடுகளுக்குச்சென்று வழங்குகின்றோம்.

Address:
Shedoni Courier Service, No.272, K.K.S. Road Jaffna
T.P : 021 2228591, 077 2666429



**ABI BABY MART (PVT) LTD**

**புதுவருட நல்வாழ்த்துக்கள்**

**தைப்பொங்கலை முன்னிட்டு மாபெரும் மலிவு விற்பனை (10 % - 40 %)**

**( Brown Road, கலட்டி சந்திக்கு அருகில்)**


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# 119 பட்டதாரிப் பயிலுநருக்கு நேற்று நிரந்தர நியமனக் கடிதம்

## தென்மராட்சி பிரதேச செயலகத்தில் இணைக்கப்பட்டவர்களுக்கு

யாழ்ப்பாணம்,ஜன.1

தென்மராட்சி பிரதேச செயலகத்தில் பட்டதாரிப் பயிலுநர்களாக இணைத்துக் கொள்ளப்பட்ட 119 பேருக்கான நிரந்தர நியமனக் கடிதங்கள் நேற்று வழங்கப்பட்டுள்ளன.

யாழ். மாவட்டத்திலுள்ள பட்டதாரிப் பயிலுநர்களுக்கான நிரந்தர நியமனக் கடிதங்கள் கடந்த டிசெம்பர் மாதம் 15 ஆம் திகதி யாழ்.மாவட்ட செயலகத்தில் வைத்து வழங்கப்பட்டன. இதன்போது யாழ். மாவட்டத்தில் 1, 083 பேருக்கு நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டன.

எனினும் தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த பட்டதாரிகளுக்கு நியமனக் கடிதங்கள் வழங்கப்படவில்லை.

இந்த நிலையில் தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த பட்டதாரிப் பயிலுநர்கள் நிரந்தர நியமனம் கிடைக்கப் பெறாததையிட்டு கடந்த 24 ஆம் திகதி செயலகத்துக்கு முன்னால் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நாடளாவிய ரீதியில் வேலையற்ற பட்டதாரிகள் அரச சேவையில் உள்ளீர்ப்புச் செய்யப்பட்டதன் அடிப்படையில் பட்டதாரிப் பயிலுநர்களாகக் கடமையாற்றி 18 மாதங்கள்



கடந்த நிலையில் நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டன. எனினும் தென்மராட்சிப் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த பட்டதாரிப் பயிலுநர்களுக்கு இரண்டு வார காலம் தாமதித்து நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளமை தொடர்பாக தென்மராட்சிப் பிரதேச செயலர் எஸ்.சாந்தசீலனுடன் தொடர்பு கொண்டு கேட்ட போது:

யாழ்.மாவட்ட செயலகத்தில் வைத்து அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், மேலதிக அரச அதிபர் ரூபினி வரதலிங்கம் ஆகியோர் 119 பேருக்கான நியமனக் கடிதங்களைக்கையளித்துள்ளனர். அவையே பட்டதாரிப் பயிலுநர்களுக்கு பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கப்பட்டுள்ளன - என்று தெரிவித்தார். (வ-14-5)

# ஏறுமுகத்தில் அரிசி விலை



அச்சுவேலி, ஜன.1

உள்ளூரில் அரிசி வகைகளின் விலை திடீரென அதிகரித்துள்ளது. தரமான அரிசிவகைக்கு தட்டுப்பாடும் நிலவுகிறது.

யாழ். குடாநாட்டில் நாட்டரிசி கிலோ ஒன்று 80 ரூபாவுக்கு மேல் 90 ரூபா வரையும், சம்பா அரிசி 65 ரூபாவுக்கு மேல் 80 ரூபா வரையும், உடையல் பச்சை அரிசி கிலோ ஒன்று 75 ரூபாவுக்கு மேலும் அரிசி ஆலைகளிலும் உள்ளூர் விற்பனை நிலையங்களிலும் விற்பனை செய்யப்படுகின்றன.

நாட்டரிசியில் மொட்டைக் கறுப்பன், பெரிய வெள்ளை, பச்சைப் பெருமாள் இன நெல்லரிசி வகைகள் பெற்றுக் கொள்ள முடியாத பொருள்களாக உள்ளன. ஆட்டக்காரி நெல்லரிசியே புழுங்கல் நாட்டரிசியாக விற்பனை செய்யப்படுகின்றது. கீரி சம்பா அரிசி ஒரு கிலோ 120 ரூபா வுக்கு மேல் விற்பனை செய் யப்படுகின்றது.

அரிசிக்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாட்டு விலை, நியாய விலை என்பன இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிட்டன.

தரக்குறைவான காலம் தப்பிய அரிசி வகைகள் சில நிறுவனமயப்படுத்தப்பட்ட விற்பனை நிலையங்களில் குறிப்பிட்ட விலையிலும் குறைவாக விற்பனை செய்யப்படுவதால் போட்டி போட்டுக் கொண்டு பொதுமக்கள் கொள்வனவு செய்வதையும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

உள்ளூர் நெல் முடிவடைந்த நிலையில் வெளி மாவட்டங்களில் இருந்து யாழ். மாவட்டத்துக்கு நெல்லைக் கூடிய விலை கொடுத்துக் கொள்வனவு செய்து ஏற்றி வருவதால் அரிசி விலை எதிர்காலத்தில் குறைவதற்கு இடமில்லை என்று உள்ளூர் அரிசி ஆலை உரிமையாளர்கள் கூறுகின்றனர்.

யாழ். மாவட்டத்தில் கால போக நெற் பயிர்ச் செய்கை பெருமளவில் பாதிப்படைந்திருப்பதால் உள்ளூர் நெல் விற்பனைக்கு சந்தர்ப்பம் இல்லை. மிகக் குறைந்த அளவில் உற்பத்தியாளர்களின் சுய தேவைக்கு மட்டும் போதுமானதாக இருக்கும் எனக் கூறப்படுகின்றது. (வ-11)

# மாதகலில் நாய்களுக்கு விலங்கு விசர் நோய் தடுப்பூசி



வலி.தென்மேற்கு, ஜன.1

மாதகல் பகுதியில் ஒரே நாளில் ஐவரைக் கடித்துக் குதறிய நாய் 'றெபீஸ்' என்னும் வைரஸ் நோய்த் தாக்கத்துக்குள்ளாகியிருந்தமை பரிசோதனை மூலம் தெரிய வந்துள்ளதைத் தொடர்ந்து, அந்தப் பகுதியிலுள்ள நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி ஏற்றுவதற்கான ஒழுங்குகளை சுகாதாரப் பரிசோதகர் மேற்கொண்டுள்ளார்.

கடந்த வாரம் ஒரே நாளில் ஐந்து பேரைக் கடித்துக் குதறிய வளர்ப்பு நாய் மறுநாள் இறந்துவிட்டது. இதையடுத்து இந்தச் சம்பவம் குறித்து விசாரணையை மேற் கொண்ட சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவைச் சேர்ந்த சுகாதாரப் பரிசோதகர்கள், புதைக்கப்பட்ட நாயின் தலையை வெட்டிப் பரிசோதனைக்காகக் கொழும்புக்கு அனுப்பி வைத்திருந்தனர்.

பரிசோதனை மூலம் மேற்படி நாய் 'றெபீஸ்' என்னும் வைரஸ் நோயினால் பீடிக்கப்பட் டிருந்தமை தெரிய வந்தது. அதையடுத்து, அந்தப் பகுதியிலுள்ள வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி ஏற்றுவதற்கான ஒழுங்குகளை சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி மேற் கொண்டுள்ளார். (வ-115)




வவுனியா ஈரற்பெரியகுளம் பகுதியில் நேற்றையதினம் ஆரம்பித்து வைக்கப்பட்ட வாராந்தச் சந்தையில் உடு புடைவைகள் வைக்கப்பட்டுள்ள பகுதி. (க-421)

# சமூகத்தின் முதுகெலும்பாக கல்வியே விளங்குகின்றது

## வட மாகாண சபை உறுப்பினர் அய்யூப் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன.1

"ஒரு சமூகத்தின் முதுகெலும்பாக, ஒரு சமூகத்தின் அச்சாணியாக, எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் சக்தியாக இருப்பது கல்வியே. போருக்குப் பின்னரான சூழலில் எமது மண்ணில் கல்வி மிக முக்கியத்துவமாகக் காணப்படுகின்றது" என்று வடமாகாண சபை உறுப்பினர் அஸ்மின் அய்யூப் தெரிவித்துள்ளார்.

யாழ்.ஒஸ்மானியாக் கல்லூரியின் பொன்விழா நிகழ்வு கடந்த சனிக்கிழமை கல்லூரியின் மஹ்மூத் மண்டபத்தில் இடம்பெற்றது. அங்கு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

"1990 இல் இடம்பெற்ற சில நடவடிக்கைகள் எமது வாழ்வின் எல்லாத் தளங்களையும் பாதித்தன. ஒஸ்மானியாக் கல்லூரியும் 1990 முதல் 2003 வரை இயங்காமலே இருந்தது.

2003 முதல் யாழ். ஒஸ்மானியாக் கல்லூரியின் வளர்ச்சிக்கான வழி திறக்கப்பட்டது.

கல்லூரியின் வளர்ச்சிப் பாதையின் ஒவ்வொரு தடத்திலும் பங்களிப்பு வழங்கியோருக்கு நன்றி கூற விரும்புகின்றேன்.


எமது எதிர்காலம் குறித்து சிந்திக்கின்றபோது அந்த இடத்தில் கல்வி முக்கியமாகின்றது. அது தனியே பாடசாலை சமூகத்தின் பங்களிப்போடு மட்டும் செயலாற்ற முடியாது. மாறாக யாழ்ப்பாண முஸ்லிம் சமூகத்தின் பங்களிப்போடு நடைபெற வேண்டும்.

> "_"
>
> எமது எதிர்காலம் குறித்து சிந்திக்கின்றபோது அந்த இடத்தில் கல்வி முக்கியமாகின்றது. அது தனியே பாடசாலை சமூகத்தின் பங்க ளிப்போடு மட்டும் செயலாற்ற முடியாது.

நாம் சமூகத் தீமைகளுக்கு எதிராக செயலாற்ற வேண்டும். அதற்காக ஒன்றுபட்டு செயலாற்ற வேண்டும். இந்தக் கல்லூரி இன நல்லுறவின் அடையாளமாக இருக்க வேண்டும்" -என்றார். (வ-10)

# புதுமுறிப்புக்கு அப்பாலும் மின்சாரத்தை வழங்கவும்

## கிராம மக்கள் இணைந்து கோரிக்கை



கிளிநொச்சி, ஜன.1

புதுமுறிப்புடன் நிறுத்தப்பட்டுள்ள மின்சாரவிநியோகத்தை புதுமுறிப்புக்கு அப்பாலுள்ள பின்தங்கிய பகுதிகளுக்கும் வழங்குமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி புதுமுறிப்புப் பகுதிக்கு மின்சார வசதி வழங்குவதற்கென மின் கம்பங்கள் நடப்பட்டு மின் வயர் இணைப்புக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இந்த நிலையில் புதுமுறிப்புப் பகுதிக்கு அப்பாலுள்ள மிகவும் பின்தங்கிய நிலையில் காணப்படும் கிராமங்களான ஊற்றுப்புலம், கோணாவில், யூனியன்குளம் ஆகியவற்றுக்கு மின்சார வசதியை வழங்குமாறு இந்தக் கிராமங்களைச் சேர்ந்த மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேலும் மேற்படி பின்தங்கிய கிராமங்களில் உள்ள பாடசாலைகளுக்கு கணினிகள், கணினி ஆய்வுகூடங்கள் என்பன வழங்கப்பட்டுள்ள போதிலும் மின்சார வசதி வழங்கப்படாததால் அவற்றைப் பயன் படுத்த முடியாத நிலை காணப்படுகின்றது.

எனவே இந்தப் பகுதிக்கு மின்சார வசதியை தாமதமின்றி வழங் குமாறு மக்கள் உரியவர்க ளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-426)

# முகமாலை வடக்கில் வீதிப் புனரமைப்பு

முகமாலை வடக்கு கிராமத்தின் பிரதான கிராமிய வீதி சுமார் 22 லட்சம் ரூபா செலவில் 'சோ ஆ' நிறுவனத்தினால் புனரமைக்கப்பட்டுள்ளது.

அண்மையில் மீளக்குடியமர்வு செய்யப்பட்ட முகமாலை வடக்கு கிராமத்தின் கிராமிய வீதி நீண்டகாலமாகப் புனரமைப்புக்கள் எவையும் இன்றிக் காணப்பட்டதால் இங்கு மீளக்குடியமர்ந்த குடும்பங்கள் சிரமங்களை எதிர் கொண்டு வந்தன.

இந்த நிலையில் இந்தக் கிராமத்தில் மீளக்குடியமர்ந்த குடும்பங்களின் வாழ்வாதாரம், உட்கட்டுமானப் பணிகள் ஆகியவற்றை முன்னெடுத்து வரும் 'சோ ஆ' நிறுவனம் 22 லட்சம் ரூபா செலவில் குறித்த வீதியை புனரமைத்துள்ளது.

இதனால் இந்த வீதியை பயன்படுத்தும் குடும்பங்கள் பெரிதும் நன்மையடைந்துள்ளன.

மேற்படி வீதி அண்மையில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் எஸ்.சத்தியசீலனால் திறந்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (க-6)

# கூடுதல் இசட் புள்ளி பெற்றும் பல்கலைக்கு தெரிவாகாத மாணவருக்கு புலமைப்பரிசில்

## உயர்கல்வி அமைச்சின் செயலர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன.1

அதிக அளவான இசட் புள்ளிகளைப் பெற்றுள்ள போதும், பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவாகாத மாணவர்களுக்கு வெளிநாட்டு புலமைப்பரிசில்கள் வழங்குவதற்கு உயர்கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளதாக அமைச்சின் செயலாளர் சுனில் ஜயந்த நவரத்ன தெரிவித்துள்ளார்.

இந்திய அரசால் இந்த முறை 180 மாணவர்களுக்கு புலமைப்பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. இதற்கு மருத்துவம் மற்றும் பல் மருத்துவத்துறை தவிர்ந்த ஏனைய மாணவர்கள் விண்ணப்பிக்க முடியும்.

இதற்கான விண்ணப்பப் படிவங்களை உயர்கல்வி அமைச்சின் இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ள முடியும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஒ-173)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயணிகளுக்குப் பயன்படாத கிளிநொச்சி பஸ்நிலையம்

கிளிநொச்சி, ஜன.1

கிளிநொச்சி பஸ் நிலையத்தில் பயணிகள் தங்கி நிற்பதற்கான கட்டட வசதிகள் இல்லாததால் பயணிகள் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் பிரதான பஸ் நிலையமாக கிளிநொச்சி பஸ்நிலையம் காணப்படுகின்றது. ஆனால் தற்போது கவனிப்பார் எவருமற்ற நிலையில் காணப்படுகின்றது.

இந்த பஸ் நிலையம் தற்போது கிளிநொச்சி பொதுச் சந்தைக்கு முன்பாக அமைந்துள்ளது. அந்தப் பகுதியில் உள்ள வீதிகளின் ஓரங்களில் இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்கள், தனியார் பஸ்கள் என்பன தரித்து நின்று பயணிகளை ஏற்றி இறக்கி வருகின்றன. ஆனால் பயணிகள் தரித்து நிற்பதற்கான கட்டடங்கள் எவையுமில்லாத நிலையே காணப்படுகின்றது. இதனால் பயணிகள் மழை காலத்தில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். மேலும் அருகிலுள்ள வர்த்தக நிலையங்களில் தஞ்சமடைய வேண்டிய அவலநிலையும் ஏற்படுகின்றது.

கிளிநொச்சி ரயில் நிலையமும் பஸ் நிலையத்துக்கு மிகவும் அருகிலேயே காணப்படுகின்றது. இதனால் வெளிமாவட்டப் பயணிகள் உள்ளூர்ப் பயணிகள் என பெருமளவு பயணிகள் இதனைப் பயன்படுத்தி வருகின்றனர். மேலும் மீள்குடியமர்வு இடம்பெற்று நான்கு ஆண்டுகள் கழிந்த நிலையிலும் கிளிநொச்சி மாவட்டத்தின் பிரதானமான நகரப் பகுதியில் வசதியானதொரு பஸ் நிலையம் அமைக்கப்படாமலுள்ளமை மக்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது. (க-426)

# மீனவர் பிரச்சினையைத் தீர்க்க எதிர்வரும் 20ஆம் திகதி பேச்சு

### மத்திய அரசிடம் 'ஜெ' பரிந்துரை



சென்னை, ஜன.1

தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையால் தாக்கப்படுவது மற்றும் கைது செய்யப்படுவது போன்றவற்றுக்கு முடிவுகாணும் வகையில் இரு நாட்டு மீனவர்களுக்கும் இடையே இந்த மாதம் 20ஆம் திகதி பேச்சு நடத்த வேண்டும் என்று இந்திய மத்திய அரசிடம் பரிந்துரைத்துள்ளார் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா.

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குக்கு எழுதியுள்ள கடிதத்திலேயே இவ்வாறு பரிந்துரைத்துள்ளார் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா.

> "..." பேச்சுக்களை இந்த மாதம் 20 ஆம் திகதி ஏற்பாடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பரிந்துரைக்கின்றேன்.

"இலங்கைச் சிறைகளில் உள்ள இந்திய மீனவர்கள் 256 பேரையும், அவர்களின் 81 படகுகளையும் மீட்பதற்கு தூதரகம் மூலம் நடவடிக்கைகளை இந்திய மத்திய அரசு எடுக்க வேண்டும் என்று வலியுறுத்துகின்றேன்.

மீனவர் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வு ஒன்றை எட்டும் முயற்சியாக இருநாட்டு மீனவர் பிரதிநிதிகளுக்கிடையே பேச்சு ஒன்றை இந்த மாதம் 20 ஆம் திகதி ஏற்பாடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பரிந்துரைக்கின்றேன். அதை ஏற்று குறித்த பேச்சுக்கான திகதி, அதில் பங்கேற்போரின் விவரங்கள் என்பவற்றை இந்திய மத்திய அரசு உத்தியோகபூர்வமாக அறிவிக்க வேண்டும்" என்று அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார் ஜெயலலிதா.

தமிழக முதலமைச்சரின் பரிந்துரையை இந்திய மத்திய அரசு ஏற்றுக் கொண்டுள்ளது என்று கூறப்படுகின்றது. ஓரிரு தினங்களில் பேச்சுக்கான உத்தியோகபூர்வ அறிவிப்பை மத்திய அரசு வெளியிடும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. (ற)



இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு சிறைகளில் அடைக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்களை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தி இந்தியப் பிரதமர் பிரதமர் மன்மோகன் சிங்கைச் சந்தித்து புதுச்சேரி மீனவர்கள் மனுவொன்றைக் கையளித்தனர்.




## வவுனியா மாவட்டத்தில் உப உணவுப் பயிர்ச்செய்கை

தற்போது நிலவும் வறட்சியான கால நிலை காரணமாக வவுனியாவில் உப உணவுப் பயிர்ச் செய்கை மேற்கொள்ளும் திட்டம் முன்னெடுக்கப் படவுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது. மழை பெய்யாததால் நெற் செய்கையாளர்கள் இங்கு பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். விவசாயம் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளதால் பஞ்ச நிலை ஏற்படுமென மக்கள் தெரிவிக்கின்றனர். இதனைத் தவிர்க்கும் முகமாக பிரதேச செயலர்கள் மேற்கொண்ட முயற்சிகளின் காரணமாக வவுனியா விவசாயத் திணைக்களத்தினர் உப உணவுப் பயிர்களைப் பயிரிடுவதற்கான உதவிகளைவழங்கமுன் வந்துள்ளனர். (க-421)

**A/L 2016**

கலை, வர்த்தக, தொழில்நுட்பப் பிரிவுகள் ஆரம்பம்: ஜனவரி 05. 9 மணி

**DCM**
**யாழ். நகர்**

**கணக்காளர் தேவை**

வவுனியாவில் உள்ள கடை ஒன்றுக்கு கணக்காளர் தேவை.

தொடர்பு: 024 222 6921, 078 2780569

**மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு**

BAF - XXXX இலக்க றோட் மாஸ்ரர் 200 CC விற்பனைக்குண்டு

தொடர்பு: 024 2226921, 078 2780569

**காணி விற்பனைக்கு**

மாவிட்டபுரம் அரசடி சந்தியில் (K.K.S. றோட்) 8 பரப்பு, காணி 5 பரப்பு காணி விற்பனைக் குண்டு

தொடர்பு: 077 6267029

## மரண அறிவித்தல்





**ஜோசப் இம்மானுவேல் (விஜயன்)**

**இக்னேசியா றோஸ்மலர் (றஞ்சிதம்)**

மாதகலைப்பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண் திருமதி ப. இக்னேசியா றோஸ் (றஞ்சிதம்) நேற்று (31.12.2013) இறைபதமடைந்துள்ளார்.

அன்னார் பர்ணபாஸ் திரவியராசாவின் அன்புமனைவியும் காலஞ்சென்றவர்களான சொர்ணா, குமார் ஜோசப், இம்மானுவேல், (விஜயன்), றூபா, நிசாந்தன் ஆகியோரின் பாசமிகு தாயும் யோகராசா, சுகிர்தா, கெலன் ஆகியோரின் மாமியும் தர்சிகா, றொசி, ஜெனுசன் ,குயிலினி, பிறின்ஸ்ரன், டல்சிகா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சவுந்தரநாயகம், துரைரட்ணம், குமாரி மற்றும் லீலா, நிர்மலா, யுஜேஸ், றாணி, பாலன், சீலன் ஆகியோரின் அன்புசசகோதரியும் ஆவார். அன்னார் அழகம்மாவின் மைத்துனியும் ஆவார். இவரது நல்லடக்க நிகழ்வும் கடந்த 8 ஆம் திகதி கட்டாறில் அகால மரணமடைந்த இவரது மகனான ஜோசப் இம்மானுவேல் (விஜயன்) அவர்களது நல்லடக்க நிகழ்வு நாளை பி.ப. (02.01.2014) 2 மணிக்கு மாதகல் புனித தோமையார் ஆலயத்தில் இடம்பெறும் திருப்பலியைத் தொடர்ந்து பூதவுடல் புனித தோமையார் ஆலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

கனால் வீதி, மாதகல்

தகவல்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### திருமதி இராசலட்சுமி சுந்தரலிங்கம்

(ஈஞ்சடி, சுதுமலை)



சுதுமலை கிழக்கு மானிப்பாயை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசலட்சுமி சுந்தரலிங்கம் நேற்று முன்தினம் (30.12.2013) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிஜயா - அழகம்மா தம்பதியரின் அன்புமகளும் காலஞ் சென்றவர்களான சின்னத்தம்பி - நல்லம்மா தம்பதியரின் மருமகளும் சுந்தரலிங்கம் (முன்னாள் கிளை முகாமையாளர், சுன்னாகம் பல நோக்கு கூட்டுறவு சங்கம்) அவர்களின் அன்புமனைவியும் யதீஸ்குமார் (லண்டன்), யாழினி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயும் பார்த்தீபன் (லண்டன்), தாட்சாயினி (லண்டன்) ஆகியோரின் அனபுமாமியும் துவாரகேஷ், அபிநயஸ்ரீ, பிரவீன் ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் காலஞ்சென்ற Dr.அருமைத்துரை மற்றம் சின்னத்தம்பி, சிவபாலன், சந்திரபாலன் காலஞ்சென்ற அன்னலட்சுமி ஆகியோரின் அன்புச்சகோதரியும் பத்மநாதன், கமலாதேவி, விமலாதேவி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.01.2014) வியாழக்கிழமை 11.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சுதுமலை கிழக்கு,
மானிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### திருமதி தங்கம்மா வைத்திலிங்கம்



புன்னாலைக்கட்டுவனைப் பிறப்பிடமாகவும், பன்னாலையை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் தங்கம்மா நேற்று (31.12.2013) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கம் - சின்னத்தங்கம் தம்பதியரின் மகளும் காலஞ் சென்றவர்களான கந்தசாமிப்பிள்ளை (பிள்ளையார்), ராசையா ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்ற வைத்தி லிங்கத்தின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்ற சிவலிங்கம், நவமணி, சிவராஜேஸ்வரி, அன்னலிங்கம், றஞ்சிதமலர், காசிலிங்கம் (அப்பன்), கனகலிங்கம் (ஞானம்), சத்தியாதேவி, சறோஜாதேவி, கணேசலிங்கம் (கண்ணன்), வசந்தாதேவி ஆகியோரின் பாசமிகு தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.01.2014) புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கீரிமலை செம்மண்வாய்க்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அளவெட்டி வடக்கு
T.P : 077 0496222, 021 300 6216

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள், பேரமக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





'பிரபஞ்சக் கல்வியும் பிணியற்ற வாழ்வும்' என்ற தொனிப்பொருளில் யோகாசனம், மற்றும் கலைநிகழ்வுகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது. யோகா ஆரண்ய குரு முதல்வர் ந.ஆறுமுகம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கமும், சிறப்பு விருந்தினராக பிரிட்டனில் இருந்து வருகை தந்துள்ள சிறியோகிராம் சுந்தரமும் , கௌரவ விருந்தினர்களாக வடமாகாண கல்வி அமைச்சின் பிரதிச் செயலாளர் ப.விக்னேஸ்வரன், தீவகக் கல்விப் பணிப்பாளர் ஜோன் குயின்ரன்ஸ் ஆகியோரும் கலந்து கொண்டனர். இதில் ஆரண்ய பிரசாதம் நூல் வெளியீடும் மாணவர்களின் கலை நிகழ்வுகளும் நடைபெற்றன. (வ-250)

## புகையிலை நாற்று விலையில் வீழ்ச்சி

**வடமராட்சியில்**

வடமராட்சி, ஜன.1

வலிகாமம், தீவகப் பிரதேசங்களைச் சேர்ந்த விவசாயிகள் புகையிலைப் பயிர்ச் செய்கையை மேற்கொள்வதற்காக வடமராட்சிப் பிரதேசத்தில் புகையிலை நாற்றுக்களை கொள்வனவு செய்து வருகின்றார்கள்.

புகையிலை நாற்று மேடைகள் அதிகமாக அமைக்கப்பட்டுள்ள திக்கம், மந்திகை ஆகிய இடங்களிலேயே இந்த விவசாயிகள் புகையிலை நாற்றுக்களை கொள்வனவு செய்து வருகின்றனர்.

இந்த முறை புகையிலைநாற்று விளைச்சல் அதிகரித்துள்ளதால் இதுவரை 4 ரூபாவாக விற்கப்பட்டுவந்த புகையிலை நாற்றொன்று 2 ரூபாவாக விலை குறைந்துள்ளது. (ஒ-173)

## பாடசாலைகள் நாளை ஆரம்பம்

அரச பாடசாலைகள் அனைத்தும் 2014 ஆம் ஆண்டுக்கான கற்றல் செயற்பாடுகளுக்காக நாளை ஆரம்பமாகவுள்ளன.

இதேவேளை ஜி.சீ.ஈ.சாதாரண தர பரீட்சை வினாத்தாள்கள் திருத்தும் பாடசாலைகள் எதிர்வரும் 8 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சால் அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 2 ஆம் திகதி புதிய கல்வியாண்டுக்காக பாடசாலைகள் மீள ஆரம்பிக்கப்படும் நிலையிலும் கூட ஒரு சில ஆரம்பப்பிரிவு மாணவர்களின் பெற்றோர் தமது பிள்ளைகளுக்கு தாம் விரும்பிய பாடசாலைகளில் அனுமதி கிடையாத நிலையில் அலைந்து திரியும் நிலைமையும் தொடர்ந்த வண்ணம் உள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (வ-86)

## மணல் விலையில் வீழ்ச்சி ஏற்படும்

*பாரவூர்திச் சங்கப் பிரதிநிதி தெரிவிப்பு*

வலி.வடக்கு, ஜன.1



யாழ்.மாவட்ட பாரவூர்தி உரிமையாளர்சங்கத்தினருக்கும் யாழ். மாவட்ட அரச அதிபருக்கும் இடையே நடைபெற்ற சந்திப்பின் அடிப்படையில் யாழ்.மாவட்டத்தில் விற்பனை செய்யப்பட்டு வரும் மணலின் விலையில் பெரும் வீழ்ச்சி ஏற்படலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்.மாவட்ட பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம் கடந்த இரண்டு ஆண்டுகளாக மணல் ஏற்றும் சேவையில் இருந்தும் புறக்கணிக்கப்பட்ட நிலையில் சுமார் இரு நூறுக்கும் மேற்பட்ட பாரவூர்திகள் தொழில் இழந்த நிலையில் காணப்படுகின்றன.

இது தொடர்பாக கடந்த மாதம் இடம்பெற்ற பாரவூர்தி உரிமையாளர் சங்கக் கூட்டத்தில் இவ்விடயம் குறித்து யாழ்.மாவட்ட அரச அதிபருடன் கலந்துரையாடுவதெனவும் தற்போதைய மணல் ஏற்றி இறக்க அறவிடப்படும் கட்டணத்திலும் பார்க்க குறைந்த கட்டணத்தில் சேவையை வழங்கத் தயாராக இருப்பதாகவும் முடிவு எட்டப்பட்டு யாழ். மாவட்ட அரச அதிபருக்கும் பாரவூர்தி சங்கத்தால் அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் யாழ்.மாவட்ட அரச அதிபருக்கும், யாழ். மாவட்ட பாரவூர்தி உரிமையாளர் சங்கத்தினருக்கும் இடையேயான சந்திப்பு ஒன்று நேற்றுமுன்தினம் யாழ். மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றுள்ளதாகவும் விரைவில் இதற்கான தீர்வைத் தருவதாக யாழ்.மாவட்ட அரச அதிபர் தெரிவித்துள்ளதாகவும் யாழ்.மாவட்ட பாரவூர்தி உரிமையாளர் சங்கத்தின் பிரதிநிதியொருவர் தெரிவித்தார். (வ-86)

## மாணவருக்கு உதவி

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் சமுர்த்திச் சங்கத்தால் பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கலும், பாதிப்படைந்த வீடுகளைத் திருத்த பயனாளிகளுக்கு நிதி உதவி வழங்கலும் நேற்றுமுன்தினம் இடம்பெற்றன.

வறுமை நிலையில் வாழும் 4 சமுர்த்தி பயனாளிகள் குடும்பங்களுக்கு தலா 75ஆயிரம்ரூபா வீதமும், பிரதேசத்தைச் சேர்ந்த சமுர்த்தி குடும்பங்களைச்சேர்ந்த 34 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன. (வ-9)

## விபத்தில் பாலகன் காயம்

மோட்டார் சைக்கிளினால் மோதுண்டு படுகாயமுற்ற நிலையில் பச்சிளம் பாலகன் ஒருவன் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்ட சம்பவம் ஒன்று நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது.

கந்தரோடை சங்கம்புலவு மயான வீதியில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை 6 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

எதிர் வீட்டில் விளையாடிய சிறுவன் தனது வீட்டுக்கு வருவதற்காக வீதியைக் கடக்க முற்பட்ட வேளையில் மோட்டார் சைக்கிளால் மோதுண்ட நிலையில் தலையில் காயத்துடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டான். மதியழகன் விதுஷ் (வயது-3) என்பவரே அந்தச் சிறுவனாவார். குறித்த விபத்து பற்றி சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (வ-86)

**காணி விற்பனைக்கு**

நாலுபக்கமும் ஆறு அடி உயரத்திற்கு சுற்றுமதில் கட்டப்பட்ட தென்னை மரங்கள் உள்ள இரண்டு பரப்புக்காணி இலக்கம் 608, மானிப்பாய் வீதியில், யாழ்ப்பாணம் மாநகர எல்லைக்கு உட்பட்ட பகுதியில் விரைவில் விற்பனைக்கு உள்ளது. விலை பரப்பு ரூபா ஐம்பது இலட்சம், கூடிய விலை கோருபவர்களுக்கு விற்பனை செய்யப்படும். தரகர்கள் வேண்டாம்.

தொடர்பு: 077 730 8354 அல்லது 492 7113

(சி/11125)(5.6.3)

**வீடு வாடகைக்கு**

சகல வசதிகளுடன் கூடிய 5 பரப்புக் காணி வீட்டுடன் வாடகைக்கு விடப்படும். நிறுவனங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். வாகனங்கள் விடவும் வசதியுண்டு.

தொடர்பு: 21,றக்கா லேன், கண்டுக்குளி,யாழ்ப்பாணம்.

தொ.பே.: 078 392 8256

(சி/10871) (5.6.3)

**வேலை வாய்ப்பு**

பணம் வசூலிப்பாளர்

மாதாந்தம் ரூபா 35,000/= தொடக்கம் ரூபா 40,000/= வரை சம்பாதிக்கலாம்.

விற்பனைப் பிரதிநிதி

அடிப்படை சம்பளம் ரூ 15000/= உம் தரகுக் கட்டணமும் உணவு, தங்குமிட வசதி இலவசம்

தொடர்பு:

சுஜித் என்ரபிறைசஸ்

(C/7621)(2.6.3)

டச்சு வீதி, சாவகச்சேரி.

(ஸ்ரீ பழனி ஆண்டவர் ஆலயத்துக்கு எதிரில்)

T.P. 021 227 0580

**வேலையாள் தேவை**

பிளைவூட் சற்றிங்/கம்பி கட்டுதலில் அனுபவம்மிக்க ஒருவர் உடனடியாகத் தேவை. நாளொன்று 1500/= வழங்கப்படும்.

T.P. : 077 906 3025 (41800) (7.6.3)


**பெயர்மாற்றம்**

நெடுந்தீவு மேற்கு, நெடுந்தீவு எனும் முகவரியைச் சேர்ந்த **சோமலிங்கம் ஏகாம்பரம்** ஆகிய நான் 30.12.2013 முதல் எனது பெயரை **சோமலிங்கம் லிங்கநாதன்** என பெயர்மாற்றம் செய்துள்ளேன் என்பதை அறியத்தருகின்றேன். இனிவரும் காலங்களில் இப்பெயரையே பாவிப்பேன் என்பதையும் அறியத்தருகின்றேன்.

நெடுந்தீவு. (41852) (5.6.3) சோமலிங்கம் லிங்கநாதன்

**கட்டட நிர்மாண வேலைகள்**

பொறியியலாளர் மேற்பார்வையில் சகல விதமான கட்டட நிர்மாண வேலைகளும் தரமாகவும், நியாயமான விலையிலும், துரிதமாகவும் செய்து கொள்வதற்கு.



தொடர்பு : நித்தி கொன்ஸ்ரக்சன்ஸ்

077 615 3563

(42773) (7.6.3)

After O/L or A/L

It's the time to make a career development!

aat SRI LANKA

2014 July BATCH (I)

ஆரம்பம் 04.01.2014 சனிக்கிழமை மாலை 1.00 மணி



Level 1 : Sat 1.00pm

Level 2 : Sat 1.00pm

Final Level : Sat 1.00pm

உங்களது தொழில்சார் துறைக்கான முதற் படியினை எமது அனுபவம் மிக்க விரிவுரையாளர்களுடன் ஆரம்பியுங்கள்

விஸ்டம்

Chief Management Committee,

Wisdom Technical College,

No 475 K.K.S Road Jaffna, (Close to Sivan Kovil),

Hello: 021-3207315, 0777-243184,

Email: aatwtc@gmail.com,

Fb:www.facebook.com/aat.wtc.jaffna, Twitter: twitter.com/aat_wtc.

CEYLON THEATRES

இப்பொழுது காண்பிக்கப்படுகிறது

MAJESTIC CINEPLEX AT Cargills SQUARE யாழ்ப்பாணம்

(Opposite Jaffna Teaching Hospital)

10.30am, 2.30pm, 6.30pm

குடும்பத்தோடு பார்க்கவேண்டிய யதார்த்த த்ரில்லர்

CEL வெளியீடு

JSK FILM CORPORATION J. SATISH KUMAR Presents

மதயானைக் கூட்டம்

www.facebook.com/CeylonTheatres Web: www.ceylontheatres.com

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

யா/மானிப்பாய் சோதி வேம்படி வித்தியாசாலையில் ஆசிரியராகக் கடமையாற்றி சண்டிலிப்பாய்க் கோட்ட ஆரம்பக்கல்வி ஆசிரிய ஆலோசகராகப் பதவி உயர்வு பெற்றுச் செல்லும்

செல்வி

செல்வகுமாரி சுப்பிரமணியம்

அவர்களைப் பாராட்டுவதுடன் மேலும் அவர்கள் பல பதவி உயர்வுகளைப் பெற்று கல்விப் புலத்திற்கு சேவையாற்ற வாழ்த்துகின்றோம்.



Best Wishes

பாடசாலைச் சமூகம்

(41851)(7.6.3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் பிரதேச சபை, கொக்குவில்
# பொது அறிவித்தல் - 2014

**01. படவரைஞராகப் பதிவு செய்தல் - 2014**

2014ஆம் ஆண்டு படவரைஞராகப் பதிவு செய்வதற்கு விரும்புவோரும் ஏற்கனவே எமது சபையில் பதிவு செய்துள்ளவர்களும் 2014ஆம் ஆண்டு ஜனவரி 31ஆம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளைச் செய்து கொள்ளவும் புதுப்பித்துக் கொள்ளவும் நல்லூர் உப அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**02. வியாபார உரிம அனுமதிப்பத்திரம் - 2014**

இப்பிரதேச எல்லைக்குள் வியாபாரம் செய்வோர், பொருள்களை விநியோகிப்போர் 2014ஆம் ஆண்டிற்கான அனுமதிப் பத்திரத்தைப் பெறுவதற்கான விண்ணப்பப்பத்திரத்தைத் தத்தமது பிரிவிற்குட்பட்ட உபஅலுவலகங்களில் பெற்று அதனைப் பூரணப்படுத்தி நல்லூர்/கொக்குவில் உப அலுவலகங்களில் சமர்ப்பிக்குமாறும் உரிய கட்டணங்களை 31.01.2014ஆம் திகதிக்குள் செலுத்தி உரிமத்தைப் பெற்றுக் கொள்ளுமாறும் கேட்டுக் கொள்கின்றேன்.

**03. வீடமைப்பு நகர சீர்திருத்தக் கட்டளைச் சட்டம் பிரிவு 268இன் பிரகாரமான அறிவித்தல்**

3.1 நல்லூர் பிரதேச சபையின் அனுமதியின்றி சபை எல்லைக்குள் அரச தனியார் கட்டடங்கள், மதில், மலசல கூடங்கள், கிணறுகள், குழாய்கிணறுகள் என்பவற்றை அமைத்தல் புதுப்பித்தல் வேலைகளைச் செய்தல் போன்றன சட்டத்தின் படி தண்டனைக்குரிய குற்றமென்பதை அறியத் தருகின்றேன்.

எனவே நல்லூர்ப் பிரதேசசபையால் விநியோகிக்கப்படும் படிவத்தின் மூலம் விண்ணப்பம் செய்து முன்னங்கீகாரம் பெறப்படாது கட்டப்படும் மேற்படி கட்டடங்கள் யாவும் எதுவித நட்ட ஈடும் வழங்கப்படாது சபையினால் அகற்றப்படும்.

3.2 ஏற்கனவே அனுமதி பெற்றவர்கள் கட்டடம் கட்டி முடிக்கப்படாத பட்சத்தில் அனுமதியைப் புதுப்பித்தல் வேண்டும்.

3.3 சபையின் அனுமதி பெற்றுக் கட்டடம் கட்டி முடித்தவர்கள் கட்டி முடிக்கப்பட்டமை தொடர்பாக அலுவலகத்திற்கு அறியத் தந்து உரிய அமைவுச் சான்றிதழைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

**04. துவிச்சக்கர வண்டி, மிருகங்களின் உரிமம் பெறல் - 2014**

2014 ஆம் ஆண்டிற்கான துவிச்சக்கர வண்டி , மிருகங்களுக்கான உரிமத்தை பங்குனி 31ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுச் சபையுடன் ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**05. நல்லூர்/கொக்குவில் உப அலுவலக ஆதன வரி அறிவித்தல் - 2014**

1987 ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் கீழ் உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி நடப்பு வருடம் அறவிடப்பட்ட ஆதன வரி வீதத்தின் பிரகாரம் 2014ஆம் ஆண்டுக்கான ஆதன வரி அறவிடப்பட வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. 2014ஆம் ஆண்டுக்கான ஆதன வரியை 31.01.2014ஆம் திகதிக்கு முன் செலுத்துவோருக்கு அவ்வருட மொத்த வரியில் 10% கழிவு வழங்கப்படும். ஒவ்வொரு காலாண்டுக்குமுரிய வரியை அந்தக் கந்தாயத்தின் முதல் மாத முடிவுக்குள் செலுத்துவோருக்கு காலாண்டு வரியில் 5% கழிவு வழங்கப்படும். குறிப்பிட்ட திகதிக்குள் ஆதனவரியை செலுத்தத்தவறின் வசிப்பிடங்களுக்கும் வெற்றுக் காணிகளுக்கும் முறையே 15% உம் ஏனைய ஆதனங்களுக்கு 20% உம் விறாந்துக் கட்டணமாக வரியுடன் சேர்த்து அறவிடப்படும். எனவே தங்கள் ஆதனங்களுக்குரிய வரியை 31.01.2014ஆம் திகதிக்கு முன் அந்தந்த உப அலுவலகங்களில் முழுமையாகச் செலுத்தி வரிக் கழிவுகளைப் பெற்று சபையுடன் ஒத்துழைக்குமாறு வரியிறுப்பாளர்களை அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன். மேலும் எமது சபை எல்லைக்குள் ஆதனங்களை கொள்வனவு செய்பவர்களும் ஏற்கனவே கொள்வனவு செய்து சோலை வரி பெயர் மாற்றத்தினை மேற்கொள்ளாதவர்களும் எமது உபஅலுவலகங்களுடன் தொடர்பு கொண்டு பெயர் மாற்றத்தினை மேற்கொள்ளுமாறும் கேட்டுக்கொள்கின்றேன்.

**06. சூழல் பாதுகாப்பு உரிமம் (EPL) - 2014**

மத்திய சூழல் அதிகாரசபைத் தலைவர் 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சூழல் பாதுகாப்புச்சட்டத்தின் 26 ஆம் பிரிவின் கீழ் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு எனக்கு வழங்கப்பட்ட குறிக்கப்பட்ட அதிகாரங்களின் கீழ் நல்லூர் பிரதேசசபையின் நிர்வாகப்பாதுகாப்பு பிரதேசத்தில் 1533/16 ஆம் இலக்க 2008.01.25 ஆம் திகதிய மற்றும் 1534/18 இலக்க 2008.02.01 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகைகளில் விதந்துரைக்கப்பட்ட தொழில் நடவடிக்கைகளுக்கு அமைவாக மேற்குறிப்பிட்ட அறிவித்தலுக்கு இணங்க வியாபாரத்தை/தொழிலை நடத்துகின்ற உரிமையாளர்களுக்கு சூழல் பாதுகாப்பு உரிமம் வழங்கவேண்டிய பொறுப்பு எனக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆகவே சம்பந்தப்பட்டவர்கள் நல்லூர் பிரதேசசபையின் தலைமைப்பணிமனையுடன் தொடர்புகொண்டு சூழ் பாதுகாப்பு உரிமத்தைப் பெற உரிய நடவடிக்கை எடுக்கவும் இவ்வாறு உரிமம் பெறாத எவரும் 2014 ஆம் ஆண்டு மேற்குறிப்பிட்ட தொழில்களை நடத்த அனுமதிக்கப்படமாட்டார்கள் என்பதனையும் இத்தால் அறியத்தருகின்றேன். விதந்துரைக்கப்பட்ட தொழில் முயற்சிகள் பற்றிய விவரங்கள் அடங்கிய வர்த்தகமானி அறிவித்தல்கள் தலைமை அலுவலகத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

**07.விளம்பரங்களை அமைத்தல்/காட்சிப்படுத்தல்**

எமது சபையின் நிர்வாக எல்லைக்குட்பட்ட பொது வீதிகளின் இருமருங்களிலும் மற்றும் ஏனைய இடங்களிலும் அத்துடன் வர்த்தக நிலையங்களின் முகப்புக்களிலும் பொருத்தப்படும், காட்சிப்படுத்தப்படும் விளம்பரங்களுக்காக 31.01.2014 ஆம் திகதிக்கு முன்னர் உரிய கட்டணங்களைச்செலுத்தி சபையின் அனுமதியைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன் அவ்வாறு அனுமதி பெறப்படாத முகவர்கள்/வர்த்தக நிலைய உரிமையாளர்கள் நிறுவனங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு சகல விளம்பரங்களும் 01.02.2014 இக்குப் பின்னர் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

**08. பொதுச்சந்தைகள், இறைச்சிக்கடைகளுக்கு அண்மித்த பகுதியில் வைத்து கடலுணவுகள், மரக்கறிகள், இறைச்சி, உயிர்க்கோழிகள் விற்பனையை தடைசெய்தல்**

நல்லூர் பிரதேசசபையின் பொதுச்சந்தைகள் இறைச்சிக்கடைகள் அமைந்துள்ள பகுதிகளில் 500 மீற்றர் வரையான சுற்றாடலில் மரக்கறிகள் கடலுணவுகள் இறைச்சிவகைகள் உயிர்க் கோழிகள் என்பன வர்த்தக நிலையங்களிலோ வீதியோரங்களிலோ விற்பனை செய்தல் முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது. இதனை மீறுபவர்கள் மீது சபையால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

**09. வீதி ஒழுங்கைப்பேணல்**

திருநெல்வேலி சந்தைப்பகுதியில் அதிகரித்த போக்குவரத்து காரணமாக விபத்துக்களை தவிர்த்துக்கொள்ளும் முகமாக வியாபார நிலையங்களிற்கு முன்னால் பொருள்களை வெளியே வைத்து விற்பனை செய்வது தடை செய்யப்பட்டுள்ளது. அவற்றை அனுசரித்து நடக்குமாறு வர்த்தக நிலைய உரிமையாளர்களுக்கு அறியத்தருகின்றேன்.

**10. பொது இடங்களில் கழிவுகள் போடுதல்**

நல்லூர் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் கழிவுப்பொருள்களை அனுமதியின்றி கொண்டு செல்லல். கொட்டுதல் ஆகியன பொது சுகாதாரத்தை கருத்திற்கொண்டு தடை செய்யப்பட்டுள்ளது. தவறின் பிரதேச சபை கட்டளைச்சட்டம் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்புச்சட்டம் போன்றவற்றின் பிரகாரம் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

**11. தரகர் முறை நீக்கம்**

எமது பிரதேச சபை எல்லைக்குட்பட்ட சந்தைகளில் தரகர் மூலமான நடைமுறை முற்றாகத்தடை செய்யப்பட்டுள்ளது. அவற்றை அனுசரித்து நடக்குமாறு சந்தைக்குத்தகையாளர் வேண்டப்படுகின்றனர்.

**12. பொது இடங்களிலும் வர்த்தக நிலையங்கள் முன்பாகவும், வீதியோரங்களிலும் கழிவுகளை போடுதல் தடைசெய்யப்பட்டுள்ளது.**

சபையின் எல்லைக்குட்பட்ட பொது இடங்களிலும் வர்த்தக நிலையங்கள் முன்பாகவும் வீதியோரங்களிலும் கழிவுப்பொருள்களை போடுதல் தடைசெய்யப்பட்டுள்ளது. பொதுமக்கள் வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள் கொள்கலனில் கழிவுப்பொருள்களை சேகரித்து அதனை அகற்றுவதற்கு எமது சபையின் தலைமை அலுவலகத்தில் உரிய கட்டணத்தினை செலுத்தி சுற்றச்சூழல் பாதுகாப்பிற்கு ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**13. பொது சுகாதாரம் பேணுதல்**

சபை எல்லைக்குள் அபிவிருத்தி செய்யப்படாமலும் பற்றைகள் வளர்ந்தும் பொது சுகாதாரத்திற்கு இடையூறாக உள்ள காணி உரிமையாளர்கள் பற்றைகளை துப்புரவுசெய்து பொது சுகாதாரத்தினை பேணுவதற்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும். தவறுவோர் மீது [illegible]

நல்லூர் பிரதேசசபை,
கொக்குவில்.

(f.10875) (45.7.3.6)

ப. வசந்தகுமார் - தவிசாளர்,
நல்லூர் பிரதேசசபை.

## இயற்கை வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வார் இயற்கையெய்தினார்



தஞ்சாவூர், ஜன.1

இயற்கை வேளாண் விஞ்ஞானி கோ.நம்மாழ்வார் உடல்நலக் குறைவு காரணமாக நேற்றுமுன்தினம் இரவு காலமானார்.

விவசாயிகளிடையே இயற்கை வேளாண்மை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தி வந்த கோ.நம்மாழ்வார், மீதேன் வாயுத் திட்டத்தை எதிர்த்து போராட்டம் நடத்தி வந்தார்.

இந்தநிலையில் நம்மாழ்வாருக்கு நேற்று முன்தினம் இரவு திடீரென மூச்சு திணறல் ஏற்பட்டது. அதையடுத்து அன்றிரவு சுமார் 9.30 மணியளவில் சாவடைந்தார். (ற)

## பதவி விலகுகின்றாரா பிரதமர் மன்மோகன்?

புதுடில்லி, ஜன.1

பிரதமர் பதவியில் இருந்து மன்மோகன் சிங் விலகவுள்ளார் என்று வெளியாகியுள்ள தகவல்களால் புதுடில்லி அரசியல் வட்டாரத்தில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு மத்தியில் ஆட்சி நடத்தி வருகிறது. பிரதமராக மன்மோகன் சிங் பதவி வகிக்கின்றார்.

இந்தநிலையில் "நாளை மறுதினம் பிரதமர் மன்மோகன் சிங் செய்தியாளர்களை சந்திக்கவுள்ளார். அப்போது காங்கிரஸ் கட்சியின் பிரதமர் வேட்பாளராக ராகுல் காந்தியை முன்னிறுத்தும் விதமாக தனது பதவி விலகல் குறித்து அறிவிப்பை வெளியிடுவார்" என்று தகவல் வெளியாகியுள்ளது. அதனால் டில்லி அரசியல் வட்டாரங்களில் பரபரப்பு ஏற்பட் டுள்ளது.

அதேவேளை, பிரதமர் பதவி விலகல் குறித்து வெளியான தகவலை பிரதமர் அலுவலகம் மறுத்துள்ளது. நாடாளுமன்ற தேர்தலுக்கு முன்னர் பிரதமர் பதவி விலக மாட்டார் என்றும் பிரதமர் அலுவலகம் கூறியுள்ளது. எனினும் ராகுல் காந்தியை பிரதமர் வேட்பாளராக முன்னிறுத்துவதற்கான அறிவிப்பு நிகழ்ச்சி ஒன்றை மன்மோகன் சிங் விரைவில் ஏற்பாடு செய்வார் என்று கூறப்படுகின்றது. (ற)

## ராகுலை எதிர்த்துப் போட்டி

*ஆம் ஆத்மி கட்சியைச் சேர்ந்த குமார் விஸ்வாஸ் தெரிவிப்பு*

புதுடில்லி, ஜன.1

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர் ராகுல் காந்தி எந்தத் தொகுதியில் போட்டியிட்டாலும் அவரை எதிர்த்துக் களமிறங்குவேன் என்று தெரிவித்துள்ளார் ஆம் ஆத்மி கட்சியின் முக்கிய தலைவர்களில் ஒருவரான குமார் விஸ்வாஸ்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

"கடந்த 10 ஆண்டுகளாக நாடாளுமன்ற உறுப்பினராக பதவி வகிக்கும் ராகுல் காந்தியால் அந்தத் தொகுதி மக்களுக்கு எந்த நன்மையும் ஏற்படவில்லை. ராகுலை பதவியில் இருந்து துரத்துவதே எமது இலக்கு. அவர் எந்தத் தொகுதியில் போட்டியிட்டாலும் அவரை எதிர்த்து நான் களமிறங்குவேன். காங்கிரஸ் கட்சியை வீட்டுக்கு அனுப்புவோம்" என்று தெரிவித்துள்ளார். (ற)

## பிறந்த நாள் வாழ்த்து



Congratulations

**தியாகேந்திரன் அர்ஜீனா**

மக்கள் சேவையில் மகிழ்ச்சியடையும்
திரு. வாமதேவா தியாகேந்திரன் " தியாகி "
அவர்களின் புதல்வன் அர்ஜீனா
சுவிஸ் நாட்டினைப் பிறப்பிடமாகக் கொண்டாலும்
அவர் தம் தந்தை வழியில் தனித்துவமாக
செயற்பட்டு வருகின்றார்.
இன்று (01.01.2014) புதன்கிழமை தனது 28 ஆவது
அகவையைக் கொண்டாடும் அவரை பல காலம்
பல்லாண்டு வாழ இந் நன்னாளில் மனமார
வாழ்த்துகின்றோம்.

Congratulations

**தியாகி அறக்கொடை நிறுவனத்தினர்.**

இல. 527 நாவலர் வீதி, நல்லூர் யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜப்பானில் நிலநடுக்கம்



ரோக்கியோ, ஜன.1
ஜப்பான் நாட்டின் கிழக்குப் பகுதியில் நேற்றுக்காலை 5.4 ரிச்டர் அளவிலான நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

தலைநகர் டோக்கியோவிலிருந்து 160 கி.மீ வடகிழக்கேயும், செயற்படாது இருக்கும் புகுஷிமா அணுஉலையிலிருந்து 80 கி.மீ தென் மேற்கேயும் உள்ள இபராகி பகுதியேலேயே இந்த பூகம்பம் மையம் கொண்டிருந்தது என்று கூறப்படுகின்றது.

10 கி.மீ ஆழம் வரை உணரப்பட்ட இந்த நிலநடுக்கத்தைத் தொடர்ந்து எட்டு நிமிடங்கள் கழித்து 3.6 ரிச்டர் அளவிலான அதிர்வு ஒன்றும் அதே பகுதியில் ஏற்பட்டது என்று கூறப்படுகின்றது. முதலில் தோன்றிய நிலநடுக்கத்தின் தாக்கத்தில் தலைநகர் ரோக்கியோவில் உள்ள உயரமான கட்டிடங்கள் குலுங்கின. (ற)

# தீப்பற்றியெரிகிறது எண்ணெய் ரயில்

*ஆயிரக்கணக்கான மக்கள் வெளியேற்றம்: அமெரிக்காவில் சம்பவம்*

டகோடா, ஜன.1
அமெரிக்காவின் வடக்கு டகோடா மாகாணம் கேசெல்டன் என்னுமிடத்தில் கச்சா எண்ணெய் ஏற்றிவந்த ரயில் தடம்புரண்டு தீப்பற்றியதை அடுத்து அந்தப் பகுதியில் உள்ள ஆயிரக்கணக்கான மக்கள் வெளியேற்றப்பட்டு வருகின்றனர்.

எதிரே வந்த மற்றொரு சரக்கு ரயிலுடன் மோதியதை அடுத்து எண்ணெய் ஏற்றி வந்த ரயில் தடம்புரண்டுள்ளது.


மிகப்பெரிய சத்தத்துடன் வெடித்து சிதறிய இந்த பெட்டிகளிலிருந்து தீப்பிழம்புகள் எழுந்தன. அதனால் ஆகாயத்தில் பல மைல் தூரத்திற்குக் கரும்புகை பரவியது. சம்பவ இடத்திற்கு வந்த தீயணைப்புப் படையினர் 50 பெட்டிகளின் இணைப்பைத் துண்டித்தனர். இருந்தும் 56 பெட்டிகள் தீயில் சிக்கின. இந்த விபத்தில் யாருக்கும் காயம் ஏற்படவில்லை என்று கூறப்படுகிறது.

புகையால் மக்கள் பாதிக்கப்படாத வண்ணம் அருகிலுள்ள கேசெல்டன் நகரிலிருந்து 2, 300 பேர் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக வெளியேற்றப்பட்டுள்ளனர். 10 மைல் தூரத்தில் உள்ள மக்கள் கரும்புகையின் பாதிப்பிலிருந்து எச்சரிக்கையாக இருக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். (ற)



# ரஷ்ய குண்டு வெடிப்பு கோழைத்தனமானது

*கனடா கடும் கண்டனம்*



தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் மக்கள்

ரொறன்றோ, ஜன.1
ரஷ்யாவில் அண்மையில் நடந்த தொடர் குண்டு வெடிப்புத் தாக்குதல்கள் கோழைத் தனமானவை என்று கடும் கண்டனம் தெரிவித்துள்ளது கனடா.

ரஷ்யாவில் கடந்த 29ஆம் திகதி நடந்த தற்கொலைக் குண்டுத் தாக்குதல் சம்பவத்தில் 17 பேர் உயிரிழந்தனர். நேற்று முன்தினம் நடந்த தற்கொலைக் குண்டுத் தாக்குதலிலும் 17 பேர் வரையில் உயிரிழந்தனர்.

இந்தத் தாக்குதல்கள் குறித்துக் கடும் கண்டனம் வெளியிட்டுள்ள கனடாவின் வெளிவிவகாரத்துறை அமைச்சர் ஜோன் பெயர்ட், "ரஷ்யாவில் நிகழ்ந்த கொடூர சம்பவங்கள் அப்பாவி மக்களின் உயிரைப் பறித்தது மட்டுமல்லாமல், கோழைத்தனத்தையும் வெளிப்படுத்துகிறது" என்று தெரிவித்துள்ளார்.

குளிர்கால ஒலிம்பிக் போட்டிகளை இம்முறை ரஷ்யா நடத்தவுள்ளது. அதற்கு இன்னமும் 40 நாள்கள் மட்டுமே உள்ள நிலையில் குளிர்கால ஒலிம்பிக் போட்டி களைச் சீர்குலைக்கும் நோக்குடனேயே இவ்வாறான தாக்குதல்கள் மேற்கொள்ளப் படுகின்றன என்று கூறப்படுகின்றது. (ற)

## ஷூமேக்கர் உடல்நிலையில் முன்னேற்றம் இல்லை

பாரிஸ், ஜன.1
பிரான்ஸின் அல்ப்ஸ் மலையில் நடந்த பனிச் சறுக்கு விளையாட்டின்போது தலையில் படுகாயமடைந்து 'கோமா' நிலையில் உள்ள கார்ப்பந்தய வீரர் ஷூமேக்கரின் உடல் நிலையில் முன்னேற்றம் இல்லை என்று கூறப்படுகின்றது.

அவரது தலையில் சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும், தற்போது அவரின் உடல்நிலை குறித்து நம்பிக்கை தெரிவிக்க முடியாதுள்ளது என்றும் மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

'போர்முலா வன்' கார் பந்தயத்தில் 7 முறை சம்பியன் பட்டம் வென்றுள்ள ஷூமேக்கர், கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்த பனிச்சறுக்கு விளையாட்டின் போது மலையில் இருந்த பாறையில் தலை மோதியதில் படுகாயம் அடைந்தார். நினைவிழந்த நிலையில், மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட ஷூமேக்கருக்கு உடனடியாக தலையில் அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்ட போதும் அவர் தற்போதும் 'கோமா' நிலையிலேயே உள்ளார். (ற)

# அமைதியைக் கெடுப்பது அமெரிக்காவேதான்

*ஆய்வொன்றின் முடிவு கூறுகின்றது*

லண்டன், ஜன.1
உலக அமைதிக்கு மிகப் பெரிய அச்சுறுத்தலாக இருப்பது அமெரிக்காதான் என்று உலக மக்களில் கால் பங்கினர் கருதுகின்றனர் என்று சர்வதேச ஆய்வு கூறுகின்றது.

'வின்-கேலப் இண்ரர்நேஷனல்' என்ற அமைப்பால் நடத்தப்பட்ட இந்த ஆய்வு 65 நாடுகளில் சுமார் 67 ஆயிரம் மக்களிடம் கருத்துக்களைக் கேட்டறியப்பட்டிருந்தன. அதன் முடிவுகளின்படி பெரும்பாலான மக்கள் அமைதிக் கெடுப்பது அமெரிக்காதான் என்று கருத்துத் தெரிவித்துள்ளனர். அதேவேளை, குடியேறி வாழ்வதற்குச் சிறந்த இடமாக அமெரிக்காவையே பெரும்பாலானோர் பரிந்துரைத்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஆய்வில் பங்கெடுத்துக் கொண்டோரில் ஏறக்குறைய பாதிப் பேர் 2014ஆம் ஆண்டு 2013 ஆம் ஆண்டை விடவும் நன்றாக இருக்கும் என்று நம்பிக்கை வெளியிட்டுள்ளனர். உலகில் அரசியல்வாதிகள் பெரும்பாலோர் பெண்களாக இருந்தால் உலகம் இன்னமும் மேம்பட்டதாக இருக்கும் என்று மூன்றில் ஒரு பங்குக்கும் மேற்பட்டோர் கருத்துத் தெரிவித்துள்ளனர். (ற)

சாதாரணதரப் பரீட்சையின் (G.C.E.O/L) பின் உயர்கல்வியை இலகுவாக தொடரக்கூடிய கணினிக்கல்வியை உங்களுக்காக நாம் தருகின்றோம்



National vocational Qualification (NVQ) அங்கீகாரம் பெற்ற கணினிக் கற்கை நெறிகளைப் பயில்வதற்கு இன்றே எம்மிடம் வாருங்கள்...

தற்போது நேர்முகத் தேர்வுகளில் NVQ பாடநெறிகள் மட்டுமே கவனத்தில் எடுக்கப்படுகிறது.

* Foundation Information Technology
* Diploma in Information Technology
* Higher Diploma in Information Technology
* Diploma in Computer Application

இன்னும் உங்கள் கணினி அறிவுத் தேவைகளுக்கேற்ப பல பாடநெறிகள்
எதற்காக SKYLINE ITC யைத் தெரிவு செய்ய வேண்டும்.
- NVQ அங்கீகாரம் பெற்ற கணினி பாடநெறிகளை கற்பிக்கும் நிறுவனம்.
- மூன்றாம் நிலை தொழிற்கல்வி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் (TVEC)
- Sarvothaya Fusion னினால் வடபகுதிக்காக தெரிவு செய்யப்பட்ட ஒரே ஒரு நிறுவனம்.
- ஒரு பாடநெறிக் கட்டணத்துடன் பல பாடநெறிகளை இலவசமாக கற்கலாம்.
- வறுமைக்கோட்டில் உள்ள மாணவருக்கு இலவசம்.
- சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்.

ஏன் NVQ பாட நெறிகளைத் தொடரவேண்டும்...
- கல்வி அமைச்சு, இளைஞர் திறன்விருத்தி அமைச்சுடன் இணைந்து நடத்தும் பாடநெறி.
- மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்றது.
- அரச தொழில் நேர்முகத் தேர்வில் NVQ பாடநெறிகள் மட்டுமே கவனத்தில் எடுக்கப்படும்.
- சாதாரணதர, உயர்தர பரீட்சையில் சித்தியடையத் தவறியவர்களும் கணினித்துறையில் பட்டப் படிப்பைப் பெற்றுக்கொள்வதற்கு இலகுவான வழி.

Note : A/Lஇல் விஞ்ஞானப் பிரிவில் கல்வி கற்ற மாணவர்களுக்கு ரஷ்யா பல்கலைக் கழகத்தில் நேரடித் தொடர்புகளை ஏற்படுத்தி குறைந்த கட்டணத்தில் மருத்துவக் கல்வி கற்பதற்கு வசதி செய்து கொடுக்கப்படும்.

SKYLINE ITC
Your search ends here.

புதிய பிரிவுகள் ஆரம்பம்
பிரிவு I 01.01.2014 புதன்கிழமை
காலை 9.00 மணி
பிரிவு II 02.01.2014 வியாழக்கிழமை
காலை 9.00 மணி

Ponnalai Road, Siththankeny.
Telephone : 021 225 0078, 077 952 7575

(அ/10885) (7.6.3)

# எதிர்க்கட்சியினர் கைது; பங்களாதேஷில் பதற்றம்



டாக்கா, ஜன.1
பங்களாதேஷில் அரசுக்கு எதிராகப் போராட்டங்களை நடத்திவரும் முக்கிய எதிர்க் கட்சிகளின் பெண் தலைவர்கள் மூவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டதை அடுத்து அங்கு பெரும் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

இம்மாதம் 5 ஆம் திகதி பொதுத் தேர்தலை நடத்த வுள்ளதாக அந்த நாட்டு அரசு அறிவித்திருந்தது. அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே எதிர்க்கட்சிகள் போராட்டங்களை நடத்தி வருகின்றன.

இந்தநிலையில் நேற்றுமுன்தினம் அரச எதிர்ப்புப் போராட்டத்துக்கு எதிர்க்கட்சிகள் அழைப்பு விடுத்திருந்தன. தலைநகர் டாக்காவில் எந்நேரமும் வன் முறைகள் வெடிக்கலாம் என்ற சூழ்நிலை நிலவியதால் எதிர்க் கட்சிகளின் முக்கிய தலைவர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

அதையடுத்து அங்கு பெரும் போராட்டங்கள் வெடித்துள்ளன. எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த தலைவர்கள் கைது செய்யப்பட்டு வருவதால் பெரும்பாலானோர் தலைமறைவாகியுள்ளனர் என்று கூறப்படுகின்றது.

அதேவேளை, 200 இடங்களில் மேற்கொள்ளப்பட்ட அதிரடிச் சோதனைகளில் 500க்கும் மேற்பட்ட வெடிபொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று அந்த நாட்டுப் பொலிஸார் கூறுகின்றனர். (ற)

# பொதுஇடத்தில் புகைபிடிக்க சீனாவில் தடை விதிப்பு

பீஜிங், ஜன.1
சீனாவில் பொது இடங்களில் புகைபிடிப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

உலகில் அதிக மக்கள் தொகையைக் கொண்ட நாடு என்பதில் மட்டுமல்லாது புகை பிடிப்பதிலும் சீனா முதலிடம் வகிக்கின்றது. சீனாவின் மொத்த மக்கள் தொகை 135 கோடி. அதில் 30 கோடி பேர் புகைபிடிக்கிறார்கள்.

அதனால் ஆண்டுதோறும் புற்றுநோயினால் இறப்பவர்களின் எண்ணிக்கை 14 லட்சமாக அதிகரித்துள்ளது. அதையடுத்து அரசு அலுவலகங்களில் புகையிலை தொடர்பான விளம்பரங்கள் மற்றும் விற்பனை முற்றிலும் தடை செய்யப்பட்டது.

அதனைத் தொடர்ந்து பள்ளிகள், விளையாட்டு அரங்காங்கள், மருத்துவமனைகள் போன்ற பொது இடங்களில் அரசு ஊழியர்கள் பணியிலிருக்கும் போது புகைப் பிடிக்க தடை விதிக்கப்பட்டது.

தற்போது பொது இடங்களில் புகைப்பிடிப்பதால் மக்களுக்கு சுகாதார சீர்கேடு நேரும், உடல் நிலை பாதிக்கப்படும் என்பதால் பொது இடங்களில் புகைப் பிடிப்பது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது என்று சீன அரசின் அதிகாரபூர்வ நாளிதழ் தகவல் வெளியிட்டுள்ளது. (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொத்து மோசடி செய்ய முயன்ற 27 வயதுடைய பெண் கைது

கொழும்பில் 52 வயதில் உயிரிழந்த கணவரின் சொத்துகளை போலி ஆவணங்கள் மூலம் தனதாக்கிக் கொள்ள முயன்ற 27 வயதுடைய இளம் விதவையொருவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பல கோடி ரூபா பெறுமதியான வீடு, காணி மற்றும் பணம் போன்றவற்றை கணவரின் இறுதி விருப்பம் எனக் கூறி தன் பெயருக்கு மாற்றும் நோக்கில் இந்த போலி ஆவணங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

இந்த மோசடி நடவடிக்கைக்கு கொழும்பிலுள்ள பிரபல விகாரையொன்றின் விகாராதிபதியான தேரர் ஒருவரும் குறித்த பெண்ணின் தாயாருமே உதவி புரிந்துள்ளனர்.

இதனால், அவ்விருவரையும் போலி ஆவணங்களைத் தயாரித்த வழக்கறிஞர் ஒருவரையும் கைது செய்ய பொலிஸார் நடவடிக்கை எடுத் துள்ளனர்.

தனது 57 வயதுடைய சகோதரர் உயிரிழந்ததன் பின்னர் சொத்துகளை 27 வயதுடைய அவரது இரண்டாவது மனைவி, இறுதி விருப்பம் என்ற போலி ஆவணத்தின் மூலம் உரிமை கொண்டாட நடவடிக்கை எடுத்துள்ளார் என்று உயிரிழந்த நபரின் சகோதரர் ஒருவர் கடவத்தை, மஹர பொலிஸில் முறைப் பாடு செய்திருந்தார்.

கொழும்பிலுள்ள மாடிவீடொன்று, வேயங்கொடையில் அமைந்துள்ள வர்த்தக நிலையங்கள் இரண்டு, 50 இலட்சம் ரூபா முதலீடு மற்றும் பங்குச் சந்தையிலுள்ள 5 இலட்சம் ரூபா பணம் ஆகியவற்றையே குறித்த பெண் மோசடி செய்ய முற்பட்டுள்ளார்.

# 2013 இல் 190 யானைகள் இறப்பு; தாக்குதலில் 60 மனிதர்களும் சாவு

கொழும்பு.ஜன.1

2013. இல் காட்டு யானைகளின் தாக்குதல்களினால் 60 பேர் உயிரிழந்துள்ளனர் என்றும் மனிதர்களின் செயற்பாடுகளினால் 190 யானைகள் இறந்துள்ளன என்றும் வன ஜீவராசிகள் திணைக்களம் தகவல் வெளியிட்டுள்ளது.

கடந்த வருடங்களை விட இந்த வருடம் யானைகள் தொடர்பான பிரச்சினைகள் குறைந்துள்ளன எனவும் காட்டு யானைகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்ட ஈடு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் 2014 ஆம் ஆண்டு வரவு- செலவுத் திட்டத்தினூடாக மனித- யானை முரண்பாட்டினால் பாதிக்கப்படும் ஒவ்வொரு பிரதேச செயலக பிரிவுக்கும் 1 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

மேலும் வனப் பிரதேசங்களை அண்மித்துள்ள கிராமங்களை சுற்றி மின் வேலிகள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன என்றும் காட்டு யானைகளின் உணவு, நீர்த் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் வன ஜீவராசிகள் திணைக்களத்தினர் அறிவித்துள்ளனர். (ஓ-10)



# வடக்கு ஆளுநரை நீக்குமாறுகோரி தெற்கு அரசியல் கட்சி பிரேரணை

கொழும்பு.ஜன.1

வடக்கு ஆளுநரை நீக்கிவிட்டு அந்தப் பதவிக்கு சிவில் அதிகாரியொருவரை நியமிக்குமாறு அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் நவசமசமாஜக் கட்சி தீர்மானம் நிறைவேற்றவுள்ளது.



எதிர்வரும் 30 ஆம் திகதி நடைபெறும் கட்சியின் 30 ஆவது ஆண்டுவிழாவிலேயே இந்தத் தீர்மானம் நிறைவேற் றப்படும் என்று கட்சியின் பொதுச் செயலாளர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன தெரிவித்தார்.

"தமிழ் மக்கள் தொடர்ச்சியாக ஒடுக் கப்படுகின்றனர். அவர்களின் உரிமைகள் மறுக்கப்படுகின்றன.

எனவே, அவர்களுக்கு கௌரவமானதொரு அரசியல் தீர்வை வழங்கவேண்டும் என்ற யோசனையும் எமது தீர்மானத்தில் உள்ளடக்கப்படும். அத்துடன், வடக்கு இராணுவத்தை முகாமுக்குள் முடக்கவேண்டும் என்ற கோரிக்கையையும் நாம் அதில் முன்வைக்கவுள்ளோம்.

அதேவேளை, வடக்கு மக்களின் உரிமைகளை அவர்களுக்குப் பெற்றுக் கொடுப்பதற்காக தெற்கின் ஆதரவைத் திரட்டும் வேலைத்திட்டம் குறித்தும் யோசனை முன் வைக்கப்பட்டுள்ளது" என்றும் விக்கிரமபாகு தெரிவித்தார்.

## விபத்துச் சம்பவத்தில் ஆசிரியைக்கு காயம்

வவுனியா பொது மருத்துவமனைக்கு அருகில் உள்ள நாற்சந்தியில் இடம்பெற்ற விபத்துச் சம்பவத்தில் ஆசிரியை ஒருவர் காயங்களுக்கு உள்ளானார்.

நேற்றுக் காலை 7 மணியளவில் வவுனியா-யாழ்ப்பாணம் வீதியில் இருந்து நாற்சந்தியை கடந்து குடியிருப்பு வீதிக்கு செல்லும் கித்துள் வீதியூடாக (இலங்கை தமிழ் கலவன் பாடசாலை வீதி) மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரியின் வாகனம் செல்ல முற்பட்டபோது மருத்துவமனை வீதிப் பக்கமாக வந்த மோட்டார் சைக்கிள் அதனுடன் மோதியது.

இந்த விபத்துச் சம்பவத்தில் சுகாதார வைத்திய அதிகாரியின் கார் சிறு சேதத்துக்கு உள்ளாகியது. மோட்டார் சைக்கிளைச் செலுத்தி வந்த பெண் காயங்களுக்கு உள் ளானார். காயம் அடைந்தவர் வவு னியா இறம்பைக்குளம் மகளிர் கல்லூரியின் ஆசிரியையான திருமதி சிவராஜா என்று தெரிய வருகின்றது. (க-421)

# தேவையான மருந்து வகை ஒரே தடவையில் இறக்குமதி

*சுகாதார அமைச்சு தெரிவிப்பு*

கொழும்பு.ஜன.1

அடுத்த வருடத்தின் முதல் காலாண்டுக்கு (4 மாதங்கள்) தேவையான அனைத்து மருந்து வகைகளும் ஒரே தட வையில் இறக்குமதி செய்யப்படும் என சுகா தார அமைச்சு தெரிவித்துள்ளது.



வைத்தியசாலைகளில் ஏற்படும் மருந்துத் தட்டுப்பாட்டை முடிவுக்குக் கொண்டுவரும் வகையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஆயிரத்துக்கும் அதிகமான வகை மருந்துகள் ஜனவரி மாதத்தில் இறக்குமதி செய்யப்படும் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தியா, பங்களாதேஷ், தாய்லாந்து மற்றும் மலேசியா போன்ற நாடுகளில் இருந்து இம் மருந்துகள் இறக்குமதி செய்யப்படவுள்ளன. (எ)


பங்காளி துணை

## இந்திய யாத்திரை

இந்த யாத்திரைகள் அனைத்தும் 05.01.2000 ஆம் ஆண்டு காலமானஎன் மனைவியின் வேண்டுகோளிற்காக சேவை நலன்கொண்டு குறைந்த செலவில் நடத்தப்படுகின்றது

இது தமிழ்நாடு, ஆந்திரா, பாண்டிச்சேரி ஆகிய மூன்று மாநிலங்களுக்கூடான யாத்திரை

நாள்கள்: 15 யாத்திரிகர்கள் 10 பேர் ஆரம்பம்: 27.01.2014 நிறைவு: 10.02.2014

தரிசிக்கும் ஆலயங்கள்:

காஞ்சி காமாட்சி, ஏகாம்பரேஸ்வரர், வரதராஜப்பெருமாள், திருப்பதி, திருத்தணி, அலமேலுமங்கா, திருச்செந்தூர், அழகர்கோயில், மதுரைமீனாட்சி, சுந்தரேஸ்வரர், திருப்பரம்குன்றம், பழனி, மலைக் கோட்டை விநாயகர், சென்னை சீரடிபாபா, மாங்காடுமாரி அம்மன், திருவேற்காடு கருமாரி அம்மன், இராமேஸ்வரம், நவபாஷாணம், தஞ்சாவூர், கூடலளகர்பொருமாள், மதனகோபாலசுவாமி, கறுப்புசுவாமி, பழமுதிர்சோலை, சந்திரன்திங்களூர், சுவாமிமலை, ஸ்ரீரெங்கம், திருவானைக்காவல், வடபழனி, கபாலீஸ்வரர், பார்த்தசாரதி, காளகஸ்திரி, வேலூர்பொற்கோயில், திருவெண்ணாமலை, கிரிவலம், ரமண மகாரிஷி, ஆச்சிரமம், சிதம்பரம், வைத்தீஸ்வரன்கோயில், திருவெண்காடுபுதன், கீழ்பெரும்பள்ளம் கேது, திருக்கடையூர் அபிராமி, திருநள்ளாறுசனிபகவான், அனந்தமங்களம் ஆஞ்சநேயர், கோபாலகிருஷ்ணர், சூரியன்கஞ்சனூர், சுக்கிரன் ஆலங்குடிவியாழன், திருநாகேஸ்வரம்ராகு, உப்பிலியப்பன் மேற்குறிப்பிட்ட ஆலயங்கள் அனைத்தையும், தவறாது தரிசிக்கலாம். அத்துடன் திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகியோர் தேவாரம் பாடிய 15 இற்கு குறையாத திருத்தலங்களையும் தரிசிக்கலாம்.

சகல விபரம் நேரடி அறிந்துகொள்ள! கலாநிதி T.ஸ்ரீரெங்கநாதன்

Office: City Center Shopping Complex, 3rd Floor, No.59,C 3/3, Sea Street, Colombo-11.

Tel: 077 768 0102, 0724-222989,077 736 2154 Web: www. sridevipilrims.com

சென்ற யாத்திரையில் கலந்துகொண்டவர்கள்

யாழ்ப்பாணத்தில்: M. குமாரசிங்கம் 021 320 6314/ 075 614 4476

மட்டக்களப்பில் : K. ராஜகோபால் Tel: 065 3653719



## கடை வாடகைக்கு

திருநெல்வேலி சந்திக்கு அருகில் ஆடிய பாதம் வீதியில் 42 அடி அகலமும் 70 அடி நீளமும் கொண்ட கட்டடம் வாடகைக்குண்டு. வாகனத் தரிப்பிட வசதி உண்டு. (நிதி நிறுவனங்கள், வங்கிகள், காட்சி அறைகளுக்கு ஏற்றது.)

தொடர்பு : 077 668 1547 (41535) (7.6.3)

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம், சுண்டுக்குளியில் 1½ (ஒன்றரை) பரப்புக் காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு.

(41822) (45.6.3) தொ.பே.077 712 0968

## வீடு விற்பனைக்கு

கொழும்புத்துறை சுவாமியார் வீதியில் (கொழும்புத் துறை இந்துக் கல்லூரிக்கு அருகில்) 2 பரப்புக் காணியில் அமைந்துள்ள 3 அறைகளுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு : 077 614 6434 (41823)(7.6.3)

## தேவை

கார்த்திகைக் காய்களின் பருவம் இது. நன்கு முற்றிய பச்சைக் காய்கள் தேவை.

தொடர்புக்கு:
EK & CO
55/1. ஸ்ரீ மகிந்த தர்மாவத்தை கொழும்பு -00900
(41881) (4.8.3) T.P:011267 707 7/011269 772 9

## நியூவே சொப்பிங் பொயின்ற்

## பணியாளர் தேவை

1) காசாளர் (இருபாலாரும்)

கல்வித் தகைமை :

க.பொ.த உயர் தரச்சித்தி (G.C.E. A/L)

ஆங்கிலம் க.பொ.த சாதாரண தர பரீட்சையில் சித்தி.

அனுபவத்தின் அடிப்படையில் முன்னுரிமை.

கணினி அறிவில் நன்கு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

வயது 20-30.

2) பணி உதவியாளர் (இருபாலாரும்)

(களஞ்சிய/விற்பனை/பராமரிப்பு-பணிகளுக்கான)

கல்வித் தகைமை :

க.பொ.த சாதாரண தர பரீட்சையில் சித்தி (G.C.E. O/L)

ஆற்றலும் விவேகமுள்ளவர்கள் எதிர்பார்க்கப்படுகின்றனர்.

வயது 18-30.

குறிப்பு :15.01.2014இற்கு முன்பாக பூரண சுயவிவரங்களுடன் விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற வேண்டும்.

விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:

பொது முகாமையாளர்
நியூவே சொப்பிங் பொயின்ற்
329/40, பிரதான வீதி,
பருத்தித்துறை.

(சி/10860) (7.6.3)

## Invitation


The Chairperson & the Board of Directors
of
Jaffna College
take pleasure in inviting you to join them
In the Service of Institution & Installation
of
**The Rev.Dr David Sathananthan Solomon**
B.A.,Dip.in Ed.,M.Ed.,Cert.in Counselling., D.Min.
as
**PRINCIPAL**
of
**JAFFNA COLLEGE**
by
**The Rt.Rev.Dr Daniel S.Thiagarajah Ph.D.**
Bishop of Church of South India in the Jaffna Diocese
on
**Monday, January 06, 2014 at 4.00 p.m.**
at
**The JDCSI Cathedral, Vaddukoddai.**

RSVP - 077 200 7585 (Chandran)
- 077 355 2129 (Vasuki)

*Secretary*
*Board of Directors of Jaffna College*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பஸ்கள் தரிக்காததால் பயணிகளுக்கு சிரமங்கள்



முகமாலை வடக்கு வீதியுடன் இணையும் ஏ-9 வீதிச் சந்தியில் பஸ்கள் தரித்து நிற்காமையால் பயணிகள் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

முகமாலை வடக்கு கிராமத்தின் மீளக்குடியமர்வின் போது பாவிக் கப்பட்ட தற்காலிக வீதிச் சந்தியிலேயே பஸ்கள் தரித்து நின்று பயணிகளை ஏற்றின. எனினும் தற்போது இந்தக் கிராமத்துக்குரிய நிரந் தரமான வீதி புனரமைக்கப் பட்டுள்ளது. ஆனால் ஏற்கனவே இருந்த தற்காலிக வீதி இணையும் சந்தியிலேயே பஸ்கள் தரித்து நிற்கின்றன. புனரமைக்கப்பட்ட வீதி ஏ-9 வீதியுடன் இணையும் சந்தியில் அவை தரித்து நிற்பதில்லை.

இதனால் புதிய வீதியைப் பயன்படுத்தும் மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே புதிய வீதி, ஏ-9 வீதியுடன் இணையும் சந்தியில் பஸ்கள் தரித்து நிற்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டுமென மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-6)

# கட்டுக்கரைக் குளத்திலிருந்து நீரை திறந்துவிட நடவடிக்கை

### *மன்னார் அரச அதிபர் விவசாயிகளிடம் தெரிவிப்பு*





மன்னார். ஜன.1

மன்னாரில் நெற்பயிர்களைப் பாதுகாக்கும் பொருட்டு எதிர் வரும் 5 ஆம் திகதி கட்டுக் கரைக் குளத்திலிருந்து நீர் திறந்து விடப்படுமெனவும், பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கப்படுமெனவும் மன்னார் அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

மன்னார் மாவட்டத்தில் பெரும் போக விவசாயச் செய்கையை மேற்கொண்ட விவசாயிகள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராயும் அவசர கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் மன்னார் உயிலங்குளம் ம.வி. பாடசாலையில் மன்னார் மாவட்ட அரச அதிபர் எம்.வை. எஸ்.தேசப்பிரிய தலைமையில் இடம் பெற்றது.

இதன் போது மாந்தை மேற்கு, மடு,நானாட்டான்,முசலி அகிய பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் உள்ள விவசாய அமைப்புக்களின் பிரதி நிதிகள் மற்றும் பெரும்போக விவசாய நடவடிக்கையில் ஈடுபட்டு வரும் விவசாயிகள் என நூற்றுக் கணக்கானவர்கள் கலந்து கொண்டனர்.

கலந்துரையாடலில் பங்கு பற்றிய விவசாயிகள் தெரிவிக்கையில்:

தற்போது மன்னார் மாவட்டத்தில் மழை பெய்யாததன் காரணமாக பெரும் போக விவசாயிகள் தமது விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்வதில் நீர் கிடைக்காது பல்வேறு பிரச் சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

கட்டுக்கரைக் குளத்தை நம்பி தற்போது 4 ஆயிரம் ஏக்கரில் விவசாயிகள் பெரும் போக நெற்பயிர்ச் செய்கையில் ஈடுபட்டுள்ளனர். சுமார் இரண்டு மாதங்களைக்கடந்த பயிர்களாக அவை காணப்படுகின் றன.

உரிய நீர் கிடைக்காததால் ஆயிரம் ஏக்கர் வரையான நெற்பயிர்ச்செய்கை அழிவடைந்துள்ளது.

தற்போது எஞ்சியுள்ள பயிர்களையாவது காப்பாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்- என விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

கட்டுக்கரைக்குளம் இதுவரை திறந்து விடப்படாததன் காரணமாகவே இந்த நிலை ஏற்பட்டுள்ளதாகவும் விவசாயிகள் தெரிவித்துள்ளனர். அடுத்த மாதம் நெற்பயிர்களில் கதிர் வருகின்ற காலம் என்பதால் உடனடியாக நீர் பாய்ச்ச வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

மேலும் கால்நடைகளால் பயிர்களுக்கு ஏற்படும் அழிவுகள் தொடர்பாகவும் அங்கு தெரிவிக்கப்பட்டது.

இதன் போது மன்னார் மாவட்ட அரசஅதிபர் எம்.வை. எஸ்.தேசப்பிரிய கருத்துத் தெரிவிக்கையில்;

விவசாயிகள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளுக்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். மேலும் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் விவரங்கள் சேகரிக்கப்பட்டு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். அது மட்டுமின்றி எதிர் வரும் 5 ஆம் திகதி கட்டுக் கரைக்குளம் திறந்து விடப்பட்டு விவசாய செய்கைகளுக்கு நீரை வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்- என்றார்.

குறித்த கலந்துரையாடலில் மன்னார் மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி ஸ்ரான்லி டி மேல், உதவி மாவட்டச் செயலாளர் எம்.பரமதாஸ், கமநல அபிவிருத்திணைக்கள உதவி ஆணையாளர் எஸ். தேவரதன், பிரதேச நீர்ப்பாசன பொறியியலாளர் எம்.மயூரன், நீர்ப்பாசன திணைக்கள திட்ட முகாமையாளர் கிருஷ்ணரூபன் மற்றும் பிரதேசச் செயலர்கள் கலந்து கொண்டனர். (க-12)



வவுனியா வடக்கு பிரதேசத்தில் மக்கள் பயன்படுத்த முடியாத நிலையில் காணப்பட்ட ஊஞ்சல்கட்டி, மருதோடை, வெடிவைத்தகல் உட்பட பல கிராமங்களுக்கான பிரதான வீதி நீண்ட காலமாகப் புனரமைக்கப்படாமையால் மக்கள் இடர்களை எதிர்கொண்டு வந்தனர். இந்த நிலையில் மக்களின் நலன் கருதி வவுனியா வடக்கு பிரதேச செயலகத்தின் முயற்சியால் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பொதுமக்கள், வவுனியா வடக்கு பிரதேசத்தில் பணியாற்றும் அரச நிறுவனங்கள் ஆகிய தரப்புக்களின் பங்களிப்புடன் இந்த வீதி புனரமைக்கப்பட்டு வருகின்றது. (க-402)

# பூநகரியில் இன்னமும் உரிய அபிவிருத்தி இல்லை

### *நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவிப்பு*

அக்கராயன், ஜன.1


கிளிநொச்சி மாவட்டத்தில் முதலாவதாக மீளக்குடியமர்வு இடம்பெற்ற பூநகரிப் பிரதேசம் அபிவிருத்தியில் மிகவும் பின்னடைந்த நிலையிலேயே காணப்படுகிறது- இவ்வாறு தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பி னர் மு.சந்திரகுமார்.

கிளிநொச்சி ஜெயபுரத்தில் இடம்பெற்ற சமுர்த்திக் கட்டடத்துக்கு அடிக்கல் நடும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் தொடர்ந்துஉரையாற்றுகையில்; கிளிநொச்சியின் ஏனைய பிரதேச செயலர் பிரிவுகளை விட பூநகரிப் பிரதேச செயலர் பிரிவில் அபிவிருத்தி வேலைகள் பெரியளவில் இடம்பெறவில்லை என்றே கூற வேண்டும். இந்த நிலையில் ஜெயபுரம் கிராமத்தில் பாடசாலைக் கட்டடங்கள் 70 மில்லியன் ரூபா செலவில் சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளன. இருந்தபோதிலும் வீதிப் புனரமைப்பு, நிலங்கள் உவராக மாறுதல், வயல் நிலங்கள் இல்லாமை ஆகிய பிரச்சினைகள் இங்கு காணப்படுகின்றன.

அபிவிருத்திப் பணிகள் மக்களின் கருத்துக்கள் பெறப்பட்டே மேற்கொள்ளப்பட வேண்டும்- என்றார். (க-18)

ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 05 ★ 07 ★ 1976



உதிர்வு 01 ★ 01 ★ 2009

நடராசா கமலராஜ்

(கணக்காளர் - கரைச்சி வடக்கு -ப.நோ.கூ. சங்கம், பரந்தன்)

திதி: பஞ்சமி - 05.01.2014

மண்ணிலே பிறப்புரிமை மாண்புடைய உறவு உரிமை
அன்புடைய கணவராய் மகள் பவிஷாவுக்கு அன்புப்
பிதாவாய் பாசமிக்க தலைமகனாய்
அருமைச் சகோதரனாய் ஆசை மருமகனாய்
அன்பு மைத்துனராய் உரிமையோடு பெறாமகனாய்
உறவு சொல்லச் சிறப்பாக வாழ்ந்து
உயிர்நீத்த உத்தமனை தைத்திங்கள் முதல் திகதியில்
உனை நினைத்து மனம் உருகிக் கலங்குகிறோம்.

[illegible]ந்தர் வீதி,
[illegible]நொச்சி.

(41776)(4-6-3)

நீங்கா நினைவுடன் குடும்பத்தினர்
கீரிமலை வீதி, பண்டத்தரிப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குற்றச்செயல்களில் ஈடுபடுவோரை கராத்தே கலையூடாக மாற்றலாம்

*மட்டு. அரச அதிபர் சாள்ஸ் கூறுகிறார்*

மட்டக்களப்பு. ஜன.1

போரின் பிடியில் இருந்து மக்கள் மீண்டு வரும் சூழலில், குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்களை 'கராத்தே' கலை ஊடாக மாற்றமுடியும். இதன் மூலம் வளமுள்ள இளைஞர் சமுதாயம் உருவாக்கப் படவேண்டும்' என்று மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி பி.எஸ்.எம். சாள்ஸ் தெரிவித்தார்.

மட்டக்களப்பு, சோட்டோகான் கழகத்தின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மட்டக்களப்பில் நடைபெற்ற இந்தவருடத்துக்கான கௌரவிப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்:-

'ஆசிய நாடுகளைப் பொறுத்தவரையில் பெண்களும் சிறுவர்களும் பல இன்னல் களுக்கும் சவால்களுக்கும் முகம் கொடுத்து வருகிறார்கள்.

பொதுவாக பாடசாலைகளிலும் கல்வி நிறுவனங்களிலும், தங்களது திறமைகளை வெளிக் கொண்டுவருவதற்கு பல சவால்கள் உள்ளன.

இவ்வாறான சூழலில் தற்காப்புக் கலைகளால் தன்னம்பிக்கைகளும், முயற்சிகளும் மேம்பட்டு வருகின்றன.

தற்போது ஏற்பட்டுள்ள அமைதிச் சூழலில் இளைய சமூகத்தினர் குற்றச்செயல்களில் ஈடுபடுபவர்களாகவும், வன்முறைகளை மேற்கொள்பவர்களாகவும் மாறிவருகின்றனர்.

இவர்களை வழிப்படுத்துவதற்கு தற்காப்புக் கலைகள் பெரும் பங்கு வகிக்கின்றன.

மட்டக்களப்பு நகரை அழகுபடுத்தல் திட்டத்தின் கீழ் பல



வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவற்றுக்கு பல மில்லியன் ரூபா பணம் செலவிடப்பட்டுள்ளது. முதல் நாள் நன்றாக இருக்கும் இடங்கள் மறுநாள் காலையில் பார்க்கையில் மின்விளக்குகள் சேதப்படுத்தப்பட்டும், பொருள்கள் உடைக்கப்பட்டும் காணப்படுகின்றன.

மட்டக்களப்பில் புதிதாக மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் மக்கள் பாவனைக்காக திறந்து வைக்கப்படும் போது அவை சேதமாக்கப்படுகின்றன.

குறிப்பாக காந்திப்பூங்கா அதன் சுற்றுச்சூழல் மக்களின் அமைதிப் பகுதியாக இருக் கின்றது. ஆனால் அங்கு இரவு வேளையில் கூடும் இளைஞர்கள் அங்கு வேண்டத்தகாத செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

சிலவேளைகளில் காலையில் ஊழியர்கள் சென்று பார்க்கும் போது அங்குள்ள பொருள்கள் சேதமாக்கப்பட்டு காணப்படுகின்றன. நாம் இது தொடர்பில் சிந்திக்கவேண்டும்.

எமது சொத்துக்களை நாங்களே நாசம் செய்யும் நிலையைத் தடுக்க அனைவரும் சிந்தித்துச் செயற்படவேண்டும்.

“-”

எமது சொத்துக்களை நாங்களே நாசம் செய்யும் நிலையை தடுக்க அனைவரும் சிந்தித்துச் செயற்படவேண்டும்.

தவறான செயற்பாடுகளை மேற்கொள்வோர் தொடர்பில் அனைவரும் விழிப்புடன் இருக்க வேண்டும்-என்றார். (வ)

## திருட்டு சம்பவம் ஐவருக்கு மறியல்

ஏறாவூர்.ஜன.1

ஏறாவூர் நகர கடைத் தெருவில் கடை உடைத்து பொருள்கள் கொள்ளையிடப்பட்டமை தொடர்பாக இதுவரை சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ள ஐந்து பேரும் 14 நாள் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் குறித்த சந்தேக நபர்களை ஏறாவூர் பொலிஸார் மாவட்ட பதில் நீதிவான் எம்.ஐ.எம். நூரதீனிடம் முன்னிலைப்படுத்திய பொழுது இந்த விளக்க மறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

## இந்தியர்கள் இருவர் கைது

ஏறாவூர்.ஜன.1

சனிக்கிழமை இரவு துறை நீலா வணையில் இரு இந்தியர்களை களுவாஞ்சிக்குடி பொலிஸார் கைது செய்தனர்.

சுற்றுலா விசாவில் வந்து புடைவை வியாபாரத்தில் ஈடுபட்டமைக்காகவே அவர்கள் சனிக்கிழமை கைது செய்யப் பட்டதாக பொலிஸார் கூறினர்.

தமிழகத்தின் எந்தையூரைச் சேர்ந்த கோப்பையன் மாரியப்பன் (வயது 39) மற்றும் மாரியப்பன் சமணதேவி (வயது 39) ஆகியோரே கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களை நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்த உள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (வ)

# சர்வதேச கடற்பாசறை மாநாடு இலங்கையிலிருந்து 22 பேர்

## ஜனவரி மாதம் சிட்னிக்குப் பயணமாகின்றனர்

மட்டக்களப்பு. ஜன.1

ஆஸ்திரேலியா அரசின் ஏற்பாட்டில் சிட்னி நகரில் 2014 ஆண்டு ஜனவரி மாதம் 2 ஆம் திகதி நடைபெறவுள்ள ஐ.சி.சி. 2014 சர்வதேச சென்.ஜோன்ஸ் கடெற் பாசறை மாநாட்டில் கலந்து கொள்வதற்காக இலங்கையில் இருந்து சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதலுதவி சர்வதேச நிறுவனத்தின் கொழும்பு தலைமைக் காரியாலயத்தால் தெரிவு செய்யப்பட்ட 22 பேர் ஆஸ்திரேலியா பயணமாகவுள்ளதாக சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதலுதவி நிறுவனத்தின் மட்டக்களப்பு மாவட்ட தலைவர் அஹமட் லெப்பை மீராசாஹிபு தெரிவித்தார்.

இச் சர்வதேச கடற் பாசறை மாநாட்டுக்கு சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதலுதவி நிறுவனத்தின் மட்டக்களப்பு மாவட்ட தலைவர் அஹமட் லெப்பை மீராசாஹிப், சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதலுதவி நிறுவனத்தின் கொழும்பு மாவட்ட ஆணையாளர் சரத் தயானந்தா, சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதலுதவி நிறுவனத்தின் குருநாகல் மாவட்ட உதவி ஆணையாளர் மல்லிகா ஹேரத் உட்பட 15,16, 17,18 வயது சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதலுதவி நிறுவன உறுப்பினர்கள் பெற்றோர் என 22 பேர் குழுவாகப் பயணமாகவுள்ளனர். (வ)



# இலவச அழகுக்கலைப் பயிற்சி

* நிபந்தனைக்குட்பட்டது.

சுவீடன் நாட்டு நிறுவனத்தால் 590/=
பதிவுக் கட்டணத்துடன்
Facial, Whiting Facial, Face Massage,
Gold Facial, Diamond Facial, Eye Brow Shape,
Fruit Facial, Bleaching, Hair Cut Pedicure,
Hair Ironing, Manicure, Hair Curling,
Bridal Make up, Nail Art, Hair Style,
French Manicure, Pimple Treatment,
Mehindi, Saree Style எனப் பல பயிற்சிகள்
செய்முறை விளக்கத்துடன்
ஒரு மாத, 3 மாத பிரிவுகளாக நடைபெற்று
பயிற்சி முடிவில்
சர்வதேச சான்றிதழ் வழங்கப்படும்.

**பிரிவு 1 : 03.01.2014 வெள்ளிக்கிழமை 10.00 மணி**
**பிரிவு 2 : 06.01.2014 திங்கட்கிழமை 10.00 மணி**
தொடர்பு : 077 368 6038/077 884 8666



**ஒறிபிளேம் யாழ் கிளை**
**187/30, யூனியன் ஒழுங்கை,**
**யாழ்ப்பாணம்.**
**(சத்திரச்சந்தி அருகில்)**

(39610) (7.6.3)



2013 தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு காத்தான்குடி நகர சபையின் பொது நூலகத்தின் ஏற்பாட்டில் புத்தகக் கண்காட்சி ஒன்று காத்தான்குடி பொது நூலகத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆரம்பிக்கப்பட்டது. புத்தகக் கண்காட்சியை பிரமுகர்கள் பார்வையிடுகின்றனர்.

# போரால் பாதிப்புற்ற உறவினரின் ஒன்றியக் கிளை மட்டக்களப்பில்

போரினால் இறந்த மற்றும் காணாமற் போனவர்களின் உறவினர்களின் ஒன்றியத்தின் மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய பிரதான கிளைக் காரியாலயம் சனிக்கிழமை காலை இலக்கம்.16, தாமரைக் கேணி வீதி அரசடி, மட்டக்களப்பு என்ற முகவரியில் உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

இதன்போது இந்த ஒன்றியத்தின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளர் வி.மகேஸ்வரனுக்கான நியமனக்கடிதத்தை அதன் தேசிய அமைப்பாளர் கையளித்ததுடன் போரால் இறந்த மற்றும் காணாமற் போனவர்களின் விவரங்களும் அவர்களின் உறவினர்களால் கையளிக்கப்பட்டன.



பிராந்தியக் காரியாலயத்தில் சனி தொடக்கம் மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து போரால் இறந்த மற்றும் காணாமற் போனவர்களின் விவரங்கள் சேகரிக்கப்பட உள்ளெதன ஒன்றியத்தின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளர் வி.மகேஸ்வரன் தெரிவித்தார். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிவேக வீதியில் பயணித்த 187 பேர் மீது வழக்கு

கொழும்பு - கட்டுநாயக்கா அதிவேக வீதியில் பொலிஸார் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையில் 187 பேர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.
கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணி தொடக்கம் நேற்றுமுன்தினம் காலை 6 மணி வரையான 24 மணித்தியால காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கைகளின் போது தவறான விதத்தில் வாகனங்களைச் செலுத்திய இவர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
இதேவேளை மதுபோதையில் வாகனம் செலுத்திய மற்றும் சாரதி அனுமதிப்பத்திரம் இன்றி வாகனம் செலுத்திய இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். (எ)



தென் மாகாண சபை மூலம் காலி லபுதுவவில் நிர்மாணிக்கப்பட்ட மாகாண சபை செயலகத்துக்கான ஏழு மாடி கட்டடத்தொகுதி நேற்று முன்தினம் மாலை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் திறந்து வைக்கப்பட்டது.

## மங்களவின் வீட்டுக்குள் புகுந்த திருடர்கள்

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீரவின் பாணந்துறை வீட்டுக்குள் திருடர்கள் சென்ற போதும்திருட்டு ஏதும் நடக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.
பாணந்துறை - கெசல்வத்த - ஹொரகான பிரதேசத்தில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினரின் வீட்டுக்குள் நேற்று முன்தினம் இரவு திருடர்கள் உள்நுழைந்திருந்தனர் என்று பாணந்துறை வடக்கு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.
ஆனால் திருடர்கள் எதனையும் திருடிச் சென்றதாக தகவல் கிடைக்கவில்லை. (எ)

# தெவனகல முஸ்லிம்கள் விடயத்தில் ஹக்கீம், அஸ்வர் தலையிட வேண்டும்

### சமூக மேம்பாட்டுக்கான மக்கள் இயக்கம் கோரிக்கை

கொழும்பு,ஜன.1
மாவனெல்ல பகுதியிலுள்ள தெவனகல முஸ்லிம்களுக் குத் தற்போது ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல் நிலையை உடன் முடிவுக்குக் கொண்டுவர மு.கா. தலைவரும், நீதி யமைச்சருமான ரவூப் ஹக்கீம் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் அஸ்வர் ஆகியோர் தலையீடு செய்யவேண்டு மென சமூக மேம்பாட்டுக்கான மக்கள் இயக்கம் கோரிக்கை விடுத்துள்ளது.
இது தொடர்பில், இயக்கத் தின் தலைவரான மருதூர் ஏ.ஹசன் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பவை வருமாறு:-
தெவனகல முஸ்லிம் களின் இருப்புக்கு தற்போது அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.
சுமார் 300 வருட பூர்வீகத்தைக்கொண்ட அந்த மக்களை 9 வருடத்துக்கு முன்னர் வெளியான வர்த்தமானி அறிவித்தலை வைத்துக்கொண்டு வெளியேற்ற முயற்சிப்பது பெரும் அநீதியும், இனத்துரோகமுமாகும்.
'சிங்கள ராவய' என்பது ஓர் இனத்துவேஷ, இனவாத தீவிரவாத அமைப்பு என்பதில் சிங்கள மக்கள் மத்தியிலும் இருவேறுபட்ட கருத்துக் கிடையாது.
இந்த இயக்கம், கடந்த காலங்களிலும் பல்வேறு இன வாதச் செயற்பாடுகளை முஸ்லிம்களுக்கு எதிராக அரங் கேற்றியுள்ளது. இன்று அது தெவனகல முஸ்லிம்கள் வரை சென்றுள்ளது.

"-"

'சிங்கள ராவய' என்பது ஓர் இனத்துவேஷ. இனவாத தீவிரவாத அமைப்பு என்பதில் சிங்கள மக்கள் மத்தியிலும் இருவேறுபட்ட கருத்துக் கிடையாது.

இனியும் இந்த அநீதிச் செயற்பாட்டை முஸ்லிம்களும், முஸ்லிம் தலைமைகளும் மௌனமாக இருந்து அவதானித்துக்கொண்டிருக்க முடியாது.
தெவனகல முஸ்லிம்களை அவர்களது பூர்வீக இடத்திலிருந்து வெளியேற்ற முனைவது அநீதி என்பதை அனைவரும் இன்று ஏற்றுக்கொண்டுள்ளனர்.
அதனால், இந்த அநீதியை நீதித்துறையின் ஊடாகவும், ஜனாதிபதி ஊடாகவும் முடிவுக்குக் கொண்டுவர வேண்டிய அவசியம் இன்று ஏற்பட்டுள்ளது. நீதியமைச்சராக, மு.கா. தலைவர் ரவூப் ஹக்கீமே உள்ளார். தெவனகல முஸ்லிம்கள்' இந்த விடயத்தை அவரிடம் ஏற்கனவே முன்வைத்துள்ளனர்.
எனவே, இனியும் காலம் தாழ்த்தாது இந்த விடயத்துக்கு நீதியின் மூலம் தீர்வு காண ரவூப் ஹக்கீம் முன்வர வேண்டுமென எமது இயக்கம் கேட்டுக்கொள்கின்றது- என்றுள்ளது.

## ஆடைத் தொழிற்சாலையில் தீ விபத்து

கொழும்பு,ஜன.1
கொட்டாஞ்சேனை பிரதேசத்தில் உள்ள ஆடைத் தொழிற்சாலை ஒன்றில் நேற்று முன்தினம் இரவு 9 மணியளவில் ஏற்பட்ட தீ விபத்தில் பெரும் இழப்பு ஏற்பட்டுள்ளது.
கொழும்பு, கொட்டாஞ்சேனை - பரமானந்த விகாரை மாவத்தையில் உள்ள ஆடைத் தொழிற்சாலையிலேயே இந்தத்தீ விபத்து ஏற்பட்டுள்ளது.
கொட்டாஞ்சேனை பொலிஸார் மற்றும் கொழும்பு தீயணைப்புப் படையினர் இணைந்து தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.
தீயினால் ஏற்பட்ட இழப்புக் குறித்து இன்னமும் கணிப்பிடப்பட வில்லை. (எ)


# போதை ஒழிப்புப் போரில் குதித்தது பொதுபலசேனா

கொழும்பு,ஜன.1
"குடுவை (போதைப் பொருள்) இலங்கைக்கு யார் கொண்டு வந்தார்கள் எதற்காக கொண்டு வந்தார்கள் என்பதை விட அது எங்கிருந்து கொண்டு வரப்படுகிறது. கொண்டு வரப்பட்ட பின்னர் எந்தெந்தப் பகுதிகளுக்குப் பகிரப்படுகின்றது என்பதையே பொலிஸார் கண்டு பிடிக்க வேண்டும்" என பொதுபலசேனாவின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞான சார தேரர் நேற்று தெரிவித்தார்.
அத்துடன், "நம்மால் முடிந்த வரை நாட்டிலிருந்து போதைப் பொருள்களை ஒழித்துக் கட்டுவோம்" என்றும் அவர் தெரிவித்தார்.
இலங்கைக்கு அண்மைக் காலமாக அதிகமான அளவில் போதைப்பொருள்கள் கடத்தப்படுவது குறித்து வினவிய போதே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்:-



"இலங்கைக்குள் தற்போது அதிகளவிலான போதைப் பொருள்கள் கொண்டு வரப்படுகின்றன. ஆனால்,அவற்றை யார் கொண்டு வருகிறார்கள், எதற் காக கொண்டு வரப்படுகிறது என்று இதுவரையிலும் கண்டுபிடிக்கப்படவில்லை.
இதற்கு முன்னர் கொண்டு வரப்பட்ட ஹெரோயின் போதைப் பொருளுடன் பிரதமருக்கு தொடர்பிருப்பதாகக் கூறப்பட்ட போதிலும், உண்மையான நிலைப்பாடு என்ன என்று இதுவரையிலும் கண்டு பிடிக்கப்படவில்லை.
பிரதமர், 'இலங்கை சர்வாதிகாரமான நாடு' எனக் கூறியதற்குத் தான் நாம் எதிர்ப்புத் தெரிவித்தோமே ஒழிய இவ்விடயத்தில் பிரதம ருக்குள்ள தொடர்பு என்ன என்று எம்மால் சரியாகச் சொல்ல முடியாதுள்ளது. அதனால், இவர் குறித்து எம்மால் கருத்து தெரிவிக்க முடியாது.
ஆனால், பிரதமர் அல்ல, ஜனாதிபதியே இவ்வாறான தொரு செயலைச் செய்திருப்பாரானால் கூட நிச்சயமாக கைது செய்யப்படவே வேண்டும்.
இந்தப் போதைப்பொருள்களுக்கு எதிராக தொடர்ச்சியாக எமது எதிர்ப்பினைத் தெரிவித்துக் கொண்டு தான் வருகிறோம். ஏன், அண்மையில் கூட கொலன்னாவை பிரதேசத்தில் இதற்கு எதிரான ஒரு போராட்டத்தையே நாம் மேற்கொண்டோம்- என்றார்.

# வாகன விபத்து சம்பவங்களில் இந்த வருடம் 297 பேர் சாவு



கொழும்பு,ஜன.1
இந்த வருடத்தில் மதுபோதையில் வாகனம் செலுத்தியதால் ஏற்பட்ட விபத்துக்களில் 297 பேர் உயிரிழந்துள்ளனர் என்று போக்குவரத்துப் பொலிஸ் பிரிவினரின் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.
மதுபோதையில் வாகனம் செலுத்துவதால் ஏற்படும் விபத்துச் சம்பவங்கள் அண்மைக் காலமாக இலங்கையில் அதிகரித்துள்ளன. 1,671 விபத்துச் சம்பவங்கள் இந்த வருடத்தில் மது போதையில் வாகனம் செலுத்தியதால் ஏற்பட்டுள்ளன. கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இந்த வருடம் குறைவான விபத்துக்கள் இடம்பெற்றிருந்தாலும் உயிர் இழந்தோரின் எண்ணிக்கை இந்த வருடம் அதிகரித்துள்ளதாக போக்குவரத்துப் பொலிஸாரின் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.
இந்த வருடத்தில் 43 ஆயிரத்து 464 பேர் மதுபோதையில் வாகனம் செலுத்தி கைதாகியுள்ளனர்.
மதுபோதையில் வாகனம் செலுத்துவோர் தொடர்பிலும் வீதிப் போக்குவரத்து முறைகளை மீறுவோர் தொடர்பிலும் மோட்டார் போக்குவரத்துச் சட்டமாம் கடுமையாக்கப்பட்டுள்ளது.
இவ்விரு குற்றச் செயற்பாட்டுடன் வாகனம் செலுத்துவோருக்கு எதிராக தண்டப்பணமாக 3,500 ரூபா முதல் 7,500 ரூபா வரையாக அதிகரிக்கப்பட்டுள்ளது. அத்துடன் 3 மாத சிறைத் தண்டனை அடங்கலாக ஒரு வருடத்துக்கு சாரதி அனுமதிப் பத்திரமும் இடை நிறுத்தி வைக்கும் வகையில் இந்தச் சட்டம் கடுமையாக்கப்பட்டுள்ளது.
மேலும் மதுபோதையில் வாகனம் செலுத்தி மற்றையோருக்குக் காயம் விளைவித்தால் அதற்காக 5 வருட சிறைத் தண்டனை அல்லது 6 ஆயிரம் முதல் 15 ஆயிரம் வரையான தண்டப்பணம் அறவிடப்படுவதுடன் சாரதி அனுமதிப் பத்திரமும்பாவனையிலிருந்து நீக்கப்படுமென போக்குவரத்து பொலிஸ் பிரிவு தெரிவிக்கின்றது. (ஒ-10)

# விவசாயிகளை தாக்கிய இராணுவத்தினர் கைது

கொழும்பு,ஜன.1
சேனைப் பயிர்ச் செய்கை யில் ஈடுபட்டிருந்த விவசாயி கள் மூவரைத் தாக்கினார்கள் என்ற குற்றச்சாட்டில் இராணுவச் சிப்பாய்கள் எட்டுப் பேரை



பொலிஸார் கைது செய்துள்ளனர்.
[illegible] இந்தத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது.
இந்தச் சம்பவம் தொடர்பில் அத்திமலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்றும் தெரிய வருகிறது.

## போதைச் சாரதிகள் 251 பேர் கைது

நேற்றுக்காலை 6 மணி வரை நிறைவடைந்த 24 மணித்தியாலங்களில் மதுபோதையில் வாகனம் செலுத்திய 251 பேர் பொலிஸாரால் கைதுசெய்யப் பட்டுள்ளனர்.
இவர்களில் 150 பேர் பயணிகள் போக்கு வரத்து சேவையில் ஈடுபடும் வாகனச் சாரதிகள் மற்றும் ஓட்டோ சாரதிகள் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## அதிகாரங்களில் மயங்கி விழும் போக்கு இனிப் பெரும் ஆபத்தைத் தரும்

சுற்றிச் சுற்றியும் சுப்பற்ரை கொல்லையுக்கை தான். தமிழர் பிரதேசங்களில் அடிக்கடி பேச்சு வழக்கில் இது உயர்ந்தும் பரவியும் உள்ளது.

ஆங்கில வருடப் பிறப்பான இன்றைய தினம், இதனை வைத்துச் சப்புக்கொட்ட இந்தப் பத்தி நினைத்தது ஏன், என்ற வினா உங்களிடம் உயர்ந்து நிற்பதனை உணர முடிகிறது.

நாட்டில் இன நல்லிணக்கத்தையும், சமாதான சக வாழ்வையும் கட்டி எழுப்புவதற்குக் கைகோத்துச் செயற்பட்டு ஆதரவு தருமாறு தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றத் தலைவர் இராஜவரோதயம் சம்பந்தனிடமும், வடக்கு மாகாண சபையின் தலைவர் சி.வி.விக்னேஸ்வரனிடமும் அன்புசால் அழைப்பு விடுத்திருந்தார், இந்த நாட்டின் ஜனாதிபதி அதி உத்தமர் மஹிந்த ராஜபக்ஷ.

இந்த (2014 ஆம்) ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் கடந்த இருபதாம் திகதியன்று, நாடாளுமன்றில் நிறைவேற்றப்படுவதற்குச் சற்று முன்னர் பேசும் போதே, கைகோத்துச் செயற்படக் கோரும் "விண்ணப்பம்" நாடாளுமன்ற வளாகத்தில், அதன் காற்றலையில் சுழன்று சுழன்று ஓங்காரம் செய்தது.

ஆனால், வெகு சௌகரியமாகவும், சாதுர்யமாகவும் அரசுடன் கைகோத்துச் செயற்படுவதற்கு, தமிழ் மக்களின்-தமிழ் பேசும் மக்களின்-உதவியை அவர்களின் பிரதிநிதிகளிடம் கோரிய நாட்டின் அதிஉயர் அரசியல் தலைவர்-

தமிழ் மக்களுக்கு உரிய உரிமைகளை வழங்குவதில் அரசிடம்-தம்மிடம்-உள்ள உத்தேச திட்டம் என்ன என்பது குறித்து, இன்னமும் வாயும் திறக்கவில்லை......!

போர் முடிவுற்று நான்கு (முழு) வருடங்கள் கடந்தேகிவிட்டன. ஆனால், போர்க் குற்றங்கள், இன அழிப்பு உட்பட்ட மனித உரிமைகள் மீறப்பட்டதற்கான எந்த வகை நியாயப்படுத்தல்களும் அரசிடம் இருந்து வெளிப்படவில்லை; வெளிப்படுத்தப்படவில்லை.

போர் முடிவுற்ற கையோடு, சில மாதங்களில் தமிழர்கள் உட்பட நாட்டு மக்களுக்கு அரசு அளித்த வாக்குறுதி, காலின் கீழ்ப் போட்டுக் கடாசப்பட்டது. ஜனாதிபதி அளித்த வாக்குறுதி, காற்றோடு காற்றாக பறக்கவிடப்பட்டது.

ஆனால், முழுப் பூசணியைச் சேற்றில் புதைக்கும் பாங் கில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் புலிகளைப் போன்றே செயற்படுகின்றனர். பேச்சுக்கு வருகிறார்கள் இல்லை-என்று பெரும் குற்றச்சாட்டு மட்டும் வேண்டா நோக்குடன் அவிழ்த்து விடப்பட்டது.

கீச்சு மாச்சுத் தம்பளம், கீயா மாயா தம்பளம் என்ற வகையிலான, நம்பிக்கை தர வல்லதற்ற, உபாயங்களின் மூலம் ஓர் இனத்தின் உரிமைகளை-பிறப்புரிமைகளை-நசுக்கும் முயற்சி மேலெழுவது மிகவும் கஷ்டம்.

இலங்கைச் சரித்திரத்தின் பிரகாரம் நோக்கினாலும், தமிழர்கள் தங்களுக்கெனப் பிராந்திய அரசுகளை நிறுவித் தம்மைத் தாமே ஆண்டவர்கள்; நிர்வகித்தவர்கள்.

அது காலங்கடந்த ஒன்றெனினும், தங்களுக்கு உரிய பிரதேசங்களைத் தாமே ஆள வேண்டும் என்று விரும்புவது ஜனநாயகக் கட்டமைப்புக்குள் வாழ விரும்புவது பஞ்சமா பாதகம் அல்லவே......!

அனைத்துலகத்தை ஏமாற்றும் மற்றொரு தந்திரமே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பேச்சுவார்த்தைக்கு வரு மாறு அரசு விடுத்துள்ள அழைப்பு என்பதில் ஒரு துளியும் சந் தேகம் இல்லை.

ஜெனிவா-மார்ச் மாதச்-சமரைச் சமாளிப்பதற்காக, கொழும்பில் அதே மாதத்தில் ஐக்கிய மாநாடு ஒன்றை நடத்தும் வியூகத்தையும் அரசு வகுத்துள்ளது என்பதனை அனைத் துலக நாடுகளால் புரிந்து கொள்ள இயலாமலா போகும்....?

தமிழ் அரசியல் தலைவர்கள் சிறிது காலம் பிந்தியே அரசின் மாயையைக் கண்டறிந்தாலும், எமது மக்கள் இவை தொடர்பில் படுசுட்டிகள். அரசின் அழைப்பை நிராகரித்தால், எமது அரசியல் வலு பலவீனமுறும் என்ற தேவையற்ற வாதப்பிரதி வாதங்கள் காலத்துக்கு ஒவ்வாதவை.

கடந்த வார முற்பகுதியில், வவுனியாவில் நடைபெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கூட்டத்தில், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாகாண சபை உறுப்பினர்கள்-

- அரசாங்கத்துடன் இப்போதைக்கு பேச்சுவார்த்தைக்குச் சாத்தியமில்லை.
- அனைத்துலக மத்தியஸ்தத்தின் கீழேயே இறுதிப் பேச்சு வார்த்தை.
- அரசின் உத்தேச தெரிவுக் குழுவையும் நிராகரிப்பது என்று தீர்மானித்திருந்தனர். அது மெச்சுதலுக்கு உரியது.

அரசின் அரசியல் படுகுழிக்குள், எமது அரசியல் தலைவர்கள் தப்பித் தவறி விழுந்தாலும், எமது மக்கள்-வாக்காளர்கள்-விட்டு வைக்கமாட்டார்கள். அரசியல் தலைவர்கள், அதிகா ரங்களில் மயங்கினால் அவர்களைத் தட்டி வீழ்த்துவார்கள். இந்தப் புதிய போக்கும் நோக்கும் மேன்மேலும் ஓங்கி வளரட்டும். அது ஜனநாயகத்தின் உச்சாணிக் கொம்பாக உயர்ந்து வளரட்டும்.

# சந்திரிகாவின் மீள் வருகை சாத்தியமா?

சேரலாதன்

தென்பகுதி அரசியலில் மாற்றங்கள் ஏற்படுவதற்கான அறிகுறிகள் தென்படத் தொடங்கியுள்ளன. மிகப் பலவீனமான எதிர்க்கட்சி ஒன்று நாடாளுமன்றத்தில் தொடர்கின்றமை இந்த நாட்டின் சாபக் கேடாகவே மாறியுள்ளது. ஒரு காலத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும், தற்போதைய உதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியும் மாறி, மாறி ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றிய நிலை முற்றாகவே இல்லாதொழிக்கப்பட்டுவிட்டது. ஐக்கிய தேசியக்கட்சி கழுதை தேய்ந்து கட்டெறும்பாக மாறிய கதைக்கு நிகராகி விட்டது. இந்த நாடு சுதந்திரம் பெற்ற பின்னர் முதலாவதாக ஆட்சியில் அமர்ந்த பெருமைக்குரிய ஐக்கிய தேசியக் கட்சிக்கா இந்த நிலையெனப் பலரும் பரிதாபப்படும் அளவுக்கு அந்தக் கட்சி தரம் இறங்கிக் காணப் படுகின்றது.

டி.எஸ்.சேனநாயக்க, டட்லி சேனநாயக்க, ஜே.ஆர்.ஜெயவர்த்தன, பிரேமதாஸ போன்றவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியைப் பிரதிநிதித்துவப் படுத்தும் ஆட்சித் தலைவர்களாக நாட்டை நிர்வகித்திருந்தனர். இவர்களால் தமிழ் மக்களுக்கு எந்தவிதமான நன்மைகளும் கிடைக்காத போதிலும் பெரும்பான்மையின மக்கள் பெரும் பயனைப் பெற்றனர்.



### ஐ.தே.கட்சிக்கு தொடரும் மங்குசனி

ஆனால் பிரபுத்துவ குடும்பத்தைச் சேர்ந்த ரணில் விக்கிரமசிங்க அந்தக் கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொண்டதன் பின்னர் ஐ.தே. கட்சிக்கு மங்கு சனி ஆரம்பித்துவிட்டது. கிராமப்புற மக்கள் ரணிலை ஏற்றுக் கொள்ளாததன் விளைவாகவே இந்த நிலை ஏற்பட்டதாகக் கூறுவோரும் உண்டு. மேலும் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த முக்கியஸ்தர்கள் பலர் ஆளும் கட்சியில் இணைந்து பதவிச் சுகத்தை அனுபவிக்கத் துணிந்தமையும் கட்சியின் வீழ்ச்சிக்கு அத்திபாரம் இட்டுவிட்டதெனலாம். மேலும் தேர்தல்களில் ஐக்கிய தேசியக் கட்சி தொடர் தோல்விகளை எதிர்கொண்டு வருவதால் அதன் ஆதரவாளர்கள் விரக்தி நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர் என்பதை எவருமே மறுக்க முடியாது. இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு கட்சித் தலைவர் பதவியிலிருந்து ரணிலை விலகி விடுமாறு பல தடவைகள் நெருக்குதல் கொடுக்கப்பட்ட போதிலும் அவர் அசைவதாகத் தெரியவில்லை. கட்சியை முற்று முழுதாக நிர்மூலம் செய்த பின்னரே விலகுவேன் என அவர் சபதம் பூண்டுள்ளார் போலும். அவர் தலைவராக இருக்கும்வரை ஐக்கிய தேசியக் கட்சியால் தலைதூக்க முடியாது என்றுதான் யதார்த்தம்.

### ஜனாதிபதித் தேர்தலில் சந்திரிகா

இந்த நிலையில் இடம்பெறப்போகும் ஜனாதிபதித் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதிக்குச் சவால் விடுமளவுக்கு ஆளுமை படைத்த ஒருவரைத் தேட வேண்டிய பொறுப்பு தென்பகுதி எதிர்க்கட்சிகளின் தலையில் சுமத்தப்பட்டுள்ளது. முன்னாள் இராணுவத் தளபதியான சரத்பொன்சேகாவும் இதில் ஒரு கண் வைத்துள்ளார் என்பது தெரிகின்றது. ஆனால் நீதிமன்றத் தீர்ப்பு அவருக்குப் பெரும் தடையை ஏற்படுத்தியுள்ளது. இந்த நிலையில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா களத்தில் குதிக்கவுள்ளதாக நம்பகமாகத் தெரிய வந்துள்ளது. இதற்குத் தொடர் தோல்விகளால் துவண்டு போயுள்ள ரணிலும் ஒப்புதல் அளித்து விட்டதாக நம்பகமாகத் தெரிகின்றது.

சந்திரிகா ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கான கதவுகளை அரசே திறந்து விட்டுள்ளது. தற்போதைய ஜனாதிபதி தொடர்ந்து பதவி வகிக்கும் வகையில் அரசியல் சாசனத்தில் மேற்கொள்ளப்பட்ட திருத்தம் சந்திரிகாவுக்கு வாய்ப்பாக அமைந்து விட்டது. இரண்டு தடவைகளுக்கு மேலாக ஒருவர் ஜனாதிபதியாகப் பதவி வகிக்கலாம் என்பது தற்போதைய ஜனாதி பதிக்கு மட்டுமல்லாது சந்திரிகாவுக்கும் பொருந்தும் என்பதை இங்கு குறிப்பிட்டாக வேண்டும்.

### ஏணியைத் தள்ளிவிட்டு ஆட்சியில் மஹிந்த

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சந்திரிகாவின் தயவு இருந்ததன் காரணமாகவே நாட்டின் அரசுத் தலைவராக உயரும் வாய்ப்பு ஏற்பட்டதாகக் கூறுவார்கள். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைப் பொறுத்தளவில் மஹிந்தவை விட சந்திரிகாவுக்கே அதிக உரிமை கள் காணப்படுகின்றன. இந்தக் கட் சியை ஆரம்பித்தவர் அவரது தந் தையார் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டார நாயக்க என்பதை அனைவரும் அறி வார்கள். அவரது மறைவுக்குப் பின் னர் கட்சியை வழிநடத்திச் சென்றவர் சந்திரிகாவின் தாயாரான ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க ஆவார். பின்னர் சந்திரிகாவும் நாட்டின் தலைவரா னார். பண்டாரநாயக்க குடும்பத்தைச் சேராத மஹிந்த ராஜபக்ஷ தமக்குக் கிடைத்த வாய்ப்புக்களைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டதால் நாட்டின் அதியுயர்



நிலைக்கு வர முடிந்தது. அவர் பதவிக்கு வந்த பின்னர் தம்மை ஏற்றி வைத்த ஏணியான சந்திரிகாவை எட்டி உதைத்துத் தள்ளிவிட்டார் என்றே கூற வேண்டும். நிறைவேற்று அதி காரங்கள் யாவும் அவரிடமும், அவரது குடும்பத்தினரிடமும் குவிந்து கிடப்பதால் அவரை எதிர்க்கும் துணிவு எவருக்குமே ஏற்படவில்லை. கட்சியினரிடம் கட்சித் தலைமை மீது அதிருப்தி ஏற்பட்ட போதிலும் அதனை வெளிக்காட்ட முடியவில்லை. இந்த நிலையில் சந்திரிகா புதிய அவதாரம் எடுத்து அரசியலில் குதித்துள்ளார்.

### மாற்றம் ஒன்றை எதிர்பார்க்கும் தென்னிலங்கை

எதிர்க்கட்சிகள் யாவும் பலவீனமான நிலையில் காணப்படும் நிலையில் சந்திரிகாவின் வருகை அவற்றுக்குப் புத்துணர்ச்சியை வழங்குமென எதிர்பார்ப்பவர்களும் இல்லாமல் இல்லை. ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி. என்ப ஆளுந்தரப்பினரால் திட்டமிடப்பட்ட



வகையில் பலவீனப்படுத்தப்பட்டுள்ளன. சரத்பொன்சேகாவின் கட்சி சொல்லத்தக்க வகையில் வளர்ச்சியடைந்ததாகத் தெரியவில்லை. இன்னமும் பலமான நிலையில் காணப்படும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தென்பகுதி அரசியலின் பக்கம் தலை வைத்துப் படுக்கும் சாத்தியங்களும் காணப்படவில்லை. எனவே ஆளும் கூட்டணியின் முக்கிய கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆதரவு சந்திரிகாவின் அரசியல் வெற்றிகளுக்கு நிச்சயம் கிடைக்கவேண்டும் என்ற கட்டாயமானதொரு நிலை தற்போது ஏற்பட்டுள்ளது.

தென்னிலங்கை மக்களின் மனப் போக்கிலும் மாற்றங்கள் தென்படுகின்றன. அதிகரித்த வாழ்க்கைச் செலவு, அரசியல்வாதிகளின் அடாவடித்தனங்கள், நீதி கிடைப்பதற்கு ஏங்கி நிற்கும் பரிதாப நிலை, இதற்கும் மேலாக ஒரு குடும்பத்தின் கைகளில் சிக்கித் தவிக்கும் அதிகாரம் என்பன போர் வெற்றிக்கு அப்பாலும் தென்பகுதி மக்களைச் சிந்திக்கத் தூண்டியுள்ளது. இந்த நிலையில் சந்திரிகா இவையெல்லாவற்றையும் தனது வெற்றிக்குச் சாதகமாக்கிக் கொள்வதற்கான வியூகங்களை வகுக்க வேண்டிய கட்டாயத்திலுள்ளார். இந்த நிலையில் தமிழ் மக்கள் எந்தவொரு தென்பகுதி அரசியல்வாதியையும் நம்புவதற்குத் தயாராயில்லை. ஏனென்றால் அவர்களிடமிருந்து சிறந்த அனுபவங்களைப் பெற்றவர்கள் அவர்கள்.

தென்பகுதியில் பெற்ற மாற்றம் மாறி மாறி ஆட்சியதிகாரம் தமிழர்களின் வாழ்வில் இன்னல்களை ஏற்படுத்திவந்தமையே பழைய வரலாறுகள் தற்போதைய அரசுத் தலைவர்கள் முதற்கொண்டு அனைத்து தென்பகுதி அரசியல்வாதிகளும் மாற்றாந்தாய் மனப்பான் மையுடனேயேதமிழர்களைநோக்கி வருகின்றனர்.

இந்த நிலையில் தென்பகுதியில் ஏற்படும் அரசியல் மாற்றங்கள் 'இராமன் ஆண்டால் என்ன இராவணன் ஆண்டால் என்ன' என்ற மன நிலைக்கே தமிழர்களை இட்டுச் செல்லும் என்பதில் சந்தேகமே இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதில் இருக்கிறது அழகு

சு.சாரங்கி

உலகம் பிறந்ததில் இருந்து ஒரு கணம் கூட அதன் இயக்கம் நின்றதில்லை. அப்படி ஓர் இயக்கம்! அப் படி ஒரு சுழற்சி! அப்படி ஒரு மாற்றம்! மாறுகின்ற உலகில் காண்பவைகளும் கண்ணோட்டமும் மாறிக்கொண்டே இருக்கின்றன!

ஆனால் அந்தந்தக் காலகட்டத்தில் வாழும் போது அழகு, அழகற்றவை என விமர்சிக்கிறோம். அது நியாயமாகவும் படுகிறது. உண்மையில் எது அழகு? தீப்பட்ட முகத்தையுடைய தாய் ஒருத்தி தனது குழந்தையைக் கொஞ்சி விளையாடும் போது, அந்த குழந்தைக்கு அந்தத் தாய்தான் உண்மையான அழகு. அந்த அழகு நாம் ஏற்றுக் கொள்ள வேண்டிய உண்மை! உலகிலேயே மிகச் சிறந்த அழகு தாய்மை!

வெறும் தோற்ற அழகை மட்டுமே எடை போடுகின்ற காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். ஆனால், நமது முன்னோர்கள், வரும் தலைமுறை எங்கே தவறிவிடுமோ என்று எக்காலத்திலும் பொருந்தும் வகையில் அழகு எது எனத் தமிழ் வரிகளில் அன்று அழுத்தம் திருத்தமாகக் கூறிச் சென்றிருக்கிறார்கள்.



கல்விக்கழகு பேசும் சொற்களில் குற்றமில்லாமை, செல்வம் படைத்தவர்களுக்கு அழகு சுற்றத்தினரைக் காப்பாற்றுவது. மன்னர்க்கு அழகு நீதி முறைப்படி நாட்டை ஆள்வது. வணிகர்க்கு அழகு நாணயம் தவறாமை. வேளாண் மக்களுக்கு அழகு உழவை உயிராக மதிப்பது. வருமுன் அறிவது மந்திரிக்கு அழகு. போர் வீரனுக்கு அஞ்சாமை அழகு. வறுமையிலும் ஒழுக்கம் அழகு. அறிவுடையோருக்கு அடக்கம் அழகு என்பது வெற்றி வேட்கை காட்டும் அழகின் அணிவகுப்பு.

அன்றைய பட்டியல் அழகு! இது நமக்குப் புரிவது கடினம்.

கண்ணுக்கு மையழகு. கவிதைக்குப் பொய்யழகு என்பார்கள்.

ஏற்றுக்கொள்ள எளிதான இந்த அழ குப் பட்டியல் நன்கு புரிகிறது! மென்மையான மனதுக்குள் உட்கார்ந்து மணியடிக்கிறதே! இன்று மட்டும் ஏன் காலழகு, கையழகு, உந்தியழகு, விரலழகு, நகம் அழகு என்று சுருங் கிவிட்டோம். புரியவே இல்லை. மலரின் அழகை ரசிக்கலாம். இதழ் இதழாகப் பிய்த்துப் பார்ப்பது ரசனையா? நிலவின் குளிர்ச்சியை ரசிக்கலாம், குழந்தைகளின் அழகை ரசிக்கலாம். இன்னும் எவ்வளவோ? அழகென்பது அவரவர் கண் ணோட்டத்திலுள்ளது என்பதை இப்படியும் சொல்லுவார்கள்.

> நிலவின் குளிர்ச்சியை ரசிக்கலாம், குழந்தைகளின் அழகை ரசிக்கலாம், இன்னும் எவ்வளவோ?அழகென்பது அவரவர் கண்ணோட்டத்திலுள்ளது என்பதை இப்படியும் சொல்லுவார்கள், மஜ்னுவின் கண்களோடு பார்த்தால் லைலாவின் அழகு புரியும் என்று!

மஜ்னுவின் கண்களோடு பார்த்தால் லைலாவின் அழகு புரியும் என்று!

பிறந்த குழந்தைக்குத் தாயழகு. பள்ளிப் பருவத்தில் கற்பிக்கும் ஆசிரியை அழகு. இளமைப் பருவத்தில் உள்ளத்தில் நிறைந்தவர் அழகு. முதுமையில் பேரப்பிள்ளைகள் அழகு. இப்படி நமக்குள்ளேயே எத்தனை மாற்றங்கள்.

இதில் எந்தவித மாற்றமும் இல்லை. அது போலவே ஈரத்து மலரழகு. எரிகின்ற சுடர் அழகு.

தூரத்துப் பச்சை அழகு. தொடுகின்ற வான் அழகு!.

ஓரத்துப் பார்வை அழகு. உனக்கு நீயே அழகு!!! - இந்த ரசனையிலும் அதிக மாற்றமில்லை! கடைசியில் சொன்னதில் மாற்றமிருந்தால் கண்ணாடிக்கு இங்கு வேலை இருந்திருக்காதே!

மிருகங்களின் அழகைக் கூட ரசிக்கக் கற்றுக் கொண்டுள்ள நாம், நம் இனத்தின் அழகு, மற்ற எல்லா உயிர்களிடமும் காட்டுகின்ற மனித நேயத்தில் தான் இருக்கிறது என்பதை ஏன் மறந்து விட்டோம்?

காட்டில் வாழும் மிருகங்களும், பசிக்கு மட்டுமே கொல்வது என்ற கட்டுப்பாட்டுடன் தமது இனத்தவரே அழகு என்று கூடிக் குலவிச் சேர்ந்து வாழ்கின்றன.

மிருகங்களின் அழகைக்கூட ரசிக்கக் கற்றுக் கொண்டுள்ள நாம் நம்முடைய இனத்தின் அழகு, மற்ற எல்லா உயிர்களிடமும் காட்டுகின்ற மனித நேயத்தில்தான் இருக்கிறது என்பதை ஏன் மறந்துவிட்டோம்?

---

# வேண்டாம் மன அழுத்தம்

பி.சுபீகா

மன அழுத்தமென்பது மனிதனுடைய உடலில் அன்றாடம் ஏற்படும் நோய்களைப் போன்ற ஒரு நோயாகும். ஆனால் இது ஒரு தற்காலிக நோய் என்பது குறிப்பிடத்தக்கது. உடம்பில் ஏற்படும் நோய்களுக்கு எவ்வாறு சிகிச்சை பெற வேண்டுமோ அவ்வாறே மன அழுத்தத்துக்கும் சிகிச்சை பெற வேண்டும்.

மன அழுத்தம் பொதுவாக அனைவருக்கும் ஏற்படக் கூடியது. பொதுவாக நாம் அன்றாடம் செய்கின்ற நடவடிக்கைகளுக்கு முகங்கொடுக்க முயலும் போது உடலியல் ரீதியாகவும் உளவியல் ரீதியாகவும் முகம் கொடுப்பதில் பிரச்சினை ஏற்படும். அந்தப் பிரச்சினைகளில் இனியும் ஈடுகொடுக்க அல்லது தீர்க்க முடியாது என்ற நிலை ஏற்படும் போது அதன் விளைவாக மனதில் ஏற்படும் ஒருவகையான பின்னடைவே மன அழுத்தமெனப் பொதுவாகக் குறிப்பிடப்படுகின்றது. மனிதனுக்கு ஏற்படும் நோய்களில் 70 வீதம் முதல் 90 வீதமானவை மன அழுத்தத்தின் காரணமாகவே ஏற்படுகின்றன என கண்டறியப்பட்டுள்ளது.

இந்த மன அழுத்தம் இருமுறைகளில் எற்படலாம்.

1. சுற்றுப் புறச் சூழலால் அல்லது சமூகத்தால் ஏற்படக்கூடிய மன அழுத்தம்.
2. வாழ்க்கைமுறை அல்லது சிந்தனைகளால் ஏற்படக் கூடிய மன அழுத்தம்.

எதிர்பார்ப்புகளை அதிகமாக ஏற்படுத்திக் கொள்வதே மன அழுத்தத்துக்கு முக்கிய காரணமாகும். மனிதன் எதிர்பார்ப்புக்களைக் குறைக்குபோது மன அழுத்தம் பெருமளவில் குறைகிறது. குழந்தைகளையும் பெரியவர்களையும் ஒப்பிடும் பொழுது இதனை நன்கு விளங்கிக் கொள்ளலாம். பொதுவாக குழந்தைகள் எதிர்பார்ப்புக்களைப் பெரியளவில் கொண்டிராதவர்கள். அவர்கள் எதையும் மகிழ்வான விடயமொன்றாகவே நோக்குகின்றனர். அதன் காரணமாகவே அவர்களால் மன அழுத்தமின்றி வாழமுடிகின்றது. ஆனால் பெரியவர்கள் எதிர்பார்ப்புக்களை அதிகம் ஏற்படுத்திக் கொள்பவர்கள், அத்தோடு எதிர்பார்ப்புக்கள் கிடைக்கப் பெற்றாலும் அவற்றில் பூரண திருப்தி காணாதவர்கள். இந்த நிலைமை அவர்களை மனஅழுத்தத்துக்கு ஆளாக்குகின்றது.

நவீன உளவியலாளர்களின் கருத்துப்படி இடைவிடாத வேலை, ஏமாற்றம், பயம், எரிச்சல், நிராகரிப்பு, கடின உழைப்பு, அளவுக்கதிகமான கவனம் போன்றவை மன அழுத்தத்தை ஏற்படுத்துவதோடு பிறப்பு, இறப்பு, திருமணம், திருமண முறிவுகள், பதவி உயர்வின்மை, கடன்தொல்லை, வறுமை, வேலையின்மை, நட்பு முறிவு, காதல் தோல்வி, குழந்தையின்மை போன்ற அன்றாட நடவடிக்கைகள் கூட மன அழுத்தத்தை ஏற்படுத்தும். அதுமாத்திரமன்றி சிலருக்கு போக்குவரத்து நெரிசல், சத்தம் போன்றவையும் மன அழுத்தத்தை ஏற்படுத்தும் காரணிகளாக அமையக் கூடும். மன அழுத்தம் பெரும்பாலும் தாமாகவே கற்பித்துக் கொண்ட தவறான சிந்தனைகளின் காரணமாகவும் தப்பிப்பிராயங்களின் காரணமாகவும் ஏற்படுகின்றது. அதுமட்டுமல்லாது சரியான திட்டமிடலின்றி வேலைகளில் ஈடுபடாதவர்களையும் நேர முகாமை அற்றவர்களையும் மன அழுத்தம் மிக விரைவில் பிடித்துக் கொள்கிறது. மேலும் மதுபானப் பாவனை, சிகரட் பாவனை, நேரத்துக்குச் சாப்பிடாமை, சரியான நித்திரையின்மை போன்றவை மன அழுத்தத்தை அதிகரிக்கக் காரணிகளாகக் கண்டறியப்பட்டுள்ளது.

அளவுக்கதிகமான கோபம், ஆவேசம் போன்றவையும் மன அழுத்தத்தின் வெளிப்பாடுகளே. அது மட்டுமல்லாது மன அழுத்தமானது பல நோய்களையும் எற்படுத்தக் கூடியது. குறிப்பாக ஆஸ்துமா, இடைவிடாத தடிமன், பாரிசவாதம், இரத்த அழுத்தம் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

அன்றாடம் ஏற்படுகின்ற சிறு சிறு பிரச்சினைகளுக்கு தீர்வு காணாமல் அதைப் பற்றிய சிந்தனையை செலுத்தும்போது சிறிய பிரச்சினைகள் பெரிய பிரச்சினையாக மாறி மனஅழுத்தத்தை ஏற்படுத்துகின்றன. மன அழுத்தம் உள்ளவர்கள் எப்பொழுதும் தீர்மானம் எடுப்பதில் தயக்கமுடையவர்களாகவும் வேலைகளில் கவனம் குறைந்தவர்களாகவும் ஞாபக மறதி உடையவர்களாகவும், எதிர்மறைச் சிந்தனையுடையவர்களாகவும் தெளிவற்ற சிந்தனை கொண்டவர்களாகவும் தவறான முடிவுகள் எடுப்பவர்களாகவும் காணப்படுவார்கள்.

மன அழுத்தம் ஏற்படுவதற்கு முன் காப்பதே சாலச் சிறந்தது. அதற்கான அத்திபாரத்தை குழந்தைப் பருவத்தில் இருந்து இட வேண்டும்.

> மனதில் ஏற்படும் ஒருவகையான பின்னடைவே மன அழுத்தமெனப் பொதுவாகக் குறிப்பிடப் படுகின்றது. மனிதனுக்கு ஏற்படும் நோய்களில் 70 வீதம் முதல் 90 வீதமானவை மன அழுத்தத்தின் காரண மாகவே ஏற்படுகின்றன என கண்டறியப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?


மேடம்: பிரச்சினைகளுக்கு யதார்த்தமான முடிவுகள் எடுப்பீர்கள். எதிர்பார்த்திருந்த தொகைகைக்கு வரும். உறவினர்களால் அனுகூலம் உண்டு. வியாபாரத்தில் வேலையாள்கள் உதவுவார்கள்.


**இடபம்**: பழைய கடன் பிரச்சனை அவ்வப்போது மனசை வாட்டும். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் உங்கள் பெயர் கெடாமல் பார்த்துக் கொள்ளுங்கள். தானுண்டு தன் வேலையுண்டு என்றிருக்கப் பாருங்கள்.


**மிதுனம்**:வீண் சந்தேகமும், மறைமுக விமர்சனங்களும் வந்து செல்லும். எதிர்பார்த்த உதவிகள் தாமதமாகக் கிடைக்கும். வியாபாரத்தில் வேலையாள்களால் பிரச்சினைகள் வரக்கூடும்.


**கடகம்**: நீண்டநாள்களாக நீங்கள் பார்க்க நினைத்த ஒருவர் உங்களைத் தேடி வருவார். புதிய தொழில் தொடங்கும் முயற்சி வெற்றி அடையும். உத்தியோகத்தில் சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள்.


**சிங்கம்**: எதிர்பார்ப்புகள் நிறைவேறும். பழைய உறவினர், நண்பர்களைச் சந்தித்து மகிழ்வீர்கள். சிலர் உங்களை நம்பி முக்கிய பொறுப்புகளை ஒப்படைப்பார்கள். பொதுக்காரியங்களில் ஈடுபடுவீர்கள்.


**கன்னி**: சில வேலைகளை விட்டுக் கொடுத்து முடிப்பீர்கள். கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். நீண்ட நாள் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பீர்கள். உத்தியோகத்தில் புதிய வாய்ப்புகள் தேடி வரும்.


**துலாம்**: சிலர் உங்கள் மீது வீண் பழி சுமத்த முயற்சி செய்வார்கள். வியாபாரத்தில் ரகசியங்கள் கசியாமல் பார்த்துக் கொள்ளுங்கள். உத்தியோ கத்தில் கூடுதலாக வேலை பார்க்க வேண்டிவரும்.


**விருச்சிகம்**: உங்கள் பலம் பலவீனத்தை உணருவீர்கள். வியாபாரத்தில் சில சூட்சுமங்களைப் புரிந்து கொள்வீர்கள். உத்தியோகத்தில் திறமைகளை வெளிப்படுத்த நல்ல வாய்ப்பு வரும்.


**தனுசு**: வழக்கில் வெற்றி பெறுவீர்கள். உங்களால் மற்றவர்கள் ஆதாயமடைவார்கள். விசேடங்களை முன்னின்று நடத்துவீர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரிகள் பாராட்டும்படி நடந்து கொள்வீர்கள்.


**மகரம்**: சிக்கனமாகச் செலவழித்து சேமிக்கத் தொடங்குவீர்கள். வேற்றுமதத்தவர் உதவுவர். எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்தி வரும். உத்தியோகத்தில் தலைமையின் நம்பிக்கையைப் பெறுவீர்கள்.


**கும்பம்**: எதிர்ப்புகளையும் தாண்டி முன்னேறுவீர்கள். பால்ய நண்பர்கள் தேடி வருவார்கள். வியாபாரத்தில் பங்குதாரரை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள்.


**மீனம்**: சவாலில் வெற்றி பெறுவீர்கள். அரசால் ஆதாயம் உண்டு. சொத்து சிக்கலில் சுமுகத் தீர்வு காண்பீர்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள். உத்தியோகத்தில் உயரதிகாரிகள் உங்களை மதித்துப் பேசுவார்கள்.

# வேதாந்தத் தத்துவம்



## விவேகானந்தரின் சிந்தனைகளிலிருந்து

'மனிதன் பிறப்பதுமில்லை; இறப்பதுமில்லை; சுவர்க்கத்துக்குச் செல்வதும் இல்லை. ஆன்மாவைப் பொறுத்த வரையில் மீண்டும் பிறப்பது என்பது பொய்' என்பது வேதாந்தியின் கொள்கை. ஒரு புத்தகத்தின் பக்கங்களைப் புரட்டுவதாக வைத்துக் கொள்வோம். திரும்புபவை புத்தகங்களின் பக்கங்களே; மனிதன் அல்ல. ஆன்மா எங்கும் நிறைந்தது; எனவே, எங்கே போவது? எங்கே வருவது? பிறப்பு, இறப்பு என்பன எல்லாம் இயற்கையின் மாறுதல்கள். இவை நமக்குள் ஏற்படுவதாக நாம் தவறாக நினைக்கிறோம்.

மறுபிறப்பென்பது இயற்கையின் பரிணாமம். உள்ளே இருக்கும் இறைவன் வெளித் தோன்றுதல்.

'ஒவ்வொரு பிறவியும் அதன் முற்பிறவி வினைகளை அடிப்படையாக கொண்டது; எனவே, முற்பிறவிகளை எல்லாம் காண முடியுமானால், நமக்கு விடுதலை கிடைத்துவிடும்' என்று வேதாந்தம் கூறுகிறது. விடுதலை பெற வேண்டும் என்னும் விருப்பம் குழந்தைப் பருவத்திலிருதே சமய நோக்கமாக உருப்பெறுகிறது. சில ஆண்டுகளில் எல்லா உண்மைகளுமே ஒருவனுக்கு விளங்கிவிடும். இந்தப் பிறவி நீங்கிய ஒருவன் மறு பிறவிக்காகக் காத்திருக்கும்போது புலன்களுக்கு அப்பாற்பட்ட உலகத்தில்தான் இருக்கிறான்.

ஆன்மாவைப் பற்றிப் பின்வருமாறு கூறலாம். இதைக் கத்தியால் வெட்ட முடியாது; ஈட்டியால் குத்தவோ, நெருப்பால் எரிக்கவோ, நீரால் நனைக்கவோ , அழிக்கவோ முடியாது. இது எங்கும் நிறைந்தது. எனவே, இது அழிந்துவிட்டது என்று தவறாக எண்ணி யாரும் அழ வேண்டாம்.

துன்பம் மிகும்போது, நல்ல காலம் வரும் என்று நாம் நம்புகிறோம். எல்லோருக்கும் நிலையான விடுதலை உண்டு என்பதே அடிப்படைத் தத்துவம். எல்லோருக்கும் அது கிடைத்தே தீர வேண்டும். விடுதலை பெற வேண்டும் என்ற விருப்பத்தால் தூண்டப்பட்டு நாம் போராடியே தீர வேண்டும்; விடுதலை பெற வேண்டும் என்ற விருப்பத்தைத் தவிர மற்ற எல்லா ஆசைகளும் கானல் நீரே. புண்ணியச் செயல் ஒவ்வொன்றும் இந்த விடுதலையின் தோற்றமே என்று வேதாந்தி சொல்கிறான்.

# ஏழு அறிவியல் உண்மைகள்



என்னதான் அறிவியல் வளர்ந்தாலும், மக்கள் சில விடயங்களைத் தவறாகப் புரிந்துகொண்டுள்ளனர்.

**வைரம்**

வைரம் என்பது மிக உயர்ந்த விலையுள்ள ஆபரணம் ஆகும். இது எங்கிருந்து கிடைக்கிறது என்று தெரியுமா? பூமிக்கு அடியில் புதைந்துள்ள இறுகிப்போன நிலக்கரியில் இருந்து தான் இந்த அரிய வகை வைரம் எமக்குக் கிடைக்கிறது. ஆனால் இது எந்த ஆழத்திலிருந்து கிடைக்கிறது என்பது எத்தைனை பேருக்குத் தெரியும்? அனைவரும் இது பூமிக்கு அடியில் 2 மைல் தொலைவில் கிடைக்கும் என்று கருதியிருப்பார்கள். ஆனால் பூமிக்கு அடியில் 90 மைல் தொலைவில் தான் இந்த வைரம் இருக்கும்.

**வெளவால்**

வெளவால் ஒரு வித்தியாசமான உயிரினம், இவைகளுக்கு கண்கள் இல்லை என்பது உண்மை தான். ஆனால் இந்த உயிரினத்தால் பார்க்கவும் முடியும். இவைகள் தங்கள் மீது சத்தத்தை எழுப்பி அதன்மூலம் தமக்கு எதிரில் என்ன பொருள்கள் இருக்கின்றன என்பதை உணர்ந்து கொள்ளும் தன்மை கொண்டவை.

**சுத்தமான தண்ணீர்**

சுத்தமான தண்ணீரில் அவ்வளவாக மின்சாரம் பாயாது. ஆனால் தண்ணீரில் நின்று மின்சாரக் கம்பியைப் பிடித்தால் மின்சாரம் பாய்கிறதே. அது ஏன் என்று கேட்கலாம். பொதுவாக தண்ணீரில் பல வகையான மினரல்கள் மற்றும் அழுக்குகள் படிந்திருப்பதால் அதில் மின்சாரம் பாய்கிறது. ஆனால் சுத்தமான நீரில் இப்படிப்பட்ட தாதுக்கள் இல்லாதிருப்பதால் மின்சாரம் பாய்வதில்லை.

**மருக்கள்**

மனிதனின் மருக்கள் உருவாகக் காரணம் தவளைகள் மற்றும் தேரைகள் என்று பலரும் கருதுகின்றனர். இது தவறான கூற்றாகும். இதற்குக் காரணம் தேரைகள் அல்ல, மனிதர்கள் தான், மருக்கள் இருக்கின்ற ஒருவருடன் கை குலுக்கினால் இவ்வாறான மருக்கள் தோன்றும் என்று அறிவியல் அறிஞர்கள் பலர் கூறியுள்ளார்கள்.

**தீக்கோழி**

தீக்கோழியை யாராவது அச்சுறுத்தினால் அவற்றின் தலையை மணலில் புதைத்துக்கொள்ளும் என்று சிலர் கூறுவார்கள். ஆனால் அவற்றை அச்சுறுத்தினால் அவைகள் இறந்தவைகளைப் போல செயற்பட்டு தப்பிக்க முயலுமாம்.

**மனித இரத்தம்**

மனிதன் இறந்த பின்பு, மனித இரத்தம் பார்ப்பதற்கு நீலமாகவோ அல்ல அடர்ந்த சிவப்பு நிறமாகவோ இருக்காது.

ஆனால் தோலின் வழியாகப் பார்த்தால் இரத்தமானது எப்பொழுதும் நீல நிறமாகவே காட்சியளிக்கும்.

**நாளை**

மார்கழி-18
வியாழக்கிழமை 02.01.2014
திதி: பிரதமை பி.ப.03.18 வரை
நட்சத்திரம்:
பூராடம் மு.ப.10.09 வரை
சுபநேரம்:
08.00- 09:30 வரை
இராகுகாலம்:02.02 -03.32 வரை

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | | 8 | | | 5 | | | 7 |
| 2 | 7 | | 8 | | | | | |
| | 6 | | 3 | 1 | | | | 9 |
| 9 | | 4 | | 6 | 2 | 1 | | |
| | 2 | | 4 | | 3 | | 9 | |
| | | 6 | 9 | 7 | | 3 | | 2 |
| 6 | | | | 5 | 9 | | 2 | |
| | | | | | 4 | | 3 | 5 |
| 5 | | | 7 | | | | | 1 |


சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டாங் கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 6 | 1 | 8 | 5 | 9 | 4 | 2 | 7 |
| 5 | 2 | 7 | 1 | 4 | 3 | 8 | 9 | 6 |
| 8 | 4 | 9 | 7 | 6 | 2 | 5 | 3 | 1 |
| 9 | 7 | 5 | 4 | 1 | 6 | 3 | 8 | 2 |
| 4 | 1 | 8 | 2 | 3 | 7 | 6 | 5 | 4 |
| 2 | 3 | 6 | 9 | 8 | 5 | 7 | 1 | 6 |
| 6 | 9 | 2 | 5 | 7 | 8 | 1 | 4 | 3 |
| 7 | 5 | 4 | 3 | 9 | 1 | 2 | 6 | 8 |
| 1 | 8 | 3 | 6 | 2 | 4 | 9 | 7 | 5 |

*நேற்றைய சுடோக்கின் விடை*

ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனைய வ[illegible]ற நிரப்ப.வேண்டியதே வேலை. சுடோகு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொரு[illegible] தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவன [illegible]ி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கணினியில் இருந்து கண்களைக் காக்க...

கணினி இன்று எமது வாழ்க்கையில் இணைந்த விடயமாகி விட்டது. ஆனால் அதிக நேரம் கணினியில் செலவிடுவோர், கண்களில் கவனமாக இருக்க வேண்டும். அதற்கான குறிப்புகள் இதோ...

1. முதலில் உங்கள் கணினி, மற்றும் தட்டச்சு செய்திட வைத்துள்ள அச்சடித்த தாள்களைச் சரியான இடங்களில் வைத்திட வேண்டும். உங்கள் கண்களில் இருந்து, கணினித்திரை, ஒரு கை அளவு தூரத்தில் இருக்க வேண்டும். உங்கள் கண்கள் பார்வைக் கோட்டுக்கு 20 பாகை கீழாக இருக்க வேண்டும். இதேபோல கை மணிக்கட்டு மற்றும் கால்கள் இருக்கும் இடங்களை வசதியாக, வலி எதுவும் ஏற்படுத்தாத வண்ணம் அமைத்துக்கொள்ள வேண்டும்.

2. அறையில் ஒளி அமைப்பு பல நேரம் எமது கண்களுக்குப் பலவகையில் சோதனைகளைத் தரும். அறை வெளிச்சமானது பரவலாக இருக்க வேண்டும். நேரடியாக உங்கள் மீதோ, கணினி மீதோ பாயக் கூடாது. இதனால் ஒளிப் பிரதிபலிப்பு தடுக்கப்படும். அதற்கேற்ற வகையில் கணினித்திரையின் வண்ணம் மற்றும் ஒளித்தன்மை அமைக்கப்பட வேண்டும்.

நீங்கள் கண்ணாடி அணிபவராக இருந்தால், பிரதிபலிப்புகளைத் தடுக்கும் பூச்சுகளை உங்கள் கண்ணாடியில், கண் மருத்துவரின் பரிந்துரையின் பேரில் அமைத்துக் கொள்ளலாம்.

3. கணினித் திரையைத் தொடர்ந்து பார்த்தவாறே பணிபுரிந்து கொண்டிருந்தால், அதிகபட்சம் ஒவ்வொரு 20 நிமிட இடைவெளியில், தலையைத் திருப்பி, வேறு வகை ஒளியில் பொருள்களைப் பார்க்க வேண்டும். நீங்கள் பார்க்கும் பொருளும் 20 அடி தூரத்தில் இருப்பது நல்லது. இதனால் உங்கள் கண்களின் பார்வை குவியும் தூரத்தில் மாறுதல் ஏற்படும். இது கண்களுக்குப் புத்துணர்வைத் தரும்.

பொதுவாக ஒரு நிமிடத்துக்கு நாம் 12 முறை கண் சிமிட்டுகிறோம். ஆனால் கணினியில் பணியாற்றுகையில், 5 முறை தான் சிமிட்டுகிறோம். இதனால் கண்களில் உலர் தன்மை ஏற்படுகிறது. எனவே கண்களை ஈரமாக்க தொடர்ந்து 20 முறை கண் சிமிட்டவும்.


ஒரே இடத்தில், நாற்காலியில் அமர்ந்து வேலை செய்வதால், உடல் இயற்கைக்கு மாறான நிலையில் வலுக்கட்டாயமாக அமைக்கப்படுகிறது. இதனால், ஒவ்வொரு 20 நிமிட இடைவெளியில், எழுந்து 20 அடிகள் எடுத்து வைத்துப் பின் திரும்ப பணியாற்ற வரவும்.

4. கணினியில் பணியாற்றுகையில், கண்களில் சோர்வு ஏற்பட்டால், அமர்ந்து பணியைத் தொடங்க முன்னரும், பின்னர் அவ்வப்போதும், கரங்கள் இரண்டையும் இணைத்துத் தேய்த்துக் கொள்ளுங்கள். இளஞ்சூடு பரவிய பின்னர், அதனைக் கண்களில் ஒத்தி வைத்து எடுங்கள்.

இது ஓர் இதமான சூட்டைக் கண்களுக்குத் தரும். வெந்நீரில் நனைத்த துணியைக் கண்களில் ஒற்றி எடுப்பது போன்ற நிலையைக் கண்களுக்கு வழங்கவே இந்த ஆலோசனை. அப்படியே கரங்களைக் கொண்டு கண்களை 60 விநாடிகள் பொத்தி வையுங்கள். விநாடிகளை உங்கள் மனதுக்குள் எண்ணுங்கள். இதனால் புது உற்சாகம் கிடைக்கும்.

5. இடை இடையே எழுந்து சென்று, கண்களை மூடிய நிலையில், தண்ணீரை எடுத்து முகம் மீது அடிக்கவும். இதனால் கண்களுக்கும், உங்களுக்கும், முழுமையான புத்துணர்ச்சி கிடைக்கும்.

6. ஊட்டச்சத்து மிகவும் அவசியம். விற்றமின் ஏ, சி மற்றும் இ ஆகியவை உள்ள உணவுப் பொருள்களை அதிகம் எடுத்துக் கொள்ளவும். கரட், தக்காளி, பழங்கள், வெள்ளரிக்காய் ஆகியவற்றை நறுக்கி அலுவலகத்துக்கு எடுத்துச் சென்று அவ்வப்போது சாப்பிடலாம்.



# நண்பனைக் கைவிடாத நாய்

காரொன்றில் மோதுண்டு உயிரிழந்த தனது நண்பனான நாயை மற்றொரு நாயொன்று இரவு முழுவதும் உடலை உறைய வைக்கும் குளிரையும் பொருட்படுத்தாது காவல் காத்த நெஞ்சை நெகிழ வைக்கும் சம்பவம் சீனாவில் இடம்பெற்றுள்ளது.

நிங்ஜஸியா ஹூயி பிராந்தியத்தில் யின்சுவான் நகரில் சனசந்தடி மிக்க வீதியில் இனந்தெரியாத நபரொருவரால் செலுத்தப்பட்ட காரால் மோதுண்டு குறிப்பிட்ட நாய் உயிரிழந்தது.

இந்த நிலையில் அந்த நாயின் உடலின் அருகில் -13 பாகை செல்சியஸ் அளவான உறைய வைக்கும் குளிரையும் பொருட்படுத்தாது மற்றைய நாய் காவல் இருந்துள்ளது.

நாயின் பரிதாப நிலையை அவதானித்த அந்தப் பிராந்தியத்திலுள்ள உணவகமொன்றைச் சேர்ந்த ஊழியர்கள் இறந்த நாயை அருகிலிருந்த பூங்காவில் உள்ள மரமொன்றுக்குக் கீழ் புதைத்தனர். உணவக ஊழியர்கள் நாயின் உடலைப் புதைக்கும் வரை மற் றைய நாய் அங்கிருந்து நகராமல் அங்கேயே இருந்துள்ளது.



# பெண்கள் மாரடைப்பை தடுப்பது எப்படி?

மாரடைப்பு பெண்களை அதிகமாக நெருங்காது என்ற காலம் ஒன்று இருந்தது. இன்று அனைத்திலும் ஆண்களுக்கு சரிநிகர் சமானமாக சாதனை படைக்கும் பெண்களுக்கும் ஆண்களுக்கு சமமாக மாரடைப்பு அபாயமும் அதிகரித்துள்ளது. பெண்கள் கருவுறும் காலம், மாதவிடாய் காலங்களில் ஈஸ்டோ ஜன் என்ற ஹார்மோன் சுரக்கிறது.

இதன் காரணமாக ரத்தக்குழாய் சுருங்குவது தவிர்க்கப்படும். ரத்தத்தில் கெட்ட கொழுப்பு குறைத்து நல்ல கொழுப்பு அதிகரிக்கும். இதனால் பெண்களுக்கு ரத்த ஓட்டம் சீரடையும். மாரடைப்பு வருவது தவிர்க்கப்படும். இதன் காரணமாக பெண்களுக்கு மாரடைப்பு ஏற்படும் விகிதம் குறைவாக இருந்தது.

இன்றைய கால கட்டத்தில் உணவு வகைகள், வாழ்க்கை முறை. பழக்க வழக்க மாற்றம் காரணமாக பெண்களுக்கும் மாரடைப்பு ஏற்படுவது அதிக ரித்துள்ளது. ஆண்களைப் போலவே பெண்களும் மாரடைப்பால் உயிரிழக்கும் விகிதம் 50-க்கு 50 என்ற அளவில் அதிகரித்துள்ளது என்று சமீபத்தில் நடந்த ஆய்வில் தெரியவந்துள்ளது.

15 முதல் 20 வயது வரை உள்ள இளம் பெண்களும் தற்போது மாரடைப்பால் உயிர் இழக்கிறார்கள் என்ற அதிர்ச்சி தகவலும் வெளியாகி இருக்கிறது. இதைத் தடுப்பது எப்படி?

கொழுப்புசத்து அதிகம் உள்ள உணவுகளைச் சாப்பிடுவதும், உடல் உழைப்பு குறைந்து விட்ட தும், சரிவிகித உணவில் அக்கறை காட்டாததும் பெண்களிடம் மாரடைப்பு விகிதம் அதிகரிப்பதற்கு காரணம் என்று கண்டறியப்பட்டுள்ளது. எனவே பெண்கள் இதை உணர்ந்து வாழ்க்கைமுறையை மாற்றி அமைத்தால் மாரடைப்பு வராமல் தடுக்கலாம்.

அலுவலகங்களுக்கு செல்லும் பெண்களும், வீட்டில் சமையல் செய்பவர்களும் தங்கள் உடல் உழைப்புக்கு தேவையான சக்தியைத் தரும் உணவுவகைகளைத் தேவையான அளவு மட்டுமே சாப்பிட வேண்டும். அதிகமாகசாப்பிடக்கூடாது. காலை உணவாக இட்லி, தோசை, பழ வகைகளைத் தேவைக்கு ஏற்ப அளவோடு சாப்பிட வேண்டும்.

காலை உணவு சாப்பிடாமல் இருக்கக் கூடாது. மதியம் குறைந்த அளவு சாப்பிட வேண்டும். இரவில் அதைவிட குறைவாகச் சாப்பிட வேண்டும்.

தினமும் குறைந்தது 3 லீற்றர் சுத்தமான தண்ணீர் குடிக்க வேண்டும். இதை கடைப்பிடித்தால் உடல் எடை அதிகமாவதை தவிர்க்கலாம். பெண்கள் உடல்நிலையை நன்றாக பராமரிக்க மனநிலையைச் சரியாக வைத்துக் கொள்ள வேண்டும். தினமும் அரைமணி நேரமாவது பயிற்சி செய்ய வேண்டும்.

நடை பயிற்சி, உடற்பயிற்சி, நீச்சல், சைக்கிள் ஓட்டுதல் இதில் ஏதாவது ஒன்றை வாரத்தில் 5 நாள்களாவது செய்ய வேண்டும். இதுதவிர யோகா, தியானம் போன்றவற்றையும் செய்தால் மனநிலை சீராகும். இதனால் மாரடைப்பு அபாயம் நீங்கும். உடற்பயிற்சி ரத்த ஓட்டத்தை சீராக்கிமன அழுத்தத்தைகுறைக்கும்.

சாப்பாட்டில் கால்பங்கு அரிசி, பாதி அளவு காய்கறி, பழங்கள், கால் பங்கு மீன், பருப்பு, முட்டை போன்ற புரதச்சத்து இருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டும். இனிப்பு, வறுத்த உணவுப் பண்டங்களைத் தவிர்க்க வேண்டும். குறிப்பாக சோடா, கோக், பெப்சி போன்ற பானங்களையும், தேநீரையும் குறைத்துக் கொள்வது உடல் நலத்துக்கு நல்லது.

இறைச்சி சாப்பிட விரும்புகிறவர் கள் வாரம் ஒருமுறை கோழி இறைச்சி வாங்கி சமைத்து சாப்பிடலாம். ஆடு, மாடு, பன்றி இறைச்சியை முடிந்த வரை சாப்பிடாமல் இருப்பது நல்லது. கலப்புத் தானியங்கள், விதைகளில் உள்ள பருப்பு வகைகளில் ஊட்டச் சத்துகள் அதிகம் கொண்டவை. முந்திரி போன்றவற்றை குறிப்பிட்ட அளவு சாப்பிட்டு வந்தால் ரத்தத்தில் நல்ல கொழுப்பு அதிகரிக்கும்.

கொழுப்பு இல்லை என்று உணவு பொருள்களை அதிகம் சாப்பிடுவதும் பிரச்சினையை உருவாக்கும். தேவைக்கு அதிகமான உணவு கல்லீரலில் கொழுப்புச் சத்தாக மாற்றப்பட்டு உடலின் பல்வேறு பகுதிகளில் சேமிக்கப்படும். இதனால் பெண்களுக்கு வயிறு, இடுப்பு, தொடை பகுதியில் கொழுப்பு சேகரிக்கப்பட்டு உடல் பருமன் அதிகரிக்கும்.

இதனால் ரத்தத்தில் கொழுப்பு அதிகமாகி ரத்தக் குழாயில் படிந்து மாரடைப்பு ஏற்படும் சூழல் உருவாகும். சுவாசிக்கும் காற்று, குடிக்கும் தண்ணீர் தவிர எந்த உணவையும் தேவைக்கு அதிகமாக சாப்பிட்டாலும், அந்த அளவு கலோரிசக்தி செலவாகும் வரை உடல் உழைப்பு வேண்டும். இல்லையென்றால், அதிக உணவு கொழுப்பாக மாற்றப்பட்டு உடல் பருமனை அதிகரிக்கச் செய்துவிடும். இதனால் மூட்டுவலி, நீரிழிவு நோய், ஆஸ்துமா போன்ற கோளாறுகள் ஏற்படும். உடல் பருமன் ஏற்பட்டால் அதிக வேலை செய்ய முடியாது. உடற்பயிற்சி செய்ய முடியாது.

இவற்றை ஆரம்பத்திலேயே தடுக்க உணவுக் கட்டுப்பாடு, சரிவிகித உணவு, மனதை மகிழ்ச்சியாக வைத்துக் கொள்வது, உடற்பயிற்சி ஆகியவை அவசியம். இவற்றை முறையாகக் கடைப்பிடித்தால் ரத்த ஓட்டம் சீராகும். ரத்தக் குழாயில் அடைப்பு ஏற்படாது. மாரடைப்பு வராது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழிவு நீர் அகற்றப்படுமா?



யாழ்ப்பாணம். ஜன.1
கச்சேரி நல்லூார் மூத்த விநாயகர் கோயில் வீதியில் கழிவு நீர் தேங்கி நிற்பதால் டெங்கு நுளம்பு பெருகும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.
இது குறித்து அந்த வீதியில் வசிக்கும் பொதுமக்கள் தெரிவிக்கையில்;
"மூத்த விநாயகர் வீதி யாழ்.மாநகர சபைக்கு உட்பட்ட பகுதி. இதனால் எமது வீதிப் பிரச்சினைகள் குறித்து அவர்களிடமே முறையிட முடியும். டெங்கு நுளம்புகள் பெருகுவதற்கு ஏற்றாற் போல் காணப்படும் கழிவு நீர்த் தேக்கம் தொடர்பில் நாம் மாநகர சபைக்கு இரு நாள்கள் தெரிவித்திருந்தோம். ஆனால் அவர்கள் எந்தவித நடவடிக்கைகளும் எடுக்கவில்லை' எனத் தெரிவித்தார்.
இந்த நிலையில் குறித்த வீதியில் வசிக்கும் நபரொருவர் யாழ்.மாநகர ஆணையாளரை நேரில் சந்தித்து முறைப்பாடு தெரிவிக்க முற்பட்ட போது ஆணையாளர் அவரைப் பொருட்படுத்தாமல் பின்னர் வந்து சந்திக்குமாறு தெரிவித்ததாகக் கூறப்படுகின்றது.
வீதியில் ஏற்பட்டுள்ள இந்தக் கழிவு நீர்த் தேக்கத்தை உரிய நடவடிக்கை எடுத்து அகற்றி டெங்கு நோயிலிருந்து தம்மைப் பாதுகாக்குமாறு இந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (ந-10)

## நூலகமும் தகவல் விஞ்ஞானமும் கற்கை நெறிக்கு விண்ணப்பிக்கலாம்

நூலக தகவல் விஞ்ஞான டிப்ளோமா கற்கை நெறி தரம் ஒன்றுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இந்தக் கற்கை நெறி யாழ்ப்பாணம் உள்ளிட்ட நாடளாவிய ரீதியில் 6 நிலையங்களில் நடத்தப்படுகின்றது.
கற்கை நெறிக்கான தகைமைகளாக ஏற்றுக் கொள்ளப்பட்ட பல்கலைக் கழகம் ஒன்றில் பெறப்பட்ட பட்டம் அல்லது ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் மூன்று பாடங்களில் சித்தி அத்துடன் க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையில் மொழி, கணிதம் மற்றும் ஆங்கிலத்தில் சித்தியுடன் 6 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.
கற்கை நெறிக்கான கட்டணம் ரூபா.12,500 ஆகும். வார இறுதி நாள்களில் விரிவுரையுடன் கூடிய வகுப்புக்கள் நடைபெறும். விண்ணப்பப் படிவங்களையும், கற்கை நெறி தொடர்பான விவரங் களையும் www.slla.org.lk என்னும் இணையத் தளத்தில் பார்வை யிடலாம். (ந)

## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 07 ★ 04 ★ 1934
மறைவு 01 ★ 01 ★ 2010

**காசிப்பிள்ளை கணேசரத்தினம்**

நீங்கள் இவ் உலகை விட்டு நீங்கி
ஆண்டுகள் நான்கு சென்றாலும்
எம்மை விட்டு நீங்காத உங்கள் நினைவுகள்
என்றும் பசுமையாகவே இருக்கும்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றேன்.

பாடசாலை வீதி, திருநெல்வேலி. — மனைவி.
(41775)(2.6.11)

## வவுனியாவில் ஆஞ்சநேயர் ஜெயந்தி விழா

வவுனியா. ஜன.1
வவுனியாவில் ஆஞ்சநேயர் ஜெயந்தி விழா மார்கழி மூல நட்சத்திரமாகிய இன்று முதலாம் திகதி இரு ஆலயங்களில் கொண்டாடப்படுகிறது.
வவுனியா தேக்கவத்தை வீர மங்கள பஞ்சமுக ஆஞ்சநேயர் ஆலயத்தில் முற்பகல் 10 மணிக்கு அபிஷேக ஆராதனைகளுடன் ஜெயந்தி விழா இடம்பெறும். விழாவில் சிறப்பு நிகழ்ச்சியாக தமிழருவி த.சிவகுமாரன் "ராமானுஜன்" என்னும் பொருளிலும், வவுனியா, கூமாங்குளம் சித்திவிநாயகர் ஆலயத்தில் இரவு 7 மணிக்கு இடம் பெறும் விஷேட பூஜை வழிபாடுகளைத் தொடர்ந்து "அஞ்சனை புதல்வன்" என்னும் பொருளிலும் தெய்வீகப் பேருரையாற்றுவார். (ஓ-402)

## மலரும் உதிர்வுகள்



அமரர் **ஆறுமுகம் இராஜகோபால்**
(செம்பியன் செல்வன்)

மலர்வு 01.01.1943 — உதிர்வு 20.05.2005

இன்பமும் துன்பமும் நம் வாக்கு
புதிதில்லை துயர் களைத்து எழுந்து
விட்டேன் மானிடம் வாழ்வற
சேவையாளியாய் பாதங்கள்
பதிக்கின்றேன் தமிழ் எழுத்து
உள்ளவரைஉன் பெயரும் தமிழ் ஏட்டின்
ஒரு மூலையில் பதிவாகும்
பூவுடன் கூடிய நாரும் மணம் பெறும்
பூவையரின் துயர் துடைத்து
நாரினால் மாலையாக்குவேன்.

புவனா. இராகுலன்.
அத்தியடி, யாழ்ப்பாணம். (41827)(3.6.4)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றிநவிலலும்



அமரர் **வேலுப்பிள்ளை ஜெயக்குமாரி** (சலோமி)

கடந்த 02.12.2013 திங்கட் கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்த வேலுப்பிள்ளை ஜெயக்குமாரி (சலோமி) அவர்களின் 31ஆம் நாள் நினைவஞ்சலி இன்று (01.01.2014) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். அந்நிகழ்விலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் மரணச்சடங்கில் பங்குபற்றி உதவிபுரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

செல்வாசா
மாலிசந்தி.
துன்னாலை தெற்கு, கரவெட்டி. (43012)(3.6.5)
குடும்பத்தினர்.

## 16ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் **சின்னப்பொடி திரவியம்**

திதி: அமாவாசை - 01.01.2014

தோற்றம் 01.01.1944
மறைவு 18.12.1998

ஆண்டுகள் பதினாறு ஆயிடினும் அன்பு முகம் மறக்கவில்லை
ஈன்று உம் நினைவாய் இருந்தே நாம் தவிக்கின்றோம்
தூண்டா மணிவிளக்காய் ஒளி வீசிப் பிரகாசித்தீர்! இன்று
வேண்டித் துதித்தே நாம் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

சாந்தா தோட்டம்,
ஆவரங்கால், புத்தூர்.

உம் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
(41707)(45.6.3)

## வாராந்த நிகழ்வில் இம்முறை மங்கல இசை

தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடத்தி வரும் வாராந்த நிகழ்வு வரிசையில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு மங்கல இசை இடம்பெறும். மறவனூர் ரி.எம்.வாசகர் குழுவினர் இந்த மங்கல இசையை வழங்குவார்கள். (ந-173)

## 19ஆம் ஆண்டு நினைவலைகள்



அமரர் **சின்னையா இரத்தினம்**
(பிரபல வெற்றிலை வியாபாரி சாவகச்சேரி)

திதி: 02.01.2014

அன்னை மடியில் 25 ★ 06 ★ 1925
அம்மன் திருவடியில் 01 ★ 01 ★ 1995

அன்பே உருவாய் ஆனவர் நீங்கள்—எமை
அள்ளி அணைத்த ஆண்டவர் நீங்கள்
ஆண்டுகள் பத்தொன்பது ஆனதுவோ இன்று
ஐயாவே நீர் எமைப் பிரிந்துதான் சென்று
என்றுமே நீங்கள் எம்மோடு வேண்டும்
எமக்கென்றும் ஆசிகள் தந்திடவேண்டும்—உமை
என்றுமே மறவாத அன்போடு எந்நாளும்
குலதெய்வம் அம்மனின் பணிசெய்து வாழ்வோம்.

என்றும் உங்கள் நினைவுடன்
மனைவி, மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

முத்துமாரி அம்மன் கோயில்,
பெருங்குளம் பிள்ளையார் வீதி,
கல்வயல்-சாவகச்சேரி
(41758)(3.6.4)

## திருவாசக முற்றோதல்

தம்பசிட்டி, பண்டாரி அம்மன் கோயிலில் இன்று புதன்கிழமையும், தம்பசிட்டி ஞான வைரவர் ஆலயத்தில் நாளைவியாழக்கிழமையும், நாவலடி வீரபத்திரர் ஆலயத்தில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமையும் காலை 7 மணிக்கு இடம் பெறும் விசேட பூசைகளைத் தொடர்ந்து திருவாசக முற்றோதல் நடைபெறவுள்ளது. மேலைப் புலோலி சதாவதானி கதிரைவேற் பிள்ளை அறநெறிப் பாடசாலை யினரால் இந்த முற்றோதல் நிகழ்த்தப் படும். (ஓ-173)

## ஆணையாளராக பதவி உயர்வு

யாழ்ப்பாணம். ஜன.1
உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் யாழ். பிராந்திய பிரதி ஆணையாளர் பாலசுந்தரம் சிவாஜி அரச சேவை ஆணைக் குழுவால் அண்மையில் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு இறைவரிச் சேவையின் புதிய சேவை பிரமாணக் குறிப்பில் உள்வாங்கப்பட்டு தரம் 1 இல் உள்நாட்டு இறைவரி ஆணையாளராகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளார்.
கடந்த 3 ஆண்டுகளாக யாழ். பிராந்திய அலுவலகத்தில் பிரதி ஆணையாளராகப் பணி புரியும் சிவாஜி ஏனைய பிராந்திய அலுவலகங்களுக்கு ஈடாக இந்தப் பிராந்திய அலுவலகத்தையும் கொண்டு வந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஓ)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் நன்றிநவிலலும்.



அமரர் **கந்தசாமி சேதுராஜா**
(சேது அங்கிள்)

மலர்வு 22★11★1948
உதிர்வு 02★12★2013

இனிய மொழி பேசி இல்லறத்தை
இனிதாக நடத்தி திட்டங்கள்
போட்டு திடமாக வாழ்வதற்கு
முன் திசைமாறிப் போனதென்ன
மாதம் முப்பத்தொன்று ஆனாலும்
மாறாது உம் நினைவு


02.12.2013 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலை வரின் பிரிவுத்துயர் கேட்டுப் பதறி அடித்து வந்த வ/சைவப்பிரகாச மகளிர் கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், குருமன்காடு காளியம்மன் தேவஸ்தான பரிபாலன சபையினருக்கும் எல்லா வழிகளிலும் உதவி நல்கிய உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் மற்றும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்த அனைவருக்கும் எமது அன்பு கலந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதோடு, நாளை (02.01.2014) வியாழக்கிழமை அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் அதனைத் தொடர்ந்து குருமன்காடு காளியம்மன் தேவஸ்தான கலாசார மண்டபத்தில் மதியபோசன நிகழ்வும் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்துகலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி மற்றும்
குடும்பத்தினர்.
(43568)(3.6.4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்டு இருபதின் நினைவஞ்சலி

பிறப்பு 08.10.1906 — பிறப்பு 14.10.1916



இறப்பு 13.12.1993 — திதி: 01.01.2014 — இறப்பு 21.12.1993

**கதிரித்தம்பி இளையதம்பி (ஏரம்பு)** — **இளையதம்பி தங்கம்மா (மகேஸ்வரி)**

இரண்டு தசாப்தங்கள் கடந்தாலும் எம் நினைவுகள் இப்பவும் உங்களுடனே
கரையில்லாத கல்வியைக் கற்பித்தீர்கள் இருந்தும் கடமை என்ற செயலைக்
காற்றிலே பறக்க விட்டோம் அண்மையில் பிரிந்து வாழ்ந்தாலும்
போர் வடுக்களினால் போக்குவரத்தின்றி தடுமாறும் வேளையில்
எங்களை எண்ணி காலனின் காலடியில் மடிந்தீர்கள்
இறப்பும் பிறப்பும் இயற்கையின் வடிவம் ஆகவே
இவ் வையகத்துள் வாழ்வாங்கு வாழ வைத்த
எம் அன்புத் தெய்வங்களை வாழ்த்தி வணங்கி
உங்கள் வழியே எங்கள் வழியும் எனும் ஆன்ம திருப்தியோடு
ஆத்மா சாந்தியடைய கிராஞ்சி முருகனை வேண்டுகின்றோம்.

"முருகன் பதி, புங்குடுதீவு - 01 — குடும்பத்தினர்.

(41848) (6.3.2)

## வீதி மின்குமிழ்கள் ஒளிருமா?

சங்கானை.ஜன.1

வலி.மேற்கில் வட்டுக்கோட்டை, மூளாய் போன்ற இடங்களில் உள்ள வீதியோர மின் குமிழ்கள் ஒளிராத நிலையில் உள்ளன.

குறிப்பாக சங்கானையில் இருந்து பொன் னாலை வரை வீதியோர மின்குமிழ்கள் எதுவும் ஒளிராத நிலையில் பல நாள்களாகக் காணப் படுகின்றன.

இதுபற்றி மின்சாரசபை, பிரதேச சபை அதிகாரி கள் உட்பட பலருக்கும் தெரியப் படுத்தியும் அவற் றைச் சீர்செய்து கொள்ள எந்தவித நடவடிக்கை களும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை எனப் பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். இதனால் இரவு நேரங்களில் போக்குவரத்துச் செய்வதிலும் தாம் பெரும் இடர்களை அனுப விப்ப தாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர். (ரு-29)

## கலை இலக்கிய விழா

வல்வெட்டித்துறை கலை, கலாசார இலக்கிய மன்றம் நடத்தும் மாபெரும் கலை இலக்கியப் பெருவிழா இன்று புதன்கிழமை நெடியகாடு திருச் சிற்றம்பலப் பிள்ளையார் ஆலய வீதியில் பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

கலை, கலாசார இலக்கிய மன்றத் தலைவர் ர.மகிந்தன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக பேராசிரியர் என்.சண்முகலிங்கன், சிறப்பு விருந்தினராக வல்வை ஆவணக் காப்பக காப்பாளர் பா.மீனாட்சி சுந்தரம், முன்னாள் கிராம சேவையாளர் சி.சிவபாலசிங்கம் ஆகியோர் கலந்துகொள்வர். நிகழ்வில் கலைஞர் கௌரவிப்பு, நெய்தல் இதழ் வெளியீடு, கலை நிகழ்வுகள் என்பன இடம் பெறும். (ரு)

## கருடபுராணம் நூல் வெளியிடப்பட்டது

காரைநகர், ஜன.1

வியாவில் ஐயனார் ஆலயத்தின் வெளியீடான கருடபுராண நூலின் வெளியீட்டு விழா அண்மையில் ஆலய மண்டபத்தில் வடமா காணக் கல்வியமைச்சின் பிரதிச் செயலாளர் ப.விக்கினேஸ்வரன் தலைமையில் நடை பெற்றது.

காலை 6 மணி தொடக்கம் மகரஜோதிப் பெரு விழா நடைபெற்று தொடர்ந்து நூல் வெளியீட்டு விழா நடைபெற்றது. நூலின் முதற் பிரதியை இ.ச.பே.நாகரட்ணத்திடமிருந்து புரவலர் சண்முகம் சிவஞானம் பெற்றுக்கொண்டார். (ரு-250)

## விபத்தில் காயம்

வாகன விபத்தில் சிக்கி காயம டைந்த இளம் குடும் பஸ்தரொருவர் சாவகச்சேரி ஆதார வைத்திய சாலை யில் அனுமதிக்கப்பட்டுள் ளார். இந்தச் சம்ப வம் கடந்த ஞாயிற்றுக் கிழமை இடம்பெற் றது. மிருசுவில் தவ சிகுளத்தைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை சிவ சக்திவேல் (வயது-29) என்பவரேகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட் டுள்ளவராவார். (ரு-9)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் சின்னத்தம்பி சுப்ரமணியம்

பிறப்பு 26.07.1932 — இறப்பு 11.01.2013



ஆண்டொன்று ஆனதுவோ
ஆனாலும் ஆறவில்லை எம் துயரம்
மாறாத நினைவுகளால்
மனம்வெந்து மாய்கின்றோம்
அழகிய உங்கள் சிரித்த முகம்
என்றும் எம் நெஞ்சங்களில்
குடியிருக்க அன்புத் தெய்வமே!
ஆண்டவன் அடியில் சாந்தி பெறுங்கள்.

ஆதி கோயிலடி,
வல்வெட்டித்துறை.

(43033) (7.6.3)

077 019 9534, 077 667 9196 — குடும்பத்தினர்.

# 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் S.K.தியாகராசா (தியாகு)

(பிரபல புகையிலை வர்த்தகர்)

தோற்றம் 01.01.1943 — மறைவு 01.01.2009

திதி: சதுர்த்தி - 05.01.2014

நிஜமாக நீங்கள் மறைந்து
ஐந்தாண்டுகள் ஆனதோ!
நீங்கள் இல்லா மனை
பொலிவிழந்து போனதுவோ!
உங்களை நினைத்து - தினம் தினம்
நாம் ஏங்கித் தவிக்கின்றோம்
காலங்கள் ஓடிக் கடந்தாலும் - ஐயா உங்களை
எங்கள் உள்ளத்தில் வைத்து பூஜிப்போம்

நிரந்தர முகவரி:
தன்னை, களபூமி, காரைநகர்
தற்காலிக முகவரி:
இல. 58, மானிப்பாய் வீதி,
[illegible]கால் மடம்.
077 1836 625 (41846)(2.6.3)

உங்கள் நினைவுகளுடன் என்றும்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வர்த்தக நிலையத்தில் திருடர் கைவரிசை

கல்வியங்காட்டுப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றை உடைத்த திருடர்கள் இரண்டு லட்சம் ரூபா பெறுமதி வாய்ந்த பொருள்களை களவாடிச் சென்றுள்ளனர். இந்தத் திருட்டுச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றது. முத்திரைச் சந்திக்கு அருகாமையில் உள்ள இந்த வர்த்தக நிலையத்தின் முன்பக்க கதவை உடைத்து உள்ளே நுழைந்த திருடர்கள் அங்கிருந்த கைத்தொலைபேசிக்கான மீள் நிரப்பு அட்டைகள் உட்பட பொருள்கள், பணம் என்பவற்றைக் களவாடிச் சென்றுள்ளனர். இந்தத் திருட்டுச் சம்பவம் தொடர்பாக யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (த-17)

## நிர்வாகிகள் தெரிவு

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் புதிய தலைவராக ஜெகத் அபயசிங்க தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கடந்த சனிக்கிழமை ஸ்ரீலங்கா பவுண்டேசன் நிறுவனத்தில் புதிய நிர்வாக உறுப்பினர்கள் தெரிவு இடம்பெற்றது.

சங்கத்தின் உபதலைவர்களாக பாரத்த ஜொனிக்குவேவா, சுனில் திசநாயக்க ஆகியோரும், தேசிய செயலாளராக எஸ்.எல்.நிமல்குமாரும் போட்டியின்றித் தெரிவாகினர். நிதி ஆணைக்குழுவின் தலைவராக பிரசன்ன திசநாயக்காவும் மத்திய ஆளுநர் சபை உறுப்பினர்களாக உபாலி சிரிமன்ன அன்டன் விக்டோரியா, ரஞ்சித் விஜேசூரிய, கு.பாலகிருஷ்ணன், சாள்ஸ் கொரயா அஜித் சூரிய பண்டார, வைத்திய கலாநிதி அனுர எக்கநாயக்க, எஸ்.கே.டி.திசநாயக்க, ரி.வசந்தராஜா ஆகியோரும் தெரிவாகினர். (ஒ-7)

♦♦♦

காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வித்தியாலய பழைய மாணவர் சங்க வருடாந்தப் பொதுக் கூட்டம் கடந்த சனிக்கிழமை பாடசாலை நடராசா ஞாபகார்த்த மண்டபத்தில் இடம்பெற்றது.

பாடசாலை அதிபர் திருமதி வாசுகி தவபாலன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் புதிய நிர்வாக சபைத் தெரிவும் இடம்பெற்றது.

சபையின்தலைவராக அதிபர் திருமதி வாசுகி தவபாலன் கடமையாற்றுவதுடன் செயலாளராக க.நிமலதாசன், பொருளாளராக சு.அகிலன், உப செயலாளராக ச.சுகந்தன், உப தலைவராக சு.வேலாயுதபிள்ளை, உப பொருளாளராக செ.அருட்செல்வம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். நிர்வாக சபை உறுப்பினர்களாக ந.யோகநாதன், க.நாகராசா, செல்வி வி.விஸ்வநாதன், கு.சரவணபவானந்தசர்மா, சி.பகீரதன், வே.ஆனைமுகன் ஆகியோரும் உள்ளகக் கணக்காய்வாளராக ஜெகதீஸ்வரனும் தெரிவாகியுள்ளனர். (ந-250)


## சுருவில் றோ.க.த.க. நாளை முதல் மீள இயங்கும்

யாழ்ப்பாணம், ஜன.1

நாளை வியாழக்கிழமை முதல் சுருவில் றோ.க.த.க.பாடசாலை மீள இயங்கவுள்ளதாக தீவக வலய கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.


துறையூர் ஐயனர் வித்தியாலயம், வேலணை மேற்கு நடராஜா வித்தியாலயம் ஆகியவற்றில் ஏற்பட்டுள்ள இடநெருக்கடியைக் குறைக்கும் பொருட்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும்- தரம் ஒன்று மாணவர்களுக்கான வகுப்புக்கள் மட்டும் இங்கு ஆரம்பிக்கப்படவுள்ளன என்றும் 28 வருடங்களாக மூடப்பட்டுள்ள இந்தப் பாடசாலையின் அதிபராக க.சிறிசெல்வம் நியமிக்கப்பட்டிருக்கிறார் என்றும் தீவக வலய கல்விப் பணிப்பாளர் ரி.ஜோன்குயின்ரஸ் தெரிவித்தார். (ஒ-7)


## கண்ணீர் அஞ்சலி



உரும்பிராய் கருணை இல்ல நிறுவுநரும்
சைவ வித்தியா விருத்திச் சங்கப் புரவலரும்
London Tamil Orphans' Trust தலைவருமாகிய
**பொன்.தெய்வேந்திரம்**
அவர்களின் மறைவால் துயருறும்
குடும்பத்தினருக்கு
எமது அனுதாபத்தைத்
தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்மா
சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
பணிப்பாளர், பணியாளர், இல்லப் பிள்ளைகள்,
உரும்பிராய் கருணை இல்லம்,
சைவச் சிறுவர் இல்லம், திருநெல்வேலி.
சைவ வித்தியா விருத்திச் சங்கம்,
கலாசாலை வீதி, திருநெல்வேலி.
(C/10866)(7.6.3)

## கண்ணீர் அஞ்சலி



உரும்பிராய் மண்ணில் பிறந்து இலண்டன்
மாநகரிலே வாழ்ந்தாலும், தாம் பிறந்த மண் மீதும்
தமிழ் மக்கள் மீதும் கொண்ட ஈர்ப்பினால் வடக்கு,
கிழக்கென்ற தமிழர் தம் பூமியையும், தமிழ் மக்களையும்
கருணைக் கண் கொண்டு நோக்கி ஆதரவற்ற
சிறார்களை ஆண்டவனின் பிள்ளைகளாக எண்ணி
அன்புகாட்டி அரவணைத்தவரும்
ஆதரவற்ற பெண் பிள்ளைகளுக்கு அபயமளித்து
வாழ்வளிக்க தாம் பிறந்த உரும்பிராய் மண்ணில்
கருணை இல்லத்தை உருவாக்கிச் செயற்பட வைத்த
சேவையின் செம்மலாம்
**பொன் தெய்வேந்திரம்** அவர்கள்
இலண்டனில் இறைபதம் அடைந்த செய்தி கேட்டு
எமது கருணை இல்லச் சமூகம் பெருந்துயரில் மூழ்கியுள்ளது.
அன்னாரது பிரிவால் துயருறும் அன்னாரது
குடும்பத்தவர்களது துயரில் நாமும் பங்கு கொள்வதுடன்
எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவிப்பதுடன்
அன்னாரது ஆத்மா ஸ்ரீ காமாட்சி அம்பாளது
பாதக் கமலங்களில் சாந்தி பெறப் பிரார்த்திக்கின்றோம்.
பலாலி வீதி, உரும்பிராய் கருணை இல்லச் சமூகம்
(8/10872)(5.6)

## மரண அறிவித்தல்



திருமதி **பரமேஸ்வரி கணேசபிள்ளை**

காரைநகர், புலங்காட்டைப் பிறப்பிடமாகவும், வவுனியா வெளிக்குளத்தைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட பரமேஸ்வரி கணேசபிள்ளை 30.12.2013 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற தம்பையா கணேசபிள்ளையின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான தம்பையா - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.01.2014) வியாழக் கிழமை காலை 9 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடை பெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வெளிக்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

18/10, பிள்ளையார் கோயில் வீதி,
வெளிக்குளம்,
வவுனியா. (43574) (45.6.3)

தகவல்:
பிள்ளைகள்
தொ.பே. 024 222 0245

# 6ஆவது ஆண்டு நினைவஞ்சலி

### அப்பா இல்லாது ஆறு ஆண்டு தவிக்கின்றோம்

ஆறு ஆண்டு கழிந்தது
ஐயோ!
அப்பாவைக் காணாது
அலைகின்றோம்
பெற்றவரைக் காணாது
புலம்புகின்றோம்
வளர்த்தவரைக் காணாது
வாடுகின்றோம்
அப்பா நீங்கள்பெற்ற
அருமையென்ன
பேரும் இட்ட நேர்த்தி
என்ன?
வளர்த்த அருமை என்ன?
வரிசையிட்ட நேர்த்தி என்ன?
அஞ்சு வயதினிலே அப்பா
அறியாப் பருவத்திலே
கொஞ்சி விளையாடிக்
கூடி மகிழ்ந்து இருந்தோம்
அறுசுவை உணவு உண்டு
ஆடி மகிழ்ந்தோம் தினமும்
ஒன்றாய் தெய்வம்
வணங்கிடுவோம்
தினமும் வண்ண
வாகனத்தில்
மூவரும் வலம் வருவோமே
தக்க பருவத்தில் தந்தையை
இழந்து தவிக்கின்றோம்
பூமியிலே
பாசத்துடன் அணைக்க
நேசத்துடன்



தோற்றம் 10.01.1966
மறைவு 01.01.2008

**திரு. தியாகராசா மகேஸ்வரன்**

(முன்னாள் இந்து கலாசார அமைச்சரும் யாழ்., கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும்)

அன்பு பரிமாறிட ஆடிப்பாடி
கூடி மகிழ்ந்திட
குதூகலித்திட
ஆறு ஆண்டுகள் ஐயோ!
எங்கள் அப்பா
இல்லையே!
வீடு வெளியானதோ!
வெள்ளி முற்றம்
பாழானதோ! கூடிமகிழ்ந்த
அப்பாவைக்
கொலைகாரர் சூழ்ச்சியால்
கொன்றனரே! வஞ்சகர்
அப்பாவின் வாழ்நாளை
முடித்தாரோ? கருவிலே
மகேஸ்வரனாய்
திருவுடன் வந்த
தியாகரூபனே
விருப்புடன் நீங்கள் பெற்ற
மூன்று குழந்தைகள்
மூவுலகம்
மகிழ உங்கள் இலட்சியக்
குழந்தைகளாய் தியாக
உள்ளத்துடன்
சிறந்த பணி செய்திட
ஆனந்தமாய் என்றும்
வாழ்ந்திட
ஆனந்தமாய் அப்பா
அருள்செய்வீர்.

276, பலாலி வீதி
கந்தர்மடம், யாழ்ப்பாணம்
0212227559

(மனைவி)
...ம்பு - 06, தொ.பே:2360679

பவதாரணி (மகள்)
பிரணவன் (மகன்)
பவித்திரா (மகள்)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ஆசிரியர் கூட்டம்

நெல்லியடி, ஜன.1

நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் ஜி.சீ.ஈ. (சா/த) பரீட்சை-2013 இன் மதிப்பீட்டுப் பணிகள் நடைபெற்று வருவதனால் 2014 புதிய ஆண்டுக்கான கல்வி நடவடிக்கைகள் எதிர்வரும் 8 ஆம் திகதி புதன்கிழமை ஆரம்பமாகும் எனவும், ஆசிரியர்களுக்கான கூட்டம் நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரியின் கணினி விரிவுரை மண்டபத்தில் நடைபெறவுள்ளதாகவும் அதிபர் தெரிவித்துள்ளார். (ஓ)

## மகேஸ்வரனின் நினைவு நிகழ்வு; இன்று சந்நிதியான் ஆச்சிரமத்தில்

முன்னாள் இந்து கலாசார அமைச்சர் அமரர் தி.மகேஸ்வரனின் 5 ஆம் ஆண்டு நினைவுதினம் இன்று புதன்கிழமை தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தில் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

அன்னாரின் நினைவாக ஆச்சிரமத்தில் விசேட பூசை வழிபாடுகளுடன் பகல் அன்னதானமும் நடைபெறும் என ஆச்சிரமப் பொறுப்பாளர் சி.மோகனதாஸ் சுவாமிகள் அறிவித்துள்ளார்.

செல்வச் சந்நிதி வேலவனின் புதிய சித்திரத் தேர் உருவாக்கத்திலும், புதிய பூங்காவன மண்டப நிர்மாணத்திலும் மகேஸ்வரன் ஆற்றிய உதவிகள் சந்நிதி முருகன் அடியார்கள் மனதில் இன்றும் மறையாமல் உள்ளன. வாழும் காலத்தில் சந்நிதியான் ஆச்சிரமத்தோடு அவர் கொண்டிருந்த ஈடுபாட்டையும் ஆற்றிய உதவிகளையும் ஆச்சிரமம் என்றும் நன்றியோடு நினைவுகூருகிறது என சந்நிதியான் ஆச்சிரமம் விடுத்துள்ள குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-173)





# புனர்வாழ்வு அதிகாரசபையின் புதிய காரியாலயத்தின் இடமாற்றம்

மக்களின் வசதிக்காக மற்றும்
சிறந்த சேவை
வழங்கும் நோக்கில்

## புனர்வாழ்வு அதிகாரசபை

புதிய இடத்தில் 2014.01.01 முதல்
இயங்கவுள்ளது என்பதை
சகலருக்கும்
மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

புதிய முகவரி

**ஆட்களையும், ஆதனங்களையும் மற்றும் கைத்தொழில்களையும் புனரமைப்புச் செய்யும் அதிகாரசபை**

இல. 07 டி.எஸ். சேனாநாயக்க மாவத்தை, கொழும்பு 08.
தொலைபேசி 0112 691555, 0112 691177
மின் அஞ்சல்: reppia_gen@slt.lk

## மணல் விற்பனைக்கு

கட்டட வேலைகளுக்கும், பூச்சு வேலை களுக்கும்
சிறந்த மணல் விற்பனைக்கு உண்டு.
4½ ரக்ரர் 19,000/=
தொடர்பு: கண்ணா
077 676 6499, 077 759 0792
(41849)(4.6.3)

## Words of peace

**அமைதியின் சொற்கள்**

It is not the World
that needs PEACE
It is the people
When people in
the world
are at peace within
the world will be at
PEACE

மேலும் அறிந்து கொள்ள அழையுங்கள்
**011 725 0001 bet 3 pm - 10 pm**
(41795)(2.6.3)

## சிவபூமி
### மன விருத்திப் பாடசாலை, கோண்டாவில்

புதிய மாணவர் அனுமதி
புதிய கல்வி ஆண்டுக்கான மாணவர்கள்
அனுமதிக்கப்படுவார்கள். எதிர்வரும் 10.01.2014 ஆம்
திகதி வரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.
அதிபர், சிவபூமி பாடசாலை. T.P. 021 222 7938

## சிவபூமி
### முதியோர் இல்லம், சுழிபுரம்

60 வயது நிறைந்த பராமரிப்புக்கு எவரும் அற்ற
முதியோர்கள் விண்ணப்பிக்கலாம்.
* விண்ணப்பங்கள் யாவும் அவர்களது நிலையறிந்து
ஏற்றுக்கொள்ளப்படும்.
தலைவர், சிவபூமி முதியோர் இல்லம்
(41796)(2.6.3) T.P. 021 225 0085

## கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் வருடாந்தப் பொதுக் கூட்டம்

கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் **மாசி மாதம் 2014ஆம் ஆண்டு 02.02.2014 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு பஞ்சலிங்கம் கேட்போர் கூடத்தில்** நடைபெறும். அங்கத்தவர்கள் எல்லோரையும் சமுகமளிக்கும்படி கேட்டுக்கொள்கின்றோம். விலாசங்கள் மாறி இருப்பவர்கள் தயவுசெய்து எங்களுடன் தொடர்பு கொள்ளவும். அழைப்புக் கிடைக்காதவர்கள் இந்த அறிவித்தலைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுச் சமுகமளிக்கும்படி கேட்டுக் கொள்கின்றோம்.
தீர்மானங்கள் பிரேரணைகளை 15.01.2014இற்கு முன் செயலாளருக்கு அனுப்பி வைக்கவும்.

செயலாளர்,
கொக்குவில் இந்துக் கல்லூரி
பழைய மாணவர் சங்கம்.
(41799) (7.6.3)

## வாடிக்கையாளர்களுக்கு முக்கிய அறிவித்தல்

2014 ஆம் ஆண்டு புதுப்பொலிவுடன்
புது வருட வாழ்த்துக்கள்
பண்ணை சந்தையின்
இல.1 ஆட்டிறைச்சிக்கடை நடத்தி
மீண்டும் கொக்குவில் ஆடியபாதம்
சந்தையில் ஆட்டிறைச்சிக்கடை
நடத்துகின்றோம். பாவனையாளர்களுக்கும்
வாடிக்கையாளர்களுக்கும் புதுவருட
வாழ்த்துகளைத் தெரிவித்துக்
கொள்வதுடன், மகிழ்ச்சியுடன் கொக்குவில்
ஆடியபாதம் ஆட்டிறைச்சிக்கடைக்கு
வருகை தருமாறு அன்புடன்
அழைக்கின்றோம்.

**சி. உசாந்தன்**
**உரிமையாளர் - ஆட்டிறைச்சிக்கடை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## யாழ். இந்துவில் நாளை முதல் கற்றல் செயற்பாடுகள்

யாழ்ப்பாணம், ஜன. 01

முதலாம் தவணைக்குரிய கற்றல் செயற்பாடுகள் யாழ். இந்துக் கல்லூரியில் நாளை முதல் ஆரம்பமாகவுள்ளன என்று கல்லூரி அதிபர் வீ. கணேசராஜா அறிவித்துள்ளார்.

ஜி.சீ.ஈ. சாதாரண தர விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் நடைபெறும் பாடசாலைகள் முதலாம் தவணைக்காக எதிர்வரும் 8 ஆம் திகதியே திறக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. ஆயினும் யாழ். இந்துக் கல்லூரியில் நாளைமுதல்வழமை போல் முதலாம் தவணைக்கான கற்றல் நடவடிக்கைகள் இடம் பெறும் என்று கல்லூரி அதிபர் அறிவித்துள்ளார். (ஙு)

## வேலையாள்கள் தேவை

யாழ் நகரில் இயங்கிக் கொண்டிருக்கும் மொத்த விற்பனை நிலையத்துக்கு

விற்பனையாளர்

விற்பனை உதவியாளர்

உடனடியாக தேவை.

தொடர்பு: 077 573 6003 (41902) (7.8.3)


## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அழகிய சிறிய குடும்பம் ஒன்றுக்கு கொழும்பில் தங்கி நின்று வேலை செய்யக் கூடிய பெண்கள் தேவை.

தொடர்புக்கு:-0773866250

## கண்ணீர் அஞ்சலி

### இராசையா நித்தியானந்தன்



(கிராம அலுவலர் ஜே/141) பிரதேச செயலகம், சண்டிலிப்பாய்


சேவையின் நாயகனாய், பண்பின் உறைவிடமாய், ஏழைகளின் தோழனாய், சக உத்தியோகத்தரின் சகோதரனாய், தரணியில் நின்புகழ் நிலைக்க அன்புடன் வாழ்ந்து, பிரிவு உபசாரத்தின் போது பிரியமுடியாது எம்மை விட்டுப் பிரிந்து சென்றது ஏனோ? உம் ஆத்மா என்றும் இறைபாதத்தில் நித்திய ஆனந்தமடைய பிரார்த்திப்பதோடு, குடும்பத்தினருக்கும் எனது அனுதாபத்தினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கு.கணேசதாசன் விவாகப் பிறப்பு,
இறப்புப் பதிவாளர், வலி மேற்கு மானிப்பாய்

## மரண அறிவித்தல்

### யோசேப் அரியநாயகம்



அலுக்கை அளவெட்டியைச் சேர்ந்த யோசேப் அரியநாயகம் நேற்று (31.12.2013) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற யோசேப் - யூஸ்தினம் தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்ற திரேசம்மாலின் அன்புக்கணவரும் மேரி யோசப்பின் ஆஞ்சலா, ஆனந்தராஜ் (கட்டார்), மேரி அன்ரனீற்றா (லண்டன்), மேரிஅனெக்சலா ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஒகஸ்ரின், அனெற்வினோதினி, செல்வின் ஆகியோரின் அன்புமாமனும் ஆன்ஜீனுஜா, கிஷான், கீகன், ஜெருஷா, ஜெசிக்கா, யூட்சன் ஆகியோரின் அன்புப்பேரனும் காலஞ்சென்ற மரிய நாயகம் காலஞ்சென்ற லோறன்ஸ், ராசநாயகம், மேரிரீட்டா, புஸ்பராணி, மலர் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்ற அன்னம்மா மற்றும் அன்னம்மா மற்றும் காலஞ்சென்ற அலோசியஸ் மற்றும் ஜெயசிங்கம், செல்வராஜா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (02.01.2014) வியாழக்கிழமை பி.ப. 3.00 மணிக்கு அளவெட்டி சூசையப்பர் ஆலயத்தில் இடம் பெற்று, பூதவுடல் மல்லாகம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


அலுக்கை, அளவெட்டி.

தகவல்: குடும்பத்தினர்
077 3169172

## மரண அறிவித்தல்

### செல்லத்துரை பொன்னுத்துரை

(முன்னாள் இலங்கை போக்குவரத்து சபை சாரதி
(சுதுமலை, யாழ்ப்பாணம்)



சுதுமலை, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், அம்பகர் லேன், கொக்குவில் கிழக்கு, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும், பிரான்ஸ் Sarcelles ஐ தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்டிருந்த செல்லத்துரை பொன்னுத்துரை 27.12.2013 வெள்ளிக்கிழமை பிரான்ஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை-மீனாட்சி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தம்பு-சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற தங்கம்மாவின் பாசமிகு கணவரும், பூபதி (இலங்கை), தம்பிப்பிள்ளை (இலங்கை) ஆகியோரின் அன்புச் சகோதரனும், வடிவேலின் மைத்துனரும், தயானந்தன் (ஜேர்மனி), றசீதா (ஜேர்மனி), சுஜாதா (சுவிஸ்), சுசிதா (பிரான்ஸ்), சுதாகரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும் அமிர்தா, நடேசபிள்ளை, யோகநாதன், யோகேஸ்வரன், யூடி ஆகியோரின் மாமனாரும், ரனுசியா, நிதுஜா, நிகிலா, யனோஸ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 28.12.2013 (சனிக்கிழமை) 13.00 மணி தொடக்கம் 18.00 மணி வரை Maison Funeraire, I Rue Claude chappe 95200 Sarcelles என்னும் இடத்தில் பார்வைக்காக வைக்கப்பட்டு, 02.01.2014 (வியாழன்) 8.00 மணி தொடக்கம் 10.00 மணி வரை அதே இடத்தில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று, பின்னர் Crematorium des Joncherollerue Marcel Sembat 95430 Villetaneuse என்னும் இடத்தில் 11.30 மணிக்கு தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தயானந்தன் [மகன்] 0049 174 162 5848
வவா [பெறாமகன்] 0033 646 589 138
லோகேஸ்வரன் [மருமகன்] 0033 953 140 652/0033 [illegible]
தீசன் [பெறாமகன்] 0033 651 266 651

(41864)(7.8.3)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### சிவஞானம் சிவகுமார்



உரும்பிராய் வடக்கைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட சிவஞானம் சிவகுமார் 28.12.2013 சனிக்கிழமை ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவஞானம் - இராசம்மா தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும் ஆறுமுகம் - பூரணம் தம்பதியரின் பாசமிகு மருமகனும், செந்தாமரையின் அன்புக் கணவரும், ஞானரட்ணம் (கனடா), ஞானமலர் (கொழும்பு), ஞானமணி (லண்டன்), சிவானந்தன், சிவலிங்கம் (லண்டன்), சிவபாலன் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் பாலசிங்கம், சிவபாலசுந்தரம்பிள்ளை, மகேந்திரன், ஆனந்தலட்சுமி, லலித்தா, ஜமுனா மற்றும் லலிதாம்பிகை, சரவணப்பெருமாள், காலஞ்சென்ற பாலச்சந்திரன் மற்றும் பூபாலன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 02.01.2014 வியாழக்கிழமை பி.ப. 2.15 மணிக்கு ஜேர்மனியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு,
Mrs.G சிவபாலசுந்தரம்பிள்ளை
0774771405
சரவணப்பெருமாள்
0212054721

(சி-11126)

தகவல்:
சிவானந்தன் (சதோதரர்)
0112360710
0776048579

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## நினைவஞ்சலிகள்

பதினேழாம் ஆண்டு



மலர்வு 10.11.1916 உதிர்வு 23.12.1996

வேலுப்பிள்ளை நடராசா
(இளைப்பாறிய கல்விப் பணிப்பாளர்)

முதலாம் ஆண்டு



மலர்வு 02.08.1928 உதிர்வு 11.01.2013

மங்கையர்க்கரசி நடராசா

திதி : 01.01.2014

உயரிய சான்றோர் ஞானம் போதித்து
தன்னலமற்ற தாய்மைக்கு புகழ் சேர்த்து
எம்மை விட்டகன்று ஓராண்டாகியும்
பதிபதம் இணைந்து பத்தினியாய் வாழ்விரம்மா.

துன்னாலை கிழக்கு,
கரவெட்டி.

குடும்பத்தினர்.

(41856)(7.8.3)

## மரண அறிவித்தல்

### திருமதி மகாலக்ஷிமி (பவானி) கதிர்காமத்தம்பி



மணல்தரை லேன், கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும், தெஹி வளையை வசிப்பிடமாகவும் கொண்ட மகாலக்ஷிமி (பவானி) கதிர்காமத் தம்பி நேற்று (31.12.2013) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் கதிர்காமத்தம்பியின் (ஓய்வுபெற்ற வேலைகள் மேற்பார்வையாளர், நீர்ப்பாசனத் திணைக்களம்) அன்பு மனைவியும், காலஞ்சென்ற ஆறுமுகம் மற்றும் சிவநாயகி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ் சென்றவர்களான இளையதம்பி-சிவகொழுந்து தம்பதியரின் அன்பு மருமகளும், தர்சன் (கொழும்பு, Software Engineer), மேனகா (UK) ஆகி யோரின் அன்புத் தாயும், மயூரனின் (UK- Network Engineer) அன்பு மாமியும், நேசரஞ்சினி (ஆசிரியர், யாழ்/இந்து மகளிர் கல்லூரி), சாந் தினி, ஸ்ரீஸ்கந்தராஜா (ஸ்ரீகாந்தா எசன்ஸ்), கோகிலாவதி (ஆசிரியர், நல்லூர் ஆனந்த வித்தியாலயம்), சறோஜினி (நந்தினி), தர்மாவதி (ஆசிரியர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், விக்னேஸ்வரன் (ஓய்வுபெற்ற வலய உதவிக் கல்விப் பணிப்பாளர்-தீவக வலயம்), சுந்தரலிங்கம் (கூட்டுறவு முகாமையாளர், கைதடி), விஜியகுமாரி, சிவகுமாரன் (கொக்குவில் தபால் காரியாலயம்), சுப்பிரமணியம் (நெதர்லாந்து) ஆகியோரின் மைத்துனியும், பிரவீனின் (UK) அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.01.2014) புதன்கிழமை கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, மாலை 4.30 மணியளவில் கல்கிசை பொதுமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மணல்தரை லேன்,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

(41861)(10.6)

தகவல் :
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஊர்காவற்றுறை நீதிவானாகப் பணியாற்றிய ஆர்.எஸ்.மகேந்திரராஜாவுக்கு அந்த நீதிமன்ற பணியாளர்களால் பிரியாவிடை நிகழ்வு நடத்தப்பட்டது. இதன்போது நீதிவானுடன் நீதி மன்றப் பணியாளர்கள் நிற்பதைப் படத்தில் காணலாம்.

# கல்விப் பணிப்பாளர் இன்மையால் உடுவில் கோட்டத்தில் சிக்கல் நிலை

உடுவில் கோட்டத்துக்கு கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக கல்விப் பணிப்பாளர் நியமனம் செய்யப்படாமையால் பாடசாலைகளின் பல்வேறு செயற்பாடுகளும் உரிய முறையில் முன்னெடுக்கப்படாத நிலை காணப்படுவதாக குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன.

வலிகாமம் கல்வி வலயத் துக்கு உட்பட்ட உடுவில் கல்விக் கோட்டம் சுமார் முப்பத்தைந்துக்கும் மேற்பட்ட பாடசாலைகளை நிர்வகிப்பதுடன், இடம்பெயர்ந்து தற்காலிகமாக இயங்கும் வலி.வடக்கு கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த பாடசாலைகளும் இந்தப் பிரிவில் இயங்கி வருகின்றன. இது தொடர்பாக வலிகாமம் கல்வி வலய உயர் அதிகாரியுடன் தொடர்பு கொண்டு கேட்ட போது, குறிப்பிட்ட கல்விக்கோட்டத்துக்கு கல்விப் பணிப்பாளரை நியமிக்கவென விண்ணப்பங்கள் கோறப் பட்டு நேர்முகப் பரீட்சையும் முடிவடைந்துள்ளது. வடமாகாண கல்வி அமைச்சு குறித்த வெற்றிடத்தை நிரப்ப நடவடிக்கை எடுக்கவில்லையெனத் தெரிவித்தார்.

இது குறித்து மக்களின் பிரதிநிதிகளைக் கொண்ட வட மாகாண சபை யேனும் உரிய நடவடிக்கை களை எடுக்குமா எனப் பலரும் எதிர்பார்த்து இருக்கின்றனர். (வ-86)

## மீனவர்கள் மீது இலங்கை கடற்படை தாக்குதல்

தனுஷ்கோடி, ஜன.1

தனுஷ்கோடி அருகே கரை திரும்பிக் கொண்டிருந்த தம் மீது நேற்று இலங்கைக் கடற்படையினர் தாக்குதல் நடத்தினர் என்று தமிழக மீனவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

சுமார் 550க்கும் மேற்பட்ட படகுகளில் மீன்பிடியில் ஈடுபட்டிருந்த இராமேஸ்வரத்தைச் சேர்ந்த மீனவர்கள், நேற்று அதிகாலை தனுஷ்கோடிக்குக் கரை திரும்பினர். அப்போது அங்கு வந்த இலங்கைக் கடற்படையினர் மீனவர்கள் மீது கற்கள், போத்தல்கள் என்பவற்றைக் கொண்டு தாக்குதல் நடத்தினர் என்று கூறப்படுகின்றது. அவர்களின் தாக்குதல்களில் தமது வலைகளும் சேதமாகியுள்ளன என்றும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

அதேவேளை, இலங்கைச் சிறைகளில் உள்ள தமிழக மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரி நேற்றுமுதல் இராமேஸ்வரம் மீனவர்கள் காலவரையற்ற வேலைநிறுத்தப் போராட்டத்தில் இறங்கியுள்ளனர். (ற)

# பாலியல் துஷ்பிரயோக பிக்கு: பிணை வழங்கிய நீதிமன்று

யாழ்ப்பாணம்,ஜன.1

வவுனியா அட்டமஸ்கட சிறுவர் இல்லத்தில் இடம்பெற்ற சிறுவர் மீதான துஷ்பிரயோகத்துடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த பிக்குவை பிணையில் செல்ல வவுனியா நீதிமன்றம் நேற்று அனுமதி வழங்கியது.

கடந்த நவம்பர் மாதம் 6 ஆம் திகதி குறித்த சிறுவர் இல்லத்தைச் சேர்ந்த சிறுவன் ஒருவன் தாக்கல் செய்த முறைப்பாட்டை அடுத்து வவுனியா அட்டமஸ்கட சிறுவர் இல்லத்தின் காப்பாளரும் விகாராதிபதியுமான கல்யாண திஸ்ஸ தேரர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

இது தொடர்பான வழக்கு விசாரணைகள் நேற்று வவுனியா நீதிவான் நீதிமன்றில் இடம்பெற்றன. தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் அறிக்கையின் பிரகாரம் சட்டமா அதிபர் பிணை வழங்குவதற்கு ஆட்சேபனை இல்லை என்று தெரிவித்திருந்தது. இதனை அடுத்து குறித்த விகாராதிபதியை ஒரு லட்சம் ரூபா சரீரப் பிணையில் செல்ல வவுனியா மாவட்ட நீதிவான் சிராமக்கமலர் அனுமதி வழங்கினார். (ங-400)

# பிறக்கும் புதுவருடத்திலாவது நல்லாட்சியை எதிர்பார்ப்போம்

*ரணில் விக்கிரமசிங்க வாழ்த்து*

கொழும்பு, ஜன. 1

2014 ஆம் ஆண்டு தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் பல சவால்களுக்கு நாம் முகம் கொடுக்கவேண்டியுள்ளது என எதிர்க்கட்சித் தலைவரும், ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியத் தலை வருமான ரணில் விக்கிரமசிங்க தமது புதுவருட வாழ்த்துச் செய்தியில் தெரி வித்துள்ளார்.



அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள் ளவை வருமாறு:-

"சிறந்த வாழ்க்கை முறைமை, ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகளின் ஆட்சி, நீதித்துறை சுயாதீனம் முதலானவற்றைப் பாதுகாக்கும் சமூகமொன் றைக் கட்டியெழுப்புவதற்கான புதிய வருடத்துக்குள் நாம் பிரவேசிக்க வேண்டும். சமூகத்தில் நூற்றுக்கு ஒரு வீதமான அதிகாரமிக்கவர்களுக்கும் அவர்களது உறவினர்களுக்கும் மட் டும் சிறப்புரிமைகள் மட்டுப்படுத் தக் கூடாது. அனைத்து பிரதி பலன்களும் நாட்டு மக்கள் அனைவருக்கும் கிடைக்கக்கூடிய வகையிலான நல்லாட்சியொன்றை நாம் எதிர்பார்க்கின்றோம். இவ்வாறானதொரு சிறந்த சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்கு சக்தியும், தைரியமும் எம் அனைவருக்கும் மலரும் புத்தாண்டில் கிடைக்க வேண்டும்எனபிரார்த்திப்போம்' - எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மீனவர்கள் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு தேவை

*வலியுறுத்துகின்றது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்*

இலங்கைக் கடற்படையால் கைது செய்யப்பட்டுச் சிறைகளில் அடைக்கப்பட்டிருக்கும் இந்திய மீனவர்கள் அனைவரையும் விடுவிப்பதற்கு இந்திய மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் ஜி.ராம கிருஷ்ணன்.

இந்த விடயம் தொடர்பாக தாம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு அவர் வலி யுறுத்தியுள்ளார். அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:

"கடந்த சனிக்கிழமை புதுக்கோட்டை மீனவர்கள் 22 பேர் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். நேற்றுமுன்தினம் பாம்பன் பகுதியைச் சேர்ந்த 18 மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களது வலைகள், எரிபொருள்கள் என்பவற்றையும் இலங்கைக் கடற்படை பறிமுதல் செய்துள்ளது. 2010 தமிழக மீனவர்கள் இலங்கைச் சிறைகளில் அடைக் கப்பட்டுள்ள நிலையில், தற்போது மேலும் 40 மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளமை வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவதைப் போலுள்ளது.

தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையால் காரணங்கள் ஏதுமின்றிக் கைது செய்யப்படுவது தற்போது அதிகரித்துள்ளது. இந்த விடயத்தில் இந்திய மத்திய அரசு உடனடியாகத் தலையிட்டு மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தமிழக மீனவர்களிடம் இருந்து பறிமுதல் செய்யப் பட்ட வாழ்வாதாரப் பொருள்களையும் மீட்பதற்கு மத்திய அரசு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

மீன்பிடிக்கச் செல்லும் மீனவர்கள் கைது செய்யப்படுவதும், தாக்கப்படுவதும் தொடர்கதையாக மாறியுள்ளது. இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண்பதற்குரிய நடவடிக்கைகளை உடன் மத்திய அரசு மேற்கொள்ள வேண்டும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்துகின்றது."- என்று கூறப்பட்டுள்ளது. (ற)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### விளக்க

பிரிவுப் பொலிஸாரால் நீதிமன்றில் நேற்றுச் சமர்ப்பிக்கப் பட்டது. படுகொலை தொடர்பில் விசாரணை தொடர்ந்து முன்னெடுக்கப்படுகிறது என்று குற்றப்புலனாய்வுப் பொலிஸார் மன்றில் தெரிவித்தனர்.

ஊர்காவற்றுறை நீதிமன்றில் நீதிவான் ஆர்.எஸ். மகேந்திரராஜா முன்னிலையில் இந்த வழக்கு நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டது.

நெடுந்தீவு பிரதேச சபைத் தலைவரும் ஈ.பி.டி.பி முக்கியஸ்தருமான டானியல் றெக்ஷயன் கடந்த நவம்பர் 26 ஆம் திகதி துப்பாக்கியால் சுட்டுப்படுகொலை செய்யப்பட்டார்.

அது தொடர்பில் விசாரணை மேற்கொண்ட பொலிஸார், றெக் ஷயனைக் கொலை செய்த குற்றச்சாட்டில் ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட அமைப்பாளரும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வடமாகாணசபை எதிர்க்கட்சித் தலைவருமான கந்தசாமி கமலேந்திரனைக் கடந்த 3 ஆம் திகதி கைது செய்தனர். றெக்ஷயனின் மனைவியான அனித்தாவும், கமலேந்திரனின் உதவியாளரான ஜசிந்தனும் கடந்த 2 ஆம் திகதி கைது செய்யப்பட்டனர். நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட அவர்களை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

14 நாள்கள் விளக்கமறியலின் பின்னர் கடந்த 17 ஆம் திகதி இவர்கள் மீண்டும் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர். இதன்போது வடக்குமாகாண சபை அமர்வுகளில் பங்கேற்க அனுமதி தருமாறு கமலேந்திரன் தனது சட்டத்தரணி ஊடாகக் கோரியிருந்தார்.

மூன்றாவது தடவையாக நேற்று அவர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். குற்றப் புலனாய்வுப் பிரிவுப் பொலிஸாரும் மன்றில் முன்னிலையாகியிருந்தனர். இதன்போதே இரண்டாவது சந்தேகநபரான ஜசிந்தனின் மற்றொரு வாக்குமூலத்தைப் பொலிஸார் நீதிமன்றில் சமர்ப்பித்ததோடு படுகொலை தொடர்பில் தொடர்ந்து விசாரணை முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அங்கு தெரிவித்தனர்.

கமலேந்திரன் வடக்கு மாகாண சபை அமர்வில் பங்குபற்றுவது தொடர்பில் அமர்வு இடம்பெறும் திகதிக்கு முன்னர் நீதிமன்றிடம் அனுமதிகோரல் வேண்டும். நீதிமன்று அனுமதி வழங்கினால் மட்டுமே அமர்வுகளில் பங்கேற்கமுடியும் என்று கூறி அவர்களுக்கு எதிர்வரும் 9 ஆம் திகதிவரை விளக்கமறியலை நீடித்தார் நீதிவான்.

சந்தேக நபர்கள் சார்பாக சட்டத்தரணிகள் எவரும் நீதிமன்றில் நேற்று முன்னிலையாகியிருக்கவில்லை. றெக்ஷயனின் உறவினர்களும் சந்தேக நபர்களின் உறவினர்களும் நேற்று மன்றுக்கு வருகை தந்திருந்தனர். (த-4)

### காணாமற்

வருகின்றன. "முறைப்பாடுகள் ஏற்றுக்கொள்ளும் திகதி இன்றுடன் (நேற்றுடன்) முடிவடைந்தாலும் இனி வரும் காலங்களில் கிடைக்கப்பெறும் முறைப்பாடுகளையும் நாம் நிராகரிக்க மாட்டோம். அவை தொடர்பிலும் நாம் ஆராய்வோம்.

இதுவரையிலும் 11 ஆயிரத்துக்கும் அதிகமான முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இப்போதே இவை தொடர்பில் சுயாதீன விசாரணைகளை நாம் ஆரம்பித்து விட்டோம். அத்தோடு, ஜனவரி மாதம் முதல் வாரத்தில் இரு தடவைகள் காணாமற்போனோரின் உறவினர்களை நேரடியாக சந்தித்து கலந்துரை யாடி தகவல்களைப் பெறவுள்ளோம்.

அதுமட்டுமன்றி, புலம்பெயர் தமிழர்களும் முறைப்பாடுகளைத் தெரிவிக்க விசேட ஏற்பாடுகளை செய்யவுள் ளோம். அதாவது, ஜனவரி மாத நடுப் பகுதியில் இணையத்தளம் ஒன்றை உத்தியோகப் பூர்வமாகத் திறந்து வைக்கவுள்ளோம். இதன் மூலம் இலகுவாகவும், விரைவாக தகவல்களை பெறமுடிவதோடு பாதுகாப்பும் உறுதிப் படுத்தப்படும். அத்துடன், வடக்கு, கிழக்கு ஆகிய பகுதிகளுக்கும் இம்மாதத்திலிருந்து தொடர் பயணங்களை மேற்கொண்டு தகவல்களைத் திரட்டவுள்ளதுடன் உறவினர்களுக்கு நஷ்ட ஈடு வழங்கவும் ஏற்பாடு செய்யப்படவுள்ளது" என்றார்.

### இசை நிகழ்வில்

பெருக்கி மூலம் நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு செட்டிகுளம் பிரதேசம் எங்கும் அறிவிப்பு செய்தது. இதன்போது குறித்த நிகழ்ச்சிக்கான நுழைவுச்சீட்டுக் குறித்தோ அதன் பெறுமதி குறித்தோ அறிவிக்கப்படவில்லை.

இன்று (நேற்று) இரவு நாம் அங்கு ஒன்றுகூடிய போது அனைவரையும் வரிசையில் நிற்குமாறு கோரி 100 ரூபாவுக்கு நுழைவுச் சீட்டு எடுக்குமாறும் அறிவித்தனர். இதனால் நாம் குழப்பமடைந்து ஏற்பாட்டாளர்களிடம் வினவினோம்.

இதற்கிடையில் நிகழ்வின் பிரதம அதிதியான வடமாகாண சபை எதிர்க்கட்சி உறுப்பினர் றிப்ஹான் பதியுதீன் கலந்து கொள்ளமாட்டார். எனவே நிகழ்ச்சியை நிறுத்துகின்றோம் என அறிவிக்கப்பட்டது. இதனால் நாம் குழப்பமடைந்தோம் நியாயம் கேட்க பொலிஸாரிடம் சென்ற போது அவர்கள் எம்மை விரட்டியடித்[illegible]க்கவில்லை யுடனும் ஏமாற்றத்துடனும் வீடு திரும்பினோம் என பாதிக்கப்பட்ட பலர் உதயனிடம் தெரிவித்தனர்.

சம்பவம் குறித்து செட்டிகுளம் பிரதேச சபை உப தலைவரிடம் தொடர்புகொண்டு கேட்ட போது,

வன்னியின் சக்தி என்ற அமைப்பு நிகழ்வுக்கான மைதான அனுமதியை எம்மிடம் பெற்றுக் கொண்டது. முதலில் நுழைவுச் சீட்டுக் குறித்த அனுமதி பெறப்படவில்லை. இன்று காலையே (நேற்று) அந்த அனுமதியை எம்மிடம் பெற்றனர். நிகழ்ச்சி நிறுத்தப்பட்டதற்கான காரணம் எமக்குத் தெரியாது என்றார்.

சம்பவம் குறித்து நிகழ்வின் பிரதம அதிதி என்று குறிப்பிடப்பட்ட வடமாகாண சபை உறுப்பினர் றிப்கானிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது,

இரண்டு தினங்களுக்கு முன்னர் என்னிடம் அனுமதி கேட்டார்கள் நான் முடியாது எனக் கூறினேன். இன்று காலையும் (நேற்று) அழைப்பு வந்தது. நான் வரமுடி யாது என அறிவித்தேன். நிகழ்ச்சி நிறுத்தப்பட்டதற்கும் எனக்கும் எதுவித சம்பந்தமும் இல்லை - என்றார். (ஐ)

### சர்வதேச

னாங்கள் கடந்த 2012, 2013 ஆம் ஆண்டுகளில் சர்வதேச நாடுகளினால் நிறைவேற்றப் பட்டுள்ளன.

சர்வதேச சமூகத்தின் அறிவுரை களைக் கேட்காமல் இலங்கை அரசு தன்னிச்சையாக செயற்பட்டு வருவதால் அதற்கு எதிராக மூன்றாவது பிரேரணையையும் எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனிவாவில் நிறைவேற்ற உலக நாடுகள் தீர்மானித்துள்ளன.

இந்தப் பிரேரணை மிகக் கடுமையான பிரேரணை யாக - சர்வதேச விசாரணையை வலியுறுத்தும் பிரேரணையாக இருக்கும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மட்டுமல்ல உள்நாட்டில், வெளிநாடுகளில் உள்ள பல தரப்பினரும் எதிர்பார்த்துள்ளனர்.

அத்துடன் இது தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் உறுப்பு நாடுகளிடம் பல வழிகளில் அழுத்தங்களையும் கொடுத்து வருகின்றனர். இந்நிலையில் தீர்வுக்கான நல்ல சூழல் அமைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தன்னாலான சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும் - என்றார்.

### 4 இலங்கைத்

சாமியும் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

தமது திருமணத்தைப் பெற்றோர்கள் எதிர்த்தமையின் காரணமாக நாட்டை விட்டு வெளியேறியதாகக் கைது செய்யப்பட்ட தம்பதியினர் தெரிவித்துள்ளனர். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூளாய் விக்ரோறியை வீழ்த்தியது யாழ்.மத்தி

வலி. வடக்கு, ஜன. 1

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி வீரன் அலன்ராஜின் சிறப்பான பந்து வீச்சின் மூலம் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கும் மூளாய் விக்ரோறி விளையாட்டுக் கழகத்துக்கும் இடையே நடைபெற்ற 50 பந்துப்பரிமாற்றங்களுக்கு மட்டுப்படுத்திய கிரிக்கெட் ஆட்டத்தில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி 5 இலக்குகளால் வெற்றி பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இந்தப் போட்டி இடம்பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய விக்ரோறி விளையாட்டுக் கழகம் 23 .4 பந்துப்பரிமாற்றத்தில் சகல இலக்குகளையும் இழந்து 72 ஓட்டங் களைப் பெற்றது.

அரிதரன் 18 ஓட்டங்களையும், கணேஷ்14 ஓட்டங்களையும், சஜந்தன் 13 ஓட்டங்களையும் பெற்றதுடன் உதிரி களாக 14 ஓட்டங்களும் பெறப் பட்டன.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியைச் சேர்ந்த அலன்ராஜ் 5 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி ஓர் ஓட்டமற்ற பந்துப் பரிமாற்றத்துடன் 5 ஓட்டங்களுக்கு 6 இலக்குகளையும், யூலியஸ் 4 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 11 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் சௌமிதரன், நிருபன்முறையே 16 ,28 ஓட்டங்களைக் கொடுத்து தலா ஓர் இலக்கையும் கைப் பற்றினார்கள்.


பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி 26 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 5 இலக்குகளை இழந்து 73 ஓட்டங்களை பெற்று வெற்றி இலக்கை அடைந்தது. டினேதஜன் 16 ஓட்டங்களையும், சங்சஜன், நிரோ ஜன் ஆகியோர் தலா 12 ஓட்டங்களையும், யூலியஸ் 11 ஓட்டங்களையும் பெற்றதுடன் உதிரிகளாக 12 ஓட்டங்களும் பெறப்பட்டன.

விக்ரோறி விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த சுரேந்திரன் 8 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 3 ஓட்டமற்ற பந்துப்பரிமாற்றங்களுடன் 14 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் செந்தூரன், ஐங்கரன் முறையே 3 .7 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 13 ,26 ஓட்டங்களைக் கொடுத்து தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினார்கள். (த-86)

# வென்றது கே.சி.சி.சி.

வலி.வடக்கு, ஜன.1

யாழ்ப்பாணம் கிரிக்கெட் சங்கத்தின் ஆதரவுடன் யாழ்ப் பாணம்நியூ ஸ்ரார் விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட விளையாட்டுக்கழகங் களுக்கு இடையே நடத்தி வரும் லீக் முறையிலான 20/20 கிரிக்கெட் போட்டியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற போட்டி ஆட்டம் ஒன்றில் கொக்குவில் கே. சி.சி.சி. விளையாட்டுக் கழகம் 5 இலக்குகளால் வெற்றி பெற்றது.



கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போட்டி ஆட்டத்தில் கொக்குவில் கே.சி.சி.சி. விளையாட்டுக் கழகமும் வட்டுக்கோட்டை ஓல்ட் கோல்ட்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய கே.சி.சி.சி. விளையாட்டுக் கழகம் 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 5 இலக்குகளை இழந்து 173 ஓட்டங்களைப் பெற்றது.

இராகுலன் ஐந்து சிக்ஸர்கள், மூன்று பவுண்டரிகள் அடங்கலாக 50 ஓட்டங்களையும், ஜெயரூபன் 34, பங்குஜன் 24, ஜெனுதாஸ் 15 ஓட்டங்களையும் உதிரியாக ஓர் ஓட்டமும் பெறப்பட்டது.

ஓல்ட் கோல்ட்ஸ் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த திலீபன் 4 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 28 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும், ஸ்ரீகுகன், யேசுதன் தலா 4 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி முறையே 26, 37 ஓட்டங்களை கொடுத்து தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினார்கள்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஓல்ட் கோல்ட்ஸ் விளையாட்டுக் கழகம் 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 9 இலக்குகளை இழந்து 106 ஓட்டங்களைப் பெற்றது.

ஸ்ரீகுகன் 34 ஓட்டங்களையும், ஜனா 25, சீராளன் 20 ஓட்டங்களையும் பெற்றதுடன் உதிரிகளாக 7 ஓட்டங்களும் பெறப்பட்டன.

கொக்குவில் கே.சி.சி.சி. விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த சாம்பவன் 4 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 13 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளையும், ஜெயரூபன் 3 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 37 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும், பிரதீஸ் ஒரு பந்துப் பரிமாற்றம் பந்து வீசி 10 ஓட்டங்களுக்கு இரு இலக்குகளையும், சிலோஜன், ஜனுதாஸ் முறையே 2, 4 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி முறையே 3, 16 ஓட்டங்களைக் கொடுத்து தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினார்கள். (த-86)

# டைமன்ஸ், அராலி ஜேம்ஸ் உதைபந்தாட்டத்தில் வெற்றி

யாழ்ப்பாணம், ஜன.1

சூராவத்தை நியூ வொரியர்ஸ் விளையாட்டுக் கழகம் கந்தன் நல்லதம்பி ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக நடத்தும் 5 பேர் பங்கு பற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் நியூ வொரியர்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றன.

இதில் கடந்த வெள்ளிக் கிழமை முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் டைமன்ஸ் விளையாட்டுக்கழகஅணியைஎதிர்த்து இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

இதில் டைமன்ஸ் விளையாட்டுக் கழக அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

தொடர்ந்து இடம்பெறவிருந்த ஆட்டத்தில் அராலி ஜேம்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழக அணி மோதவிருந்தது.

இதில் நவிண்டில் விளையாட்டுக் கழக அணி உரிய நேரத்தில் மைதானத்துக்கு சமுகம் தராமையால் அராலி ஜேம்ஸ் விளையாட்டுக் கழக அணிக்கு வெற்றி வழங்கப் பட்டது. (த-23)






# ஈஸ்வரன், யங்ஸ்ரார் அணிகள் அசத்தல்

யாழ்ப்பாணம், ஜன.1

வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகம் 'சாந்தன், யூட்கசன்' ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக மின்னொளியில் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரின் ஆட்டங்கள் வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இதில் கடந்த வெள்ளிக் கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் அல்-மதீனா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஈஸ்வரன் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது. இதில் ஈஸ்வரன் விளையாட்டுக் கழக அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. சனிக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் இளந்தென்றல் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக 'ஏ' அணி மோதிக் கொண்டது.

இதில் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக 'ஏ' அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)

## இன்றைய ஆட்டங்கள்

வடமராட்சி, ஜன .1

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழகம் நடத்தும் 7 பேர் பங்கு கொள்ளும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டித் தொடரின் இன்றைய போட்டியில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

**பிற்பகல் 3.30 மணி**

நாச்சிமார் கோயிலடி ஸ்ரீ அம்பாள் விளையாட்டுக் கழ கம் எதிர் கொற்றாவத்தை பூமகள் விளையாட்டுக்கழகம்.

**மாலை 4.30 மணி**

உடுப்பிட்டி யுத் விளை யாட்டுக் கழக 'ஏ' அணி எதிர் திக்கம் இளைஞர் விளை யாட்டுக்கழக 'பி'அணி. (த-23-8)

# உதைபந்தாட்டத்தில் வெற்றி பெற்ற அணிகள்

வலி.வடக்கு, ஜன.1

வலிகாமம் உதைபந்தாட்ட லீக் ஆதரவுடன் அராலி தெற்கு மாவத்தை விளையாட்டுக் கழகம் உழவர் திருநாளையொட்டி நடத்தும் 7 பேர் பங்கு பற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் முடிவுகள் வருமாறு:-

நவாலி சென். பீற்றர்ஸ் விளை யாட்டுக் கழகத்துக்கும் துணைவி நியூ ஸ்ரார் விளையாட்டுக் கழகத்துக்கும் இடையே நடை பெற்ற போட்டியில் சென். பீற் றர்ஸ் விளையாட்டுக் கழகம் 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அடுத்த போட்டியில் விளையாடத் தகுதி பெற்றது.

மற்றுமொரு போட்டியில் குப்பிளான் விக்கினேஸ்வரா விளையாட்டுக் கழகமும் மூளாய் வளர்மதி விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.

இதில்விக்கினேஸ்வரா விளையாட்டுக்கழகம் 3:1 என்ற கோல் கணக்கில் மூளாய் வளர்மதி விளையாட்டுக் கழகத்தை வென்று அடுத்த சுற்றில் விளையாடத் தகுதிபெற்றது. (த-86)

## சாவகச்சேரியில் கரப்பந்தாட்டம்

சாவகச்சேரி கோவிற்குடியிருப்பு ஸ்ரீமுருகன் விளையாட்டுக் கழகத்தினர் தென்மராட்சி பிரதேச கரப்பந்தாட்ட அணிகளுக்கிடையிலான சுற்றுப் போட்டியை நடத்தவுள்ளனர். சுற்றுப் போட்டியில் பங்குபற்ற விரும்பும் கரப்பந்தாட்ட அணிகள் எதிர்வரும் 6 ஆம் திகதி திங்கட்கிழமைக்கு முன்னர் செயலாளர், ஸ்ரீமுருகன் விளையாட்டுக் கழகம், கச்சாய் வீதி, சாவகச்சேரி என்னும் முகவரியுடன் தொடர்பு கொள்ளுமாறு கழகத் தலைவர் க.தர்ஷன் அறிவித்துள்ளார். (த-9)

# ஐங்கரன், ஸ்ரீமுருகன் இறுதியாட்டத்துக்கு தகுதி

யாழ்ப்பாணம், ஜன.1

சாவகச்சேரி விகோரியர் விளையாட்டுக்கழகம் தென்மராட்சி பிரிவுக்கு உட்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையே புத்தாண்டை முன்னிட்டு நடத்திய கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் அரையிறுதியாட்டங்களில் மட்டுவில் ஐங்கரன், சாவகச்சேரி ஸ்ரீமுருகன் விளையாட்டுக்கழக அணிகள் வெற்றி பெற்றன.

இந்த ஆட்டங்கள் விக்ரோறியா விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்றன.

இதில் முதலில் இடம் பெற்ற அரையிறுதியாட்டத்தில் மீசாலை சீமா விளையாட்டுக்கழக 'பி' அணியை எதிர்த்து மட்டுவில் ஐங்கரன் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.


மூன்று சுற்றுக்களைக் கொண்ட ஆட்டத்தில் மட்டுவில் ஐங்கரன் விளையாட்டுக்கழக அணி 2:0 என்ற செற்கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் சாவகச்சேரி ஸ்ரீமுருகன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மீசாலை சீமா விளையாட்டுக்கழக 'ஏ' அணி மோதிக் கொண்டது.

மூன்று சுற்றுக்களைக் கொண்ட ஆட்டத்தில் சாவகச்சேரி ஸ்ரீமுருகன் விளையாட்டுக்கழக அணி 2:0 என்ற செற்கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்கு முன்னேறியது. (த-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜோகோவிச் ஹட்ரிக் பட்டம்




அபுதாபியில் நடந்த உலக ரென்னிஸ் சம்பியன்ஷிப் தொடரில் இறுதிச் சுற்றில் வெற்றி பெற்று நோவக் ஜோகோவிச் சாம்பியன் பட்டம் வென்றார். ஐக்கிய அரபு எமிரேட்சில் உள்ள அபுதாபியில் 6ஆவது முறையாக உலக ரென்னிஸ் சம்பியன்ஷிப் தொடர் நடந்தது.


இதில் ஸ்பெயினின் ரபேல் நடால், பிரிட்டனின் அன்டி முர்ரே, சேர்பியாவின் நோவக் ஜோகோவிச் உள்ளிட்ட 6 வீரர்கள் பங்கேற்றனர்.

இதன் இறுதிச்சுற்றில் ஜோகோவிச், டேவிட் பெரரர் மோதினர். முதல் செற்றை 7:5 எனக் கைப்பற்றிய ஜோகோவிச், இரண்டாவது செற்றை 6:2 என வென்றார். முடிவில், சேர்பியாவின் ஜோகோவிச் 7:5, 6:2 என்ற நேர் செற் கணக்கில் வென்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றினார்.

இறுதிச்சுற்றில் அசத்திய சேர்பியாவின் ஜோகோவிச், இந்தத்தொடரில் தொடர்ந்து 3ஆவது முறையாக (2011, 2012, 2013) சம்பியன் பட்டம் வென்று 'ஹட்ரிக்' சாதனை படைத்தார்.

இந்தத் தொடரில் 'ஹட்ரிக்' பட்டம் வென்ற சேர்பியாவின் ஜோகோவிச்சுக்கு, சம்பியன் பட்டத்துடன் ரூபா 4.80 கோடி ரூபா பரிசாக வழங்கப்பட்டது. (த)

# தோல்விக்குக் காரணம்




தென்னாபிரிக்காவுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்த டோனி தலைமையிலான இந்திய அணி, அந்த நாட்டு அணியுடன் இரண்டு டெஸ்ட் போட்டிகளில் பங்கேற்றது.

முதல் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்த நிலையில், இரண்டாவது போட்டியில் இந்திய அணி படுதோல்வி அடைந்திருந்தது.

இந்தத் தோல்வி குறித்து இந்திய அணித்தலைவர் டோனி கருத்து வெளியிடுகையில்,

இரண்டாவது போட்டியின் ஐந்தாவது நாளின் முதல் பகுதி ஆட்டம் முக்கியமானதாக அமைந்தது. ஆனால் அதை நாங்கள் சரியாக ஆரம்பிக்கவில்லை.

நடுவரின் சில மோசமான தீர்ப்புகள், கடினமான முடிவுகள், மோசமான துடுப்பாட்ட முறை என்பன தோல்வியில் கொண்டு போய் விட்டு விட்டன. ஒட்டுமொத்தத்தில் இந்த இளம் அணியின் செயல்பாடு மகிழ்ச்சி அளிக்கிறது. குறிப்பாக பந்து வீச்சாளர்கள் அபாரமாகப் பந்து வீசினர். அவர்கள் இந்த தொடரில் இருந்து நிறைய விடயங்களைக் கற்று இருப்பார்கள் என டோனி தெரிவித்தார். (த)




இந்திய அணிக்கும், தென்னாபிரிக்க அணிக்குமிடையே நேற்று முன்தினம் நடைபெற்ற டெஸ்ட் போட்டியுடன் கிரிக்கெட்டிலிருந்து விடை பெறும் ஜக் கலிஸ். (த)

# கடைசி டெஸ்ட் போட்டியில் சதம் அடித்தது சிறப்பானது



கடைசிப் போட்டியில் சதம் அடித்ததைச் சிறப்பாக கருதுவதாகவும், கடைசிப் போட்டியில் சதம் அடிக்கும் வாய்ப்புத் தனக்குக் கிடைத்தி ருப்பதாகவும் தென்னாபிரிக்காவின் ஜக் கலிஸ் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், வழக்கமாக 90 ஓட்டங்களைத் தாண்டியதும் ஒருவிதமான அழுத்தம் ஏற்படும். ஆனால், கடைசிப் போட்டியில் 90 ஓட்டங்களைக் கடந்தபோது ஏற்பட்ட அழுத்தம் வித்தியாசமாக இருந்தது. சில இலக்குகள் இழந்தபிறகு எனது சதம் ஆறுதலாக இருந்தது. அணி சரிவில் இருந்து மீள்வதையும் உறுதி செய்தது.

நாங்கள் முதலில் இருந்தே வேகமாக ஆட வேண்டும் என்று நினைத்தோம். இந்தியா பாதுகாப்பாகப் பந்து வீசியதால் ஓட்டங்களைக் குவிக்கக் கடினமாக இருந்தது. அவர்களின் இலக்கை நெருங்கியபோது ஆட்டம் எங்களுக்கு சாதகமாகத் திரும்பியது-என்றார்.

மொத்தம் 165 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ள கலிஸ் 13 ஆயிரத்து 289 ஓட்டங்கள் குவித்துள்ளார். இதன்மூலம் டெஸ்ட் போட்டியில் அதிக ஓட்டங்கள் குவித்தவர்கள் பட்டியலில் 3ஆவது இடத்தில் இருக்கிறார். (த)

# 2 ஆம் இடத்தில் விராட் கோஹ்லி



சர்வதேச கிரிக்கெட்டில் ஒரு நாள் போட்டிக்கான வீரர்களின் புதிய தர வரிசைப் பட்டியலை சர்வதேசக் கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ளது.

இதில் இந்திய வீரர் விராட் கோஹ்லி 2ஆவது இடத்தைப் பிடித்து உள்ளார்.

முதல் இடத்தில் தென்னாபிரிக்காவின் டிவில்லியர்ஸ் உள்ளார்.

ஏனைய இந்திய வீரர்களில் டோனி 6ஆவது இடத்திலும் ஷிகர்தவான் 10 ஆவது இடத்திலும் உள்ளனர். (த)

# தென்னாபிரிக்க அணி தொடர்ந்து முதலிடம்




சர்வதேசக் கிரிக்கெட் சபையின் டெஸ்ட் அணிகளுக்கான தரவரிசைப் பட்டியலில் தென்னாபிரிக்க அணி முதல் இடத்தில் தொடர்ந்து நீடிக்கின்றது.

டெஸ்ட் போட்டியில் சிறந்து விளங்கும் அணிகளுக்கான தர வரிசைப் பட்டியலை சர்வதேசக் கிரிக்கெட் சபை வெளியிட்டது. இதில் தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் தொடரை 1-0 என்ற கணக்கில் இழந்துள்ள நிலையில், 117 புள்ளிகளுடன் இந்தியா இரண்டாம் இடத்தில் உள்ளது.

தென்னாபிரிக்க அணி 133 புள்ளிகளுடன் முதலிடத்தில் நீடிக்கிறது. மூன்றாவது இடத்தில் 116 புள்ளிகளுடன் இங்கிலாந்து அணி உள்ளது. அடுத்த இரண்டு இடங் களில் பாகிஸ்தான் (102 புள்ளி), ஆஸ்தி ரேலியா (101 புள்ளி) அணிகள் உள்ளன. தற்போது நடக்கும் ஆஷஸ் டெஸ்ட் தொடரின் கடைசி டெஸ்டில் ஆஸ்திரே லியா மூன்றாவது இடத்துக்கு முன்னேறலாம். ஒரு வேளை தோல்வி அடைந் தால் 4ஆவது இடத்தைப் பிடிக்கும். இதேபோன்று இலங்கைக்கு எதிரான டெஸ்ட் தொடரைப் பாகிஸ்தான் அணி 2:0 எனக் கைப்பற்றினால் 105 புள்ளிகள் பெறும். தொடரை முழுமையாக வென் றால் 107 புள்ளிகளுடன் 5ஆவது இடம் பிடிக்கும். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10 Years
The Leading Printers In JAFFNA

கடந்த 10 வருட காலமாக பலரினதும் நன்மதிப்பினைப் பெற்று தனது சேவையினை சிறப்பாகத் தொடர்ந்து வரும் எமது நிறுவனத்தின் கிளை நிறுவனமொன்றினை இப்பொழுது கிளிநொச்சியில் 01.01.2014 இன்றைய தினம் ஆரம்பிக்கின்றோம் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

ANDRA
பிறிண்டேர்ஸ்



- புத்தக வெளியீடுகள்
- லேபிள்கள்
- போஸ்டர்கள்
- சஞ்சிகைகள்
- துண்டுப் பிரசுரங்கள்
- கல்வெட்டுக்கள்
- விசிற்றிங்காட்



திருமண அழைப்பிதழ்களின் சாம்ராட்சியம்

அழகிய திருமண அழைப்பிதழ்களின் புத்தம்புதிய பிரமாண்டமான காட்சியறை இப்பொழுது முதல்முறையாக கிளிநொச்சியில்...

ANDRA®
WEDDING CARDS

டிஜிற்றல் பிறிண்டிங்

6 Colour Digital Printing
High Quality Digital Printing



ANDRA
DIGITAL PRINTING

- டிஜிற்றல் பனர்கள்
- விளம்பரப் பதாதைகள்
- பெயர்ப் பலகைகள்
- ஸ்ரிக்கர்கள்

3 வருட உத்தரவாதத்துடன் துல்லியமான பனர் பிறிண்டிங்

470/2, ஏ9 வீதி, கிளிநொச்சி.
470/2, A9 Road, Kilinochchi. Tel : 021 7201275 / 077 2209527
Head Office : 379, Kasthuriyar Road, Jaffna. Tel : 021 2228929

**PHYSICS**
ஆசி. திரு ம. ஸ்பெல்மன் Bsc
A/L - 2016
ஆரம்பம் : 03.01.2014 வெள்ளி 5.00 Pm
இடம் : 10/10 மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம்
பெரிய கோவில், கியூடெக் அருகில்
உரிய காலத்தில் பாடத்திட்டம் முடிக்கப்படும்
T.P : 077 6116724

**GERMAN INSTITUTE**
German,Swiss மொழிகள் தமிழ் மொழி பெயர்ப்புடன் Greamany யிலிருந்து வந்த ஆசிரியரால் German Embassyயில் கேட்கப்படும் Goethe institute Certificate க்கு ஏற்றவாறு நடைபெறுகிறது. ஆரியகுளத்தடியில்
10, Palaly road, Jaffna.
Mrs. Kajenthini. T.P.: 0771604823
அனைவருக்கும் இனிய புதுவருட நல்வாழ்த்துக்கள்

# ஷூமாக்கர் கவலைக்கிடம்

கொழும்பு, ஜன. 01

விபத்தில் படுகாயம் அடைந்த போர்முலா 2 கார் பந்தய வீரர் மைக்கல் ஷூமாக்கர் கோமா நிலையில் கவலைக்கிடமாக உள்ளதாக மருத்துவர்கள் தெரிவித்தனர்.

போர்முலா 1 கார் பந்தயத்தில் 7 முறை சம்பியன் பட்டம் வென்றவரான ஜேர்மனியின் ஷூமாக்கர், பிரான்ஸ் நாட்டின் அல்ப்ஸ் மலைப் பகுதியில் தனது மகனுடன் பனிச் சறுக்கில் ஈடுபட்டிருந்தார். அப்போது எதிர்பாராதவிதமாக கீழே விழுந்த ஷூமாக்கரின் தலையில் படுகாயம் ஏற்பட்டது.

இதையடுத்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ள அவருக்கு மருத்துவர்கள் தீவிர சிகிச்சை அளித்து வருகின்றனர்.

இந்நிலையில் அவரது மூளைப் பகுதியில் காயம் ஏற்பட்டுள்ளதால் அவர் கோமா நிலைக்குச் சென்றுவிட்டார். எனவே அவரது நிலைமை அபாயக் கட்டத்தில்தான் உள்ளது என்று மருத்துவர்கள் தெரிவித்தனர்.

44 வயதாகும் ஷூமாக்கர், கார் பந்தயத்தில் பல சாதனைகளுக்குச் சொந்தக்காரர். பந்தயத்தில் காரில் அதிவேகமாகச் சென்றபோதும்கூட பெரிய அளவில் ஏதுவும் ஏற்படதாத நிலையில், இப்போது பனிச் சறுக்கு விளையாடியபோது உயிருக்கு ஆபத்தான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது அவரது ரசிகர்கள் பலரையும் வேதனையில் ஆழ்த்தியுள்ளது. (த)

**French Classes பிரெஞ் வகுப்புகள்**
af
French மொழி கற்பிப்பதற்கு French அரசாங்கம் மற்றும் French Embassy ஆகியன அங்கிகரிக்கும் வடமாகாணத்திலுள்ள ஒரேயொரு சர்வதேச நிறுவனம் Alliance Française de Jaffna (AF) மட்டுமே.
இச்சந்தர்ப்பத்தினை தவறவிடாதீர்கள். Embassy க்கும் France இல் French படிப்பதற்கு / தொழில் புரிவதற்கும் எமது அங்கிகரிக்கப்பட்ட பெறுமதியான CERTIFICATEஐ பெறுங்கள்.
புதிய வகுப்புகள் விரைவில் ஆரம்பமாகின்றன. இன்றே அனுமதிகளைப் பெறுவது சிறந்தது. T.P.021.222.8093
61, Kachcheri-Nallur Road, Jaffna
(கச்சேரியை அடுத்து வரும் சந்தியில் அமைந்துள்ள வெள்ளை மாடிக்கட்டடம்)

புத்தி சாதுரியமான மாணவ செல்வங்களின் மதிநுட்பமான தெரிவு
ஞானோதய அக்கடமி (சாவகச்சேரி)
கலை, வர்த்தக, மற்றும் தொழில்நுட்பப் பாடப்பிரிவுகள்
A/L 2016 | A/L DAY CLASS
* ஆரம்பம் : 03.01.2014 - வெள்ளி - 9.00 am
* அதிதிறமையும் அனுபவமும் வாய்ந்த பிரபல முன்னணி ஆசிரியர்குழாம்
* இவ்வருடமும் 40 மேற்பட்ட மாணவர்கள் சாதனைப் பெறுபேறுகளுடன் பல்கலைக்கு தெரிவு
சாதனை உலகில் தடம் பதித்திட கைகொடுத்திடும் உங்களின் நிறுவனம் நிர்வாகம்.

FLC FRENCH LANGUAGE CENTRE
யாழில் சர்வதேச தரத்தில் French கற்பிக்கும் ஒரே ஒரு மையம்.
FRENCH CLASSES
French, Canada Embassy மற்றும் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட International Certificates இனை France, Canada, Belgium செல்வோர் இலகுவாக பெற்றுக் கொள்ளலாம்... 750 க்கும் மேற்பட்டோர் கற்றுள்ளனர்...
ஆசிரியர் : MR. V. JEGAN (Trained teacher in France - 2007, University இல் பகுதி நேர French விரிவுரைகளை மேற் கொள்பவரும்)
கடந்த DELF Exam இல் வடக்கில் எம் மாணவர்கள் மட்டுமே சித்தி.....
குறுகிய காலத்தில் DELF பரீட்சைக்கு தோற்றலாம் நேரத்தை வீணடிக்காது..
எம்மிடம் கற்ற பல மாணவர்கள் France இல் வேலை செய்கிறார்கள்......
ஆரம்பம்: 18.01.14 at 8am. No. 40, Palaly Road, ஆரியகுளம்.
ஆரம்பம்: 20.01.14 at 3pm. No.181, 1st Floor, Main Street, Nelliady.
Deutsch & Sinhala வகுப்புகளும் நடை பெறுகிறது... 0779 789 456

அனைவருக்கும் IIS தனது நத்தார் புதுவருட வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றது
IIS CITY CAMPUS
BSc IT Top up Degree
Bachelor of Science in Information Technology
BBA Top up Degree
Bachelor of Business Administration
காலம் : 1வருடம்
கல்வித்தகமை : உயர்தேசிய டிப்ளோமா (HND) அல்லது அதற்கு சமனான கல்வித் தகைமை
உயர் தொழில்நுட்ப கல்லூரிகளில் உயர்தேசிய டிப்ளோமா மற்றும் CIMA,ACCA,CMA கற்கை நெறிகளை பூர்த்தி செய்த மாணவர்கள் மேற்படி கற்கை நெறிகளுக்கு விண்ணப்பிக்க முடியும்
ஆர்வமுடைய மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
ஆரம்பம் : 10.01.2014
மேலதிக விபரங்களுக்கு : 021 4900 900 / 076 697 4188
IIS CITY CAMPUS
#200, Sivan Pannai Road, Jaffna
Tel: 222 8060 Fax: 222 6933 Web: www.iis.edu.lk

# ஒரு நாள் அணியில் ஜேம்ஸ் பட்டின்சன்

கொழும்பு, ஜன. 01

இங்கிலாந்து அணிக்கு எதிரான சர்வதேச ஒரு நாள் கிரிக்கெட் தொடருக்கான ஆஸ்திரேலியக் குழாமில் ஜேம்ஸ் பட்டின்சன் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளார்.

ஆஷஷ் டெஸ்ட் தொடரில் பிரகாசித்துவரும் ஆஸ்திரேலியா இங்கிலாந்துக்கு எதிரான சர்வதேச ஒரு நாள் கிரிக்கெட் போட்டியை எதிர்கொள்ளும் நோக்கில் பந்து வீச்சாளர் ஜேம்ஸ் பட்டின்சன் சேர்க்கப்பட்டுள்ளார்.

இரண்டு அணிகளுக்கும் இடையிலான முதலாவது சர்வதேச ஒரு நாள் கிரிக்கெட் போட்டி எதிர்வரும் 12 ஆம் திகதி இடம்பெறவுள்ளது. (த)

**DSI Mount Spring**
DSI Mount Spring போத்தலில் (19L) அடைத்த குடிநீர் உங்கள் வீடுகளுக்கு கொண்டு வந்து கொடுக்கப்படும்.
விலை ரூபா - 200/= மட்டும்
தொடர்பு : 077 2543253

**CHEMISTRY COURT**
**80 ARASADY ROAD JAFFNA**
இரசாயனவியல் 2016 A/L
(தமிழ், ஆங்கில, மொழி மூலம்)
ஆரம்பம் : 01/01/2014
நேரம் : 5.00 Pm
By : RAJAH

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 01.01.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# 2014

## நாள்காட்டி



பிரிட்டனின் பிரதமர் டேவிட் கமரூனின் யாழ்.உதயன் பணிமனைக்கு வருகை. (15 நவ. 2013)




ஊடக சுதந்திரத்துக்கான விருது உதயன் பத்திரிகைக்கு பிரான்ஸில் வழங்கப்பட்டது. (27 நவ. 2013)

### முக்கிய விடுமுறைகள்

தை -14 : தைப்பொங்கல் (அ.வ.வ.)
நபிகள் நாயகம் பிறந்த தினம் (அ.வ.வ.)
தை-15 : பூரணை விரதம், போயா (அ.வ.வ.)
மாசி-04 : தேசிய தினம் (அ.வ.வ.)
மாசி-14 : பூரணை விரதம்.போயா (அ.வ.வ.)
மாசி-27 : மகா சிவராத்திரி (அ.வ.)
பங்குனி-16 : பூரணை விரதம், போயா (அ.வ.வ.)
சித்திரை-13 : தமிழ், சிங்கள புத்தாண்டு முதல்நாள் (அ.வ.வ.)
சித்திரை-14 : தமிழ், சிங்களப் புத்தாண்டு (அ.வ.வ.)
சித்திரா பூரணை விரதம், போயா
சித்திரை-18 : பெரிய வெள்ளி (அ.வ.)
வைகாசி-1 : மே தினம் (அ.வ.வ.)
வைகாசி-14 : வெசாக், பூரணை விரதம் (அ.வ.வ.)
வைகாசி-15 : வெசாக் மறுநாள் (அ.வ.வ.)
ஆனி-12 : பூரணை விரதம், போயா (அ.வ.வ.)
ஆடி-12 : பூரணை விரதம், போயா (அ.வ.வ.)
ஆடி-29 : றமழான் பெருநாள் (அ.வ.)
ஆவணி-10 : பூரணை விரதம், போயா (அ.வ.வ.)
புரட்டாதி-8 : பூரணை விரதம் போயா (அ.வ.வ.)
ஐப்பசி-5 : ஹஜ் பெருநாள் (அ.வ.)
ஐப்பசி-8 : பூரணை விரதம், போயா (அ.வ.வ.)
ஐப்பசி-22 : தீபாவளி (அ.வ.)
கார்த்திகை-6 : பூரணை விரதம், போயா (அ.வ.வ.)
மார்கழி-6 : பூரணை விரதம், போயா (அ.வ.வ.)
மார்கழி-25 : கிறிஸ்மஸ் (அ.வ.வ.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## JANUARY

| mon | tue | wed | thu | fri | sat | sun |
|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 |
| 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 |
| 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 |
| 27 | 28 | 29 | 30 | 31 | | |

## FEBRUARY

| mon | tue | wed | thu | fri | sat | sun |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 1 | 2 |
| 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 |
| 24 | 25 | 26 | 27 | 28 | | |

## MARCH

| mon | tue | wed | thu | fri | sat | sun |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 1 | 2 |
| 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 |
| 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |
| 31 | | | | | | |

## APRIL

| mon | tue | wed | thu | fri | sat | sun |
|---|---|---|---|---|---|---|
| | [illegible] | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 |
| 28 | 29 | 30 | | | | |

## MAY

| mon | tue | wed | thu | fri | sat | sun |
|---|---|---|---|---|---|---|
| | | | 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 |
| 26 | 27 | 28 | 29 | 30 | 31 | |

## JUNE

| mon | tue | wed | thu | fri | sat | sun |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | 1 |
| 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 |
| 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 |
| 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 |
| 30 | | | | | | |

## JULY

| mon | tue | wed | thu | fri | sat | sun |
|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 |
| 28 | 29 | 30 | 31 | | | |

## AUGUST

| mon | tue | wed | thu | fri | sat | sun |
|---|---|---|---|---|---|---|
| | | | | 1 | 2 | 3 |
| 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 |
| 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 |

## SEPTEMBER

| mon | tue | wed | thu | fri | sat | sun |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | | | | | |

## OCTOBER

| mon | tue | wed | thu | fri | sat | sun |
|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 |
| 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 |
| 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 |
| 27 | 28 | 29 | 30 | 31 | | |

## NOVEMBER

| mon | tue | wed | thu | fri | sat | sun |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 1 | 2 |
| 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 |
| 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |

## DECEMBER

| mon | tue | wed | thu | fri | sat | sun |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | | | | |

ஏனையவை
போயா
அரச. வங்கி விடுமுறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2014

# ஆங்கிலப் புத்தாண்டு இராசி பலன்கள்

1.1.2014 பொன் கிடைத்தாலும் புதன் கிடைக்காது என்று சொல்லக்கூடிய பொன்னான தினமான புதன்கிழமை அன்று தனுசு ராசி, கன்னி லக்கினம், மூல நட்சத்திரத்தில் பிறக்கிறது. இந்த புத்தாண்டு, நாட்டுமக்களுக்கு நன்மைகளைத் தரும். புத்தாண்டின் லக்கினத்தில் 3-8-க் குரிய செவ்வாய். தனஸ்தானத்தில் உச்சம் பெற்ற சனியுடன் ராகு. சுகஸ்தானத்தில் சூரியன், புதன், சந்திரன். 5-ஆம் இடத்தில் சுக்கிரன். அஷ்டமத்தில் கேது. 10-இல் குரு. இதில் என்ன விசேஷம் என்றால், 4-ஆம் இடத்தில் வீற்றிருக்கும் சந்திரனைக் குரு பார்ப்பதால், கெஜகேசரி யோகமும், செவ்வாய் 4-ஆம் பார்வையாக பார்வை செய்வதால், சந்திரமங்கல யோகமும். சூரியனும், புதனும் இணைந்து, புத ஆதித்தியாய யோகமும் கொடுக்கிறார்கள். இவ்வாறாக பல யோகங்களுடன் பிறக்கும் ஆங்கிலப் புத்தாண்டு பொன், பொருளை வாரி வழங்கும். கல்வித்துறைக்கு பெரும் முன்னேற்றம் கொடுக்கும். . பொதுவாக 2014-ஆம் ஆண்டு அருமையான, பெருமை யான ஆண்டாக அமையும். இந்த புத்தாண்டு புதன்கிழமையில் பிறப்பதால், காலையில் முதலில் விநாயகரையும் அடுத்து பெருமாளை யும் மனதால் நினைத்து வணங்க வேண்டும். இதனால் இறைவனின் ஆசியால் ஆண்டு முழுவதும் அனைத்து நன்மைகளும் கிடைக்கும். புத்தாண்டு அன்று உங்கள் வீட்டின் அருகில் இருக்கும் உங்கள் இஷ்ட தெய்வ கோயிலுக்கு சென்று வழிபாடு செய்யுங்கள். அத்துடன் முதல் முதலில் வாங்கும் பொருள் இனிப்பாக இருந்தால் நல்லது. காரணம் இனிப்பு தெய்வ வழிபாட்டுக்கு விசேஷமானது. அத்துடன் ஸ்ரீமகா லஷ்மியின் அருளாசியும் கிடைக்கும். உங்கள் பிரார்த்தனை அனைத்தும் இந்த 2014-ஆம் ஆங்கில புத்தாண்டு வருடத்தில் நிறைவேறும்.

- வி.ஜி கிருஸ்ணராவ்



**மேஷம்** - இந்த வருடம் உங்களுக்கு யோக வருடம். ஜென்மத்தில் கேதுவும் மூன்றாம் இடத்தில் குருவும் இருக்கிறார்கள். சத்ரு ஸ்தானத்தில் செவ்வாய். சப்தமத்தில் சனி, ராகு. பாக்கியத்தில் சூரியன், புதன், சந்திரன். 10-இல் சுக்கிரன். ஜென்மத்தில் உள்ள கேதுவை செவ்வாய், தன் பார்வையால் அடக்கி விடுகிறார். சொத்துக்கள் வந்து அமையும். வீடு, மனை வாங்கும் யோகம் தரும். திருமண வாய்ப்பு கூடி வரும். தொழில்துறையில் நல்ல முன்னேற்றம் வரும். குடும்பாதிபதி 10-இல் இருப்பதால், பொதுவாக குடும்பத்தில் சுபநிகழ்ச்சிகள் நடக்கும். 6-இல் செவ்வாய் இருப்பதால், வீண் வார்த்தை - வீண் விவகாரம் தூரத் தள்ளவும். சில நேரங்களில் மருத்துவச் செலவு ஏற்படலாம். பொதுவாக இந்த வருடம் யோக வருடம். நன்மைகள் தேடி வரும்.



**ரிஷபம்** - இந்த வருடம் உங்களுக்கு தனலாப வருடம். விரயத்தில் கேது. தன ஸ்தானத்தில் குரு. பஞ்சமத்தில் செவ்வாய். 6-இல் சனி, ராகு. அஷ்டமத்தில் சூரியன், புதன், சந்திரன். பாக்கியத்தில் சுக்கிரன். லாபாதிபதி குரு 2-இல் இருப்பதால் தனவரவு தேடி வரும். 8-ஆம் இடத்தில், 2,3,4,5-க்குரியவர்களின் சேர்க்கையால் நினைத்தது நடக்கும். தனகாரகன், கீர்த்திகாரன், சுகாதிபதி, பஞ்சமாதிபதி சேர்க்கை அருமை. அவை லாபாதிபதி குருவின் பார்வை பெறுகிறது. உங்கள் வாழ்க்கையே பெருமைப்படப் போகிறது. தொழில்துறை பெருகும். குடும்பம் அமையும். புத்திர பாக்கியம் வாய்க்கும். வழக்கு இருப்பின் வெற்றி பெறும். வெளிநாடு உத்தியோகம் கிடைக்கும். வண்டி, வாகனத்தில் மட்டும் நிதானம் தேவை. பொன்னான வருடம்.



**மிதுனம்**- இந்த வருடம் நீங்கள் எதிர்பார்த்தது கைக்கு வரும். ஜென்மத்தில் குரு, சுகஸ்தானத்தில் செவ்வாய். பஞ்சமத்தில் சனி, ராகு. சப்தமத்தில் புதன், சூரியன், சந்திரன். அஷ்டமத்தில் சுக்கிரன். லாபத்தில் கேது. வனவாசம் போன இராமருக்கு ஜென்மத்தில் குரு என்பார்கள். ஆனால் உங்கள் விடயத்தில் உங்களை எதிர்த்தவர்கள்தான் வனவாசம் போவார்கள். காரணம் 3-க்குரிய சூரியன் கீர்த்தியை உண்டாக்கும். வேலை வாய்ப்புத் தேடி வரும். நசிந்த தொழில் புத்துயிர் பெறும். நண்பர்கள் உதவி வீடு தேடி வரும். 8-இல் சுக்கிரன் இருப்பதால் திருமண விவகாரத்தில் மட்டும் யோசித்து நிதானித்து செயல்பட வேண்டும். 11-இல் கேது புண்ணியஸ்தலம் செல்லும் பாக்கியம் கிட்டும். பூர்வீக சொத்து விஷயத்தில் வழக்கு இருப்பின் வெற்றி பெறும். சாதனை செய்யும் வருடம் இது.



**கடகம்** - இந்த வருடம் தொட்டது துலங்கும். கீர்த்தி ஸ்தானத்தில் செவ்வாய், சுகஸ்தானத்தில் சனி, ராகு, ரோகஸ்தானத்தில் சூரியன், சந்திரன், புதன். சப்தமத்தில் சுக்கிரன், 10-இல் கேது. சுகஸ்தானத்தைக் குரு பார்வை. வாகனம், வீடு, தோட்டம் அமையும். நோய்நொடி நீங்கும். சுப நிகழ்ச்சிகள் குடும்பத்தில் நடக்கும். புத்திர - புத்திரிகளுக்கு திருமண பாக்கியம் தேடி வரும். விரோதங்கள் தீரும். கடன் தொல்லை அகலும். வேலைவாய்ப்பு அமையும். மனைவியால் லாபம் உண்டு. பிணை விவகாரம் வேண்டாம். வராத கடன் வசூல் ஆகும். கல்வி தடையில்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். வீண் விரயங்களும் வரலாம். அதைச் சுப விரயமாக மாற்றுங்கள். பொதுவாக இந்த வருடம் உங்களுக்கு மண்ணும் பொன்னாகும் வருடம்.



**சிம்மம்**- இந்த வருடம் உங்களுக்கு சாதனை தரும் காலம். தன ஸ்தானத்தில் செவ்வாய், 3- இல் சனி, ராகு, பஞ்சமத்தில் சூரியன், புதன், சந்திரன். சத்ரு ஸ்தானத்தில் சுக்கிரன். பாக்கியத்தில் கேது. லாபத்தில் குரு. தன ஸ்தானத்தில் பாக்கியாதிபதி இருப்பதால் பணத்துக்குப் பஞ்சம் இல்லை. புகழ், கீர்த்தியை இராகு தந்திடுவான். பூர்வ புண்ணியத்தை குரு பார்ப்பதால் அரச ஆதரவு, மக்கள் செல்வாக்கு பெறலாம். பொதுவாக குடும்பஸ்தர்கள், தன் குடும்பத்தினர் போற்றும்படியான செயல்களைச் செய்வார்கள். கல்வி, தொழில், உத்தியோகம் நன்கு அமையும். அஷ்டமத்தை செவ்வாய் பார்ப்பதால் உணர்ச்சி, முன்கோபத்தைக் கட்டுப்படுத்த வேண்டும். வாக்கு ஸ்தானத்தை குரு பார்வை செய்வதால் சொல்லும் சொல், மந்திர சொல்லாக இருக்கும். உங்கள் பேச்சு மற்றவர்களை கட்டுப்படுத்தும். திருமண யோக வருடம்.



**கன்னி** - இந்த வருடம் ஏற்றம்-இறக்கம் கலந்த ஆண்டாக இருக்கும். ஜென்ம செவ்வாய், தன ஸ்தானத்தில் சனி, ராகு. சுகஸ்தானத்தில் சூரியன், புதன், சந்திரன். பஞ்சமத்தில் சுக்கிரன். அஷ்டமத்தில் கேது 10-இல் குருவும் அமைந்திருக்கிறார்கள். உங்களை ஜென்ம செவ்வாயும், ஏழரை சனியும் சற்று சீண்டிக்கொண்டேதான் இருக்கும். குடும்பத்தில் தேவை இல்லா செலவு தரும். 7-ஆம் இடத்தை செவ்வாய் பார்வை செய்வதால், தடைபட்ட திருமணம் நடக்கும். கல்வித் தடை நீங்கும். உயர் கல்வி அமையும். கடன் பிரச்சினை தலைதூக்கும். வழக்கு விடயத்தில் கவனம் தேவை. நண்பனும் விரோதியாவான். உடல்நலனில் கவனம் தேவை. தொழில் துறைக்காக கடன் வாங்க வேண்டி இருக்கும். பேச்சில் நிதானம் தேவை. ஆனாலும் குருவின் பார்வையால் குடும்பக் குழப்பங்கள் தீரும். வீடு, மனை அமையும். நிதானமே பிரதானம்.



**துலாம்** - இந்தப் புத்தாண்டு நன்மை பெருகும் ஆண்டு எனலாம். ஜென்ம சனி, ஜென்ம ராகு, கீர்த்தி ஸ்தானத்தில் சூரியன், புதன், சந்திரன். சுகஸ்தானத்தில் சுக்கிரன், சப்தமத்தில் கேது. பாக்கியத்தில் குரு, விரயத்தில் செவ்வாய். ஜென்மசனி, தேவை இல்லாப் பிரச்னைகளை இழுத்து வர செய்யும். குரு அருளால் தொல்லைகள் தீர வழி பிறக்கும். சொத்துச் சுகம் தேடி வரும். செய்யும் செயலுக்குப் புகழ் கிடைக்கும். வீடு, வாகனம் அமையும். கல்வி மேன்மை பெறும். நண்பர்கள் வசம் கவனம் தேவை. வெளிநாடு செல்லும் பாக்கியம் அமையும். அரச ஆதரவு கிடைக்கும். தடைப்பட்ட சில சுபநிகழ்ச்சிகள் குடும்பத்தில் நடக்கும். 12, 8-ஆம் வீட்டின் அமைப்பின்படி நிதானம், பொறுமையே அவசியம். இதுவே வெற்றி தரும்.



**விருச்சிகம்** - இந்த ஆங்கில புத்தாண்டு உங்களுக்கு நல்லதொரு புத்தாண்டு. தனஸ்தானத்தில் சூரியன், புதன், சந்திரன். கீர்த்தி ஸ்தானத்தில் சுக்கிரன். 6-இல் கேது. அஷ்டமத்தில் குரு. லாபத்தில் செவ்வாய். விரயத்தில் சனி, ராகு. தன லாபம் தேடி வரும். உங்கள் வார்த்தைக்கு மதிப்பு கிடைக்கும். குடும்பத்தில் சுபநிகழ்ச்சிகள், திருமண விடயம் நடக்கும். குழந்தைப் பேறு உண்டாகும். கடன் தொல்லை தீரும். நில-புலன் வசதி அமையும். விவசாயத்தால் லாபம் உண்டு. வியபாரத்தில் யோகம் உண்டு. வேலை வாய்ப்புத் தேடி வரும். விரயங்களும் உண்டு. வழக்கு விடயத்தில், பிணை விடயத்தில் கவனம் தேவை. உங்கள் உடல்நலனிலும், குடும்பத்தில் உள்ளவர்களின் உடல்நலனிலும் கவனம் தேவை. கண்ட கனவு பலிக்கும். பயணங்கள் அதிகம் கொடுக்கும். பொதுவாக இந்த வருடம் நன்மை தரும் ஆண்டாக இருக்கும்.



**தனுசு** - இந்த ஆங்கிலப் புத்தாண்டு முதல் நீங்கள் நினைத்தது நடக்கும். ஜென்மத்தில் சூரியன், புதன், சந்திரன். தனஸ்தானத்தில் சுக்கிரன். பஞ்சமத்தில் கேது, சப்தமத்தில் குரு. பத்தில் செவ்வாய். லாபத்தில் சனி, இராகு. கேட்கவா வேண்டும்? விரும்பியதெல்லாம் உடனே கிடைக்கும். சொன்னது பலிக்கும். குடும்பத்துக்கு வேண்டிய பொருள்கள் வந்து சேரும். சுபநிகழ்ச்சிகள் நடக்கும். கடன் தொல்லை நீங்கும். திருமணத் தடை அகலும். வெளிநாடு பயணம், வேலை வாய்ப்பு, தொழில்துறை முன்னெற்றம் உண்டு நண்பர்கள் உதவி கிடைக்கும். எதிர்பாராத தனலாபம் அமையும். பஞ்சம கேதுதான் உங்களுக்கு வேகத் தடை. கௌரவம் பாதிக்காமல் பார்த்துக் கொள்ளுங்கள். முன்கோபம், முரட்டுத் தைரியத்தால் பிரச்னை தலை தூக்கும். இந்த வருடம் உங்களை பெருமைப்படுத்த வாய்ப்பு உண்டு. அருமையான வருடம்.



**மகரம்** - இந்த ஆங்கிலப் புத்தாண்டு லாபம், நஷ்டம் கலந்து வரும். ஜென்மத்தில் சுக்கிரன், சுகஸ்தானத்தில் கேது, 6-இல் குரு, பாக்கியத்தில் செவ்வாய். 10-ஆம் இடத்தில் சனி, ராகு. விரயத்தில் சூரியன், புதன் சந்திரன். உடல்நலனில் கவனம் தேவை. கல்வியிலும் கவனம் தேவை. வாகன விடயத்தில் நிதானம் தேவை. பாக்கிய செவ்வாய் வீடு, மனை அமையச் செய்யும். தொழில்துறை புத்துயிர் பெறும். அதேசமயம் சில விரயங்கள் ஆகும். அதில் சுபவிரயமும் இருக்கும். குடும்பத்தினர் வசம் அன்பைக் காட்டுங்கள். தேவை இல்லா பிரச்னைகளில் தலையிடாதீர்கள். நிதானமாக செயலாற்ற வேண்டும். கடன் பிரச்னை தீர வழி பிறக்கும். அரசால் நன்மை வரலாம். பொன், பொருள் விரயம் ஆகாமல் பார்த்துக்கொள்ளுங்கள். புதிய திட்டங்கள் நன்மை தரும். நிதானம், மௌனம்தான் வெற்றியைக் கொடுக்கும்.



**கும்பம்**-இந்தப் புதுவருடம் உங்களுக்கு அதிர்ஷ்டம் கதவை தட்டும் ஆண்டாக இருக்கும். கீர்த்தி ஸ்தானத்தில் கேது, பஞ்சமத்தில் குரு, அஷ்டமத்தில் செவ்வாய், பாக்கியத்தில் சனி, ராகு, லாபத்தில் புதன், சூரியன், சந்திரன், 12-ஆம் இடத்தில் சுக்கிரன். இந்தக் கிரக நிலவரப்படி யோகம் அதிகம் உண்டு. செய்யும் செயல் புகழ் பாடும். நினைத்தது நடக்கும். தனலாபம், வேலை வாய்ப்பு, உத்தியோக உயர்வு, திருமண யோகத்தை 3-க்குக்குரிய செவ்வாய், 8-இல் அமர்ந்து வெற்றி கொடுப்பார். வழக்குகள் தீரும். விரோதியும் அடிபணிவர். வெளிநாடு வியாபாரம் கைமேல் பயன் கொடுக்கும். உயர்கல்வியும் அமையும். பெற்றோர் ஆசியால் அதிக சொத்து சுகம் கிடைக்கும். கேளிக்கை, சுற்றுலா பயணங்களுக்கு குறை இல்லை. பொதுவாக இந்த வருடம் எண்ணங்கள் ஈடேறும் ஆண்டாக இருக்கும்.



**மீனம்** - இந்த ஆங்கில புத்தாண்டு நல்லதொரு ஆண்டாக அமையும். வெற்றிலஷ்மி உங்கள் கையில் அமர்வாள். யோகமான சந்தர்ப்பங்கள் அமையும். தொட்டதெல்லாம் வெற்றி. தனஸ்தானத்தில் கேது இருந்தாலும், சுகஸ்தானத்தில் குரு, சப்தமத்தில் செவ்வாய், 8-இல் சனி, ராகு, 10ஆம் இடத்தில் சூரியன் புதன், சந்திரன், லாபத்தில் சுக்கிரன். ஜீவனஸ்தானத்தில் கூட்டுக் கிரகங்கள் பெரும் யோகத்தைக் கொடுப்பார்கள். வீடு, வாகனம், தோட்டம் இத்தனையும் அமையும். பொன், பொருள் கைமேல் தேடி வரும். எண்ணங்கள் ஈடேறும். திட்டங்கள் வெற்றி பெறும். தொழில்துறை, உத்தியோகம் நன்கு அமையும். குருவின் கருணையால் உடல்நலம் பெறும். பொதுவாக யோகத்தை தரும் இந்த ஆங்கில புத்தாண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலர்ந்து வா புதிய புத்தாண்டே 2014

இப்பூமியெங்கும்
சௌக்கியம்
கிடைத்திட
புலர்ந்து வா புதிய புத்தாண்டே

இனிய இன்பங்களை
அள்ளித் தந்திடவே
மலர்ந்து வா
புதிய புத்தாண்டே

மனைகள் எங்கும்
மங்கலம் தித்திக்க
மாற்றங்கள் அள்ளிவா
புதிய புத்தாண்டே

இம்சைகள் அகல ு
இதயங்கள் இங்கிதம் பெற
புலர்ந்து வா புதிய புத்தாண்டே

சிந்து சிவதாஸ்
ஐங்கரன் வீதி



# புத்தாண்டே வருக... 2014



"2013 ஆம்" ஆண்டே! சாதனைகள்
புரிய சாட்சியாயிருந்து
சரித்திரத்தில் இடம் பிடித்தமைக்கு- வந்தனை
"நன்றியுணர்வுடன்" நோக்கி
வழியனு ி வைக்கின்றோம்
மெல்ல நீ நகர்ந்து சென்றுவிடு..

"2014 ஆம்" ஆண்டே
மழலையாய் நீ வந்துதித்து விட்டாய்
வருக எம் மைந்தனே வருக..
வரலாற்றில் சிறப்பை நீ தருக..
வாழ்வியலில் வளங்கள் பல பெற்றிட
வழித்துணை நீ புரிக..

பட்டாசு வெடி கொளுத்தி
புத்தாடை யணிந்து உன்னை வரவேற்க
எம் மனங்கள்
பழையவற்றிலிருந்து மீட்சி பெறவில்லை
இருந்தும் வந்த இப் புதிய ஆண்டை
இல்ல வாசல்கள் தோறும்
வண்ண.. வண்ணக் கோலமிட்டு
மன மகிழ்வோடு வருக..வருகவென
வரவேற்கிறோம்..
புத்தாண்டே வருக..புதுமைகள் பல நிகழ்த்த...

து.திலக் (கிரி)
யாழ்./உரும்பையூர்













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூரதரிசனவீச்சு நலிவுற்ற சமூகத்தைக் கட்டியெழுப்பும்

மிகுந்த நம்பிக்கையுடனும், நிறைந்த எதிர்பார்ப்புக்களோடும் இன்னுமொரு ஆண்டுக்குள் பிரவேசித்திருக்கும் உங்கள் அனைவருடனும் இறையாசி நிறைவாகத் தங்க வேண்டுமெனப் பிரார்த்திக்கிறேன்.

பொதுவாக ஒரு புதிய காரியத்தைச் செய்யும்போது அல்லது புதியதொன்றில் பிரவேசிக்கும்போது எம்மை அறியாமலேயே திகிலும் அச்சமும் எம்மிடையே குடிகொள்ளக்கூடும். பலருக்கும் கடந்துபோன வருடம் பலவிதமான ஆசீர்வாதங்களை அருளிச்செய்த ஆண்டாக இருந்திருக்கும் வேளையில் போரினால் பாதிக்கப்பட்டவர்களாகவும், மனவடுக்கள் நிறைந்தவர்களாகவும் வாழ்ந்து வந்தோருக்குப் புதுவருடப் பிரவேசம் பல கேள்விகளை எழுப்புவதாகவே இருக்கும். எல்லாமே சரியாகிவிட்டது என்று சொல்லிப் போலி அமைதியை ஏற்படுத்துவது தவறு. மக்களின் நியாயமாக கேள்விகள் செவிமடுக்கப்படவேண்டும். மக்கள் நன்மையின் குறிக்கோளை (Purpose of goodness) மறந்து எதற்காக தீமையின் வல்லமைக்கு (Power of Evil) அதிகம்பயப்பட்டுஅதில்பெரிதும்சார்ந்திருக்கின்றனர்? இந்தக் கேள்வி எல்லாருடைய மனங்களிலும் எழத்தான் செய்யும். திருமறை கூறுகின்றது: "தீமையினால் வெல்லப்படாமல், நன்மையினால் தீமையை வெல்லு" ஆதலால் இறைவன் எமக்களிக்கும் நல்வாய்ப்புக்களில் சார்ந்திருப்பதும் அவற்றை நம்புவதுமே அவசியம். தீமை அதிகம் பலம்வாய்ந்தது. அது தெளிவாகவும் தெரியும், அதனை அனைவருமே பார்க்கலாம். அதேவேளை நன்மைத்தனம் அமைதியானது. பலவேளைகளிலும் துலாம்பரமாகத் தெரிவதில்லை. இப்புத்தாண்டில் எம்சமுகத்தின் நன்மைத்தனங்கள் தௌவாகப் பேசட்டும். அதுவே மக்களுக்கு உந்து சக்தியாகவும், பலமாகவும் அமையட்டும்.

நாம் நீண்ட காலமாக துன்பத்தில் வாழ்ந்துவிட்டோம். அமைதியை இழந்தோம், அன்புக்குரியோரைப் பறிகொடுத்தோம், சொத்துக்களை இழந்தோம். ஆயினும் எம்மிடமிருந்து ஒருபோதுமே பறிக்கமுடியாத விலைமதிப்பற்ற சொத்து எம்முடைய மாண்பு மாத்திரமே. ஆதலால் உடைந்துபோகக்கூடிய மானுட அதிகாரங்களின் அமைப்புக்களில் நம்பிக்கைகொள்ளாமல், ஐக்கியப்பட்ட தமிழ்ச் சமுதாயத்தினால் கிட்டும் அசைக்கமுடியாத பலத்தில் சார்ந்திருப் போம் வாருங்கள் என அனைவரையும்அழைக் கிறேன்.



கடந்துபோன 2013ம் ஆண்டில் எமக்குக் கிடைத்திட்ட சில வாய்ப்புக்களை மனங்கொள்ளுவோம். இவை பெரியதோர் பயணத் துக்கான உந்துசக்தியென ஏற்றுக்கொள்ளு வோம். நாம் ஓர் இனம், நாம் ஒரே மக்கள், நமக்கெனச் சிறப்புமிக்கதொரு வரலாறு உண்டு, நமக்கென மொழியுண்டு, நமக்கென மரபுண்டு. இவற்றை என்றுமே போற்றிப்பேணுவதற்கேதுவாக நீதியுடன் கூடிய சமாதானம் 2014ம் ஆண்டில் கிட்டவேண்டும் என்ற தன்னலமற்ற தூரதரிசனவீச்சை உள்வாங்கி அதன் நிறைவாக்கத்துக்காக எந்த விதத்திலும் அசைக்கப்படமுடியாதவர்களாக வாழுவோம் என்று திடசங்கற்பம் பூணுவோம் வாருங்கள் என அழைக்கிறேன். இந்தப் புத்தாண்டு சலாக்கியம் வறுமைக்குக் கவனம்செலுத்தும் ஆண்டாகவும், வல்லமை துயரத்துக்கு அடிபணியும் ஆண்டாகவும், மனவுருக்கத்துக்கே முன்னுரிமை வழங்கப்படும் ஆண்டாகவும் எமக்கு அமையட்டும் என்றுபிரார்த்திக்கிறேன்.

I pray that in this New year "Privilege" pays attention to "poverty" and "power" bows down to "pain" and "priority" given to "compassion."

**பேரருள் கலாநிதி டீ. எஸ். தியாகராஜா**
*பேராயர், தென் இந்திய திருச்சபை - யாழ். பேராயம் தலைவர், அமெரிக்கன் இலங்கை மிஷன்.*

# புனிதமாக பிறக்கட்டும் புதிய ஆண்டு




அனைவருக்கும் இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள் உரித்தாகுக. இறையருளால் இந்தப் புதிய ஆண்டில் அனைவரும் இன்புற்று வாழ பிரார்த்திக்கிறேன். எங்கள் திருநாட்டில் எல்லா மக்களும் எல்லாவிதமான சுதந்திரத்தோடும் வாழும் நாள் எந்நாளோ என்ற ஆதங்கம் தொடர்கிறது. உலகை ஆற்றுப்படுத்தக்கூடிய மாபெரும் சக்தி ஆன்மிகம் மட்டுமே. ஆன்மிகமில்லாத உலகம் அமைதியற்றது. அன்பர்களே ஆன்மிகத்தின் ஊடாக அனைவரும் ஒன்றுபட்டு பிரார்த்தியுங்கள். அறம் ஒருநாளும் தோற்றுப் போவதில்லை. அந்த நம்பிக்கையோடு அனைவரும் நல்ல பாதையால் நல்ல நோக்கத்தோடு பயணம் செய்வோம். 2013 எங்களிடமிருந்து விடைபெறுகிறது. விடைபெறும் ஆண்டில் நாம் சாதித்த சாதனைகளை இட்டுப் பெருமை கொள்வோம். விடைபெற்ற ஆண்டில் நாம் விட்ட தவறுகளை நினைத்து வெட்கப்படுவோம். விடைபெறும் ஆண்டில் நாம் நிறைவேற்றத் தவறிய விடயங்களை புதிய ஆண்டில் நிறைவேற்ற ஆவல் கொள்வோம். விடைபெறும் ஆண்டில் எம்மோடு வாழ்ந்து எம்மைவிட்டுச் சென்ற இனிய உறவுகளை நினைந்து பிரார்த்திப்போம். எங்களை அறியாமல் யாருக்கும் மனத்தினால் கூட தவறு இழைத்திருந்தால் இறைவனிடமும் எம்மால் பாதிக்கப்பட்டவர்களிடமும் மன்னிப்பு கேட்டுவிடுவோம். அதனால் மனச்சுமையை இறக்கிவிடுவோம். புதிய ஆண்டில் பழைய மனச் சுமைகளைச் சுமக்காது புதிய மனிதர்களாகக் காலடி எடுத்து வைப்போம். மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வதற்கு மாசற்ற எண்ணங்களை எண்ணுவோம். மனிதப் பிறவியை வெறுக்காது இந்தப் பிறப்பு எமக்குக் கிடைத்த அரிய சந்தர்ப்பமென்பதை உணர்வோம். புதிய ஆண்டில் பிறரைக் குறை கூறுவதைத் தவிர்த்து எம்மில் உள்ள குறைகளை நீக்கி பிறரையும் எம்மோடு அரவணைப்போம். எம் மண்ணில் நடைபெற்ற அவலங்கள் எந்தவொரு உலகிலும் என்றைக்கும் நடக்கக் கூடாதென இறைவனை மன்றாடுவோம். சோகத்தை சொந்தம் கொண்டாடுவதை விடுத்து சோகத் தினால் தவிப்ப வர்களை காப்பாற்றுவ தற்கு முயல்வோம். அழுவதால் பயனில்லை என்பதை பல வருட அனுபவம்எமக்கு உணர்த்தியுள்ளது. அழுவதைத் தவிர்த்து ஆக்க பூர்வமாகச் சிந்திப்போம்.

எம் இனிய ஆத்மிகப் பெரியோர்களே அனைவரும் ஒன்றுபட்டு எம் சமூகத்தைக் காப்பாற்ற முன்வருவோமாக. மதுவாலும் போதைப் பொருள்களாலும் பொலிவிழக்கும் எம் தலைமுறையைக் காப்பதற்கு வழி செய்வோம். கல்விச் சமூகமே ! எம் மண்ணில் நீவிர் சாதித்தவை ஏராளம். சூழலின் தாக்கத்தால் கல்வி என்றும் சோர்வடையக் கூடாது. அர்ப்பணிப்போடு எம் சமூகத்தை அறிவியல் உலகுக்கு பொருத்தமானவர்களாக ஆக்குங்கள். பெற்றோர்களே உங்கள் பிள்ளைகளை பாதுகாப்பதற்கு அக்கறை கொள்ளுங்கள். பிள்ளைகள் கேட்ப தெல்லாம் கொடுப்பதற்கு தயாராகுங்கள். நீங்கள் கொடுத்ததையெல்லாம் அவர்கள் சரியாகப் பயன்படுத்துகிறார்களா என கண்காணியுங்கள். பிள்ளைகளிடம் பிஞ்சு வயதிலேயே அன்பு, கருணை, இரக்கம், தயவு, சாந்தம், கொடை போன்ற உன்னத தன்மைகளை வளர்ப்பதற்கு ஆவன செய்யுங்கள். அரசியல் தலைவர்களே நீங்கள் ஆளுமை மிக்கவர்கள். மக்களுக்குச் சேவை செய்வதற்காக அரசியல் அங்கியை அணிந்துள்ளீர்கள். நீங்கள் எதைச் செய்வதானாலும் மக்களுக்காகச் செய்யுங்கள். மக்களிடம் நாடித் தேடிக் கரங்கூப்பி அவர்களின் கரங்களால் அரியணைகளில் அமரும் பாக்கியம் பெற்றீர்கள். அவர்களை நேசியுங்கள். உங்களுக்குள் உண்மையான உறவை வலுப்படுத்துங்கள். மக்களை நாடித் தேடிப் பெற்ற பலனை மக்களுக்குப் பகிருங்கள். உங்களை விட மக்களை மண்ணை, மனிதாபிமானத்தை நேசித்தவர்கள், நேசிப்பவர்கள் அன்றும் இன்றும் இருக்கிறார்கள். எனவேஒற்றுமையின் பலத்தால் உறுதியானஅரண்களாக நின்று மக்களைக் காப்பாற்றுங் கள். சொல்வதைச் செய்யுங்கள். நீண்ட உரைகள், விழாக்கள், செவ்விகள் யாவும் இன்று பொருத்தமற் றவை. மக்களோடு மக்களாக பணிகளில் இறங்குங் கள். உங்களை நம்பியவர்கள் ஏமாறக் கூடாது. புதிய ஆண்டு புனிதமாகப் பிறக்கட்டும். எங்களைச் சூழ்ந்த இருள்கள் அகலட்டும். அன்பினால் பண்பினால் ஆளுமையால் புதிய ஆண்டை வரவேற்போம். புதுமைகள் செய்வோம். பாடுபட்டு உழைப்போம். அனைவருக்கும் புத்தாண்டு சிறக்க ஆசியையும் வாழ்த்தையும் தெரிவித்து அமைகிறேன்.

**கலாநிதி ஆறு.திருமுருகன்,** *தலைவர்*
*ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் - தெல்லிப்பழை தலைவர் சிவபூமி அறக்கட்டளை.*




# நம்பிக்கையுடன் எதிர்நோக்குவோம்



காலங்கள் மாறுகின்றன. கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில். ஒன்றன்பின் ஒன்ருக வந்து போய்க்கொண்டு இருக்கின்றன. கால நீரோட்டம் விரைந்து ஓடுகின்றதென்பது மனித சமுதாயம் தோன்றிய காலத்திலிருந்தே காணப்பட்ட சிந்தனையாகும்.

**சாலப் பசித்தார் பொழுதும் போம்**
**பாலொரு அன்னம் புசித்தார் பொழுதும் போம், போம்**

என்பது ஒரு தமிழ்ப்பாட்டு. செல்வந்தர்கள் காலமும், ஏழைகள் காலமும் பொய்யாய் பழங்கதையாய் கனவாய், மெல்ல போய் விடுகின்றன என்பது அவர் கருத்து. கிறிஸ்தவ திருமறையிலும் காலம் குறுகியது என்ற சிந்தனையை நாம் பார்க்கலாம்.

**நாம் நேற்று உண்டானவர்கள் அல்லவோ**
**நமக்கு என்ன தெரியும்?**
**பூமியில் நமது நாள்கள் நிழலே**

என்பது இறைபக்தன் யோபுவின் வாசகங்களில் ஒன்று.

பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினாலே என்ற கூற்றினைப் போன்று புதிதாய் மலரும் 2014 ஆம் ஆண்டை நம்பிக்கையுடன் வரவேற்கின்றோம்.

**இதோ நான் புதிய காரியத்தைச் செய்கின்றேன் இப்பொழுதே அது தோன்றும் என்று கூறிய இறைவனின் வாக்கு இப்புதிய ஆண்டில் நிறைவேறும் என்ற நம்பிக்கையுடன் தொடர்ந்து செயலாற்ற வேண்டியது நமது கடமையாகும்.**

கடந்த ஆண்டை சற்றுத் திரும்பிப் பாரக்கும் போது, சர்வதேச ரீதியில் பல்வேறுபட்ட பொருளாதார பின்னடைவுகளையும், அரசியல் ஏமாற்றங்களையும், அனைத்து நாடுகளும் எதிர்கொள்ள வைத்த ஓர் ஆண்டாக இருந்தது. எமது இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்சினை யுத்தத்திற்கு பின்னராக நான்கு வருடங்களாகியும் தீர்வை எட்டவில்லை.

அது புதிய ஆண்டிலும் தொடர்ந்து சென்று ஒரு தீர்வை எட்டும் என காத்திருக்கின்றோம். கடந்த ஆண்டின் அவல நிலையும், ஏமாற்றங்களும், இப்புதிய ஆண்டிலும் தொடராமலிருக்க வேண்டுமென்று இறை வனைப் பிரார்த்திப்போம்.

**பூமியின் எல்லையெங்கும் உள்ளவர்களே, என்னை நோக்கிப் பாருங்கள், அப்பொழுது இரட்சிக்கப்படுவீர்கள், நானே கடவுள் என்னையல்லாமல் இரட்சகர் இல்லை** என்று கூறிய இறைவனின் அழைப்பிற்கு, நாம் அனைவரும் செவி சாய்க்க வேண்டும். இறைவனால் ஆகாதது ஒன்று மில்லை. இவ்வுலகம் அவரின் கைகளில் உள்ளது. ஆகவே தீமை செய்வோரும், அவர் தம் தீமையும் நெடு நாள் நிலைக்காது. எனவே

**சென்றதினி மீளாது மூடரே - நீர்**
**எப்போதும் சென்றதையே சிந்தை செய்து - கொன்று**
**அழித்தும் கவலை என்னும் குழியில் வீழ்ந்து குமையாதீர்**

என பாரதி பாடினான். கடந்த காலத்தின் துன்பங்களின் அனுபவங்களை மறந்து புதிய தரிசனத்தோடு நாம் இறைவனில் உறுதியான நம்பிக்கையோடு வாழும்படி அழைக்கப் படுகிறோம். இப்புதிய ஆண்டில், இறைவனின் அதிசயமான செயல்களை காண்பது நிச்சயம்.

**மலைகள் விலகினாலும், பர்வதங்கள் நிலை பெயர்ந்தாலும், என் கிருபை உன்னை விட்டு விலகாமலும், என் சமாதானத்தின் உடன்படிக்கை நிலைபெயராமலும் இருக்கும் என்று உன் மேல் மனதுருகுகிற கடவுள் சொல்கிறார்** கடவுளின் கிருபையும், சமாதானமும் உங்கள் யாவரோடும் கூட இருப்பதாக.

**அருட்பணி.இ.ராஜ்குமார்**
*நல்லாயன் ஆலயம், உடுவில்*



# புத்தாண்டில் பெரு வாழ்வு கிட்டட்டும்

அனைத்து இன மக்களும் ஒற்றுமையுடன் கொண்டாடும் நன்னாள் புத்தாண்டு தினமாகும்.

இது . இவ்வருடம் எமது முன்னோர்கள் நினைவாகக் கொண்டாடும் அமாவாசையுடன் கூடி வருவது மேன்மேலும் சிறப்பாக அமைகின்றது.

தீயனவற்றை மறந்து, நல்ல செயற்கரிய செயற்பாடுகளை துணிவுடனும், உறுதியுடனும் செய்வதற்கு இறைவனைத் தினமும் சில நிமிட நேரம் பிரார்த்தனை செய்வோமாக.

இறைவன் எமக்கெல்லாம் நன்மை செய்வார் என்ற முழு நம்பிக்கையுடன் , மக்கள் அனைவரும் சகல செல்வ யோகம் மிக்க பெருவாழ்வு வாழ வாலாம்பிகை உடனுறை வைத்தீஸ்வரன் பாதம் பணிந்து நல்லாசிகளையும் , புது வருட வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றேன்.

**சிவஸ்ரீ ப.மனோகரக் குருக்கள், பிரதம குரு,**
**வைத்தீஸ்வர சுவாமி தேவஸ்தானம் வல்வெட்டித்துறை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




























Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சிறப்பிதழ் 2014

## சுபீட்சமான எதிர்காலத்துக்காக ஒன்றிணைந்து உழைப்போம்



தமிழ்த் தேசிய இனம் எதிர்பார்த்த அளவுக்கு அரசியல் தீர்விலோ அல்லது மனித உரிமைகள் விடயங்களிலோ கணிப்பிடத்தக்க முன்னேற்றங்கீள் எதையும் அடையாமல் 2013 ஆம் ஆண்டு முடிவுக்கு வருகின்றது. எனினும் தமிழ் மக்களின் அரசியல் தீர்வாக அமையாது என கருதப்படும் மாகாண சபை முறைமை ஒன்று வடக்கு மாகாணத்தில் உருவாக்கப்பட்டு இருக்கின்றது. இந்த கட்டமைப்பையும் முறைமையையும் எங்களுடைய அரசியல் தீர்வு நோக்கிய நகர்வின் ஜனநாயகத் தளமாக கொண்டு செயற்படும் எண்ணப்பாடு வலுப்பெற்று வருகின்றது.

இந்தச் சூழ்நிலையிலேயே 2014 ஆம் ஆண்டு பிறக்கிறது. தமிழ்த் தேசிய மக்களை பொறுத்தவரையில் பல்வேறுபட்ட எதிர்பார்ப்புக்களையும் நிறைவேற்ற வேண்டிய ஆண்டாக இந்த புதுவருடம் இருக்கின்றது. போரினால் இடம் பெயர்ந்து இந்தியாவிலும் சொந்த மண்ணிலும் அகதிகளாக வாழ்கின்ற எங்களுடைய மக்கள் அவர்களது வாழ்விடங்களில் மீண்டும் குடியேற்றப்பட வேண்டும். தத்தமது வாழ்வாதாரங்களைத் தொலைத்து நிற்பவர்களுக்கு வாழ்வாதார வசதிகளை ஏற்படுத்திக்கொடுத்து தங்கு நிலை பொருளாதாரத்தில் இருந்து தனித்து நிற்கும் வாழ்வாதார நிலைக்குக் கொண்டு வரவேண்டும். அவரவர் காணிகளில் அவரவரே குடியமர வழிவகைகள் செய்யப்பட வேண்டும். தமது வாழ்வியலுக்கு விடிவு கிடைக்காதா? என்று எண்ணி ஏங்கி நிற்கும் பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கும், ஆதரவற்ற சிறுவர்களுக்கும், மாற்று வலுவுள்ளோருக்கும் அவரவரது வாழ்வை மேம்படுத்த வேண்டி இருக்கிறது.

விவசாயம், கைத்தொழில், மீன்பிடி போன்ற துறைகளில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டு அந்தந்தத் துறை சார்ந்த மக்களது பொருளாதாரம் மேம்படுத்தப்படவேண்டியுள்ளது. இந்தக் கனவுகள் செயலுருப் பெறுவதற்காக எமது மக்கள் சகல அச்சுறுத்தல்களையும் கட்டுப்பாடுகளையும் மீறி எமக்கு வழங்கிய ஆதரவையும் ஆணையையும் முன்னிலைப் படுத்தி எமது வடக்கு மாகாண சபை செயற்படும் என்ற நம்பிக்கை எமக்குண்டு.

இந்தச் சூழ்நிலையில் 2014ஆம் ஆண்டு மனித உரிமை தொடர்பான விடயங்களில் சர்வதேச நியாயம் கிடைக்கவும் எமது மக்களுக்கு சுபீட்சமான சுதந்திரமான ஒளிமயமான வாழ்வு கிடைக்கவேண்டும் என்றும் இறைவனைப் பிரார்த்தித்து வடக்கு மாகாண சபையின் சார்பில் வாழ்த்துகின்றோம்.

**சீ.வீ.கே.சிவஞானம்**
*அவைத் தலைவர், வடக்கு மாகாண சபை*

## வளம் நிறை வாழ்வுக்கு வழி வகுக்கட்டும்

பிறக்கின்ற புது வருடம் தமிழர்களின் மனங்களில் வளம்நிறைந்த எதிர்காலத்துக்கான நம்பிக்கை தரும் ஆண்டாக மலர வேண்டுமென நாம் அனைவரும் பிரார்த்திப்போம்.

எம்மவர் மத்தியில் நிலவும் அனைத்து பேதங்கள், பாகுபாடுகள், ஏற்றத்தாழ்வுகள் அனைத்தையும் விலக்கி உண்மையான, நேர்மையான மானிட நேயத்துக்காக பிறக்கின்ற புது வருடம் வழி வகுக்க வேண்டும்.

பல நெருக்கடிகளின் மத்தியில் எமது மக்களின் விடிவுக்காக நாம் கடந்து வந்த பாதைகள் காத்திரமான அனுபவங்களை எமக்காக விட்டுச்சென்றிருக்கின்றன. இந்த அனுபவங்கள் இனி ஒரு முறையான மக்கள் பணிக்கு எம்மை தயார்ப் படுத்த இப் புதுவருடம் சரியான திசை வழியை எமக்கு காட்ட வேண்டும்.

விடுதலையை தொலைத்துவிட்ட கோர போரினால் உடைமைகளுடன் உறவுகளையும் பறிகொடுத்துவிட்ட பின் இழப்பதற்கு இனி எதுவும் இல்லையென்ற நிலையில் மீண்டுவந்த எம்மக்களுக்காக இன்னும் கணிசமான பணிகள் எம்முன்னால் உள்ளன.

அவை தொலைநோக்குடன் எமது மக்களின் நீண்டகால அபிவிருத்தியை சிறப்பாக முன்னெடுக்கும் வகையில் சிறப்பாக திட்டமிட்டு வடிவமைக்கப்பட வேண்டும். செழிப்பானதொரு எதிர்காலம் அமைய அனைத்து மக்களுக்கும் எனது இதயம் கனிந்த புத்தாண்டு நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**கே.வி.குகேந்திரன்,** *ஈ.பி.டி.பி.யின் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பாளர்.*






## புதிய வாழ்வு உதயமாகட்டும்

இன்று 2013 ஆம் ஆண்டு விடைபெற்று புதிய 2014 ஆம் ஆண்டு உதயமா கின்றது.

ஒவ்வொரு ஆண்டும் ஆரம்பிக்கும் பொழுதும் புதிய ஆண்டில் முன்னைய ஆண்டுகளை விட ஏதாவது கூடுதல் நன்மை கிடைக்குமா என்ற எதிர்பார்ப்பு அனைவரது மனதிலும் குடிகொண்டிருக்கும்.

அந்த வகையில் உதயமாகும் புதிய ஆண்டில் மக்கள் வாழ்வின் துன்பங்கள் நீங்கி இன்பங்கள் பெருகி அனைவரும் உயர்வும், வளமும் பெற்று ஒற்றுமை யாக வாழ்ந்திட வேண்டுமென்று ஆசி கூறுகிறேன்.

**சிவஸ்ரீ சோமாஸ்கந்த தண்டபாணிக தேசிகர்,**
*இந்து மத குரு பீடாதிபதி, ஜே.பி*
*அகில உலக சைவ குருமார் சம்மேளனம்*
*பிரதம குரு, வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்பாள்*
*தேவஸ்தானம், வல்வெட்டித்துறை*

## புத்தாண்டு புதிய கதவுகளைத் திறக்கும்

பிறக்கும் புத்தாண்டு தலைநகர தமிழருக்கு புதிய கதவுகளைத் திறக்கின்றது. கொழும்பு, கம்பஹா, களுத்துறை மாவட்டங்களில் எங்கள் இனத்தின் அரசியல் பலத்தை உறுதிபடுத்தி காட்டும் வாய்ப்பு இன்னமும் சில தினங்களில் கலைக்கப்படவிருக்கும் மேல்மாகாண சபைக்கான தேர்தலின் போது எமக்கு கிடைக்கவிருக்கின்றது.

இன்று எங்களுக்கு எஞ்சியுள்ள ஒரே ஆயுதம் வாக்குசீட்டு என்பதை நம்மில் ஒவ்வொருவரும் உணர்ந்து, வட மாகாணத்தில் தமிழ் மக்கள் வாக்களித்ததை போன்று, மத்திய மாகாணத்தில் தமிழ் மக்கள் வாக்களித்ததை போன்று, எங்கள் அரசியல் பலத்தை மேல்மாகாணத்தில் எடுத்துக் காட்ட உறுதி பூணுவோம்.

புதிய ஆண்டில் நமது மக்கள் ஏனைய சகோதர இனத்தவர்களுக்கு சமானமாக வாழ்ந்துகாட்ட தயாராக வேண்டும். அதற்கு உரிய அரசியல் அந்தஸ்தை நாம் பெற வேண்டும். நிகழ்காலத்தில் நின்று, வரலாற்றை திரும்பி பார்த்து, எதிர்காலத்தை எதிர்கொள்ளக் கோரு கிறேன்.

**மனோ கணேசன்,**
*தலைவர்,*
*ஜனநாயக மக்கள் முன்னணி.*

## '2014' சமூக அமைதியையும் இன ஐக்கியத்தையும் தரட்டும்

2014 ஆம் ஆண்டு சமூக அமைதியையும், இன ஐக்கியத்தையும் தரும் ஆண்டாகத் திகழ வேண்டும்.

பல் சமய கலாசார, மொழியைக் கொண்ட மக்கள் வாழும் எமது இலங்கைத் திருநாட்டில் பிறந்திருக்கும் இவ் 2014 ஆம் புதிய ஆண்டு எல்லோருக்கும் மகிழ்ச்சி நிறைந்த ஆண்டாக இருக்க வேண்டும்.

அதற்கு நாம் அனைவரும் வேற்றுமைகளைக் களைந்து ஒரே நாட்டின் மக்கள் என்ற உள்ளத்து உணர்வுடன் இவ்வருடத்தை வரவேற்க வேண்டும்.

இனம், மதம், மொழிகள் என்ற வேலிகளைத் தாண்டி ஐக்கிய இலங்கைக்குள் வாழும் மக்களாக பொறுமை, விட்டுக்கொடுப்பு, சகிப்புத் தன்மை, ஏற்றுக் கொள்ளுதல் போன்ற நற்பண்புகளை ஒவ்வொருவரும் கடைப்பிடிக்க வேண்டும்.

பிறந்திருக்கும் இவ் 2014 ஆம் புதிய ஆண்டு எல்லோருக்கும் மகிழ்ச்சி நிறைந்த ஆண்டாக இருக்க வேண்டும். அதேவேளை சுயநலமற்ற சுதந்திரத்தை நாட்டில் உள்ள அனைவரும் அனுபவிக்க வேண்டும் என எல்லோருக்கும் பொதுவான இறைவனை வேண்டி நிற்கிறேன்.

**றிப்கான் பதியுதீன்**
*வடமாகாண சபை உறுப்பினர்*

பிறக்கும் புத்தாண்டு அனைவருக்கும் சுபீட்சமாய் அமைய வாழ்த்துகின்றோம்



ஓடர் நகைகளைக் குறித்த தவணையில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்

பிறேம் For Modern & Distinctive
நகைமாடம்
Prem Nagai Maadam
பிரீத்திகா கவரிங்
# 171, Prem Plaza, yarl Road, Manipay.
Tel: 077 303 9572, 021 320 9167
(C/14581)(10.6.3)

நேரடியாக கொழும்பிலிருந்து தருவிக்கப்பட்ட பொருட்களை யாழ் விலையில் சாவகச்சேரி நகரில் பெற்றுக்கொள்ள....
இல. 03, தனங்கிளப்பு வீதி, சாவகச்சேரி
(நவீனசந்தை அருகாமை)
2014
வாரீர் வந்து பெறுவீர்... தனங்கிளப்பு வீதியில்
பொதிகை
கொம்பியூட்டர் கிராபிக்ஸ்
புத்தகசாலை
பாடப்புத்தகங்கள்
T.P :0212270447
email :-phothigai@gmail.com
14-01-2014 வரை ஞாயிறுகளிலும் வியாபாரம் இடம்பெறும்
விசேட கழிவு விலையில்
அதிரடி விலைக்கழிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனிய புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்

# நதியா நகை மாடம்



இல.02, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 3479

கிளை:
கவுசன் நகைமாடம்
இல. 129, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(சி/14535)(10.6.3)

இனிய புதுவருட வாழ்த்துக்கள்

# ஆறுமுகம் சிற்பாலயம்



Specialist All Kinds of Wood Carvings, Sculptures, Temple Chariots, Vaganams, Rathams and etc...

**Arumugam Sitppalayam**
Kalikovilady, Thirunelvely West, Jaffna. T.P:021- 2222892

# K.T. PLAZAA



இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்!

அசல் 22 கரட் தங்க நகைகள்
விரும்பிய டிசைன்களில் உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்.

ஆசைப்பிள்ளை
அன் சன் நகைமாடம்

K.T.பிளாசா, பிரதான வீதி, சங்கானை. தொ.பே: 021 321 2399



எமது வாடிக்கையாளர் அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்கள்

# அம்பாள் மரக்காலை

இல.261, பருத்தித்துறை வீதி,
வீரமாகாளி அம்பாள் கோயிலடி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
தொ.பே: 0777111147

அனைவருக்கும் இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்!



பண்டிகைக்காலத் தெரிவுக்கு....

ஆடவர், நங்கையர், சிறுவர்கள் மற்றும் பெரியவர்களே!
உங்கள் விருப்பத்துக்கு ஏற்றவகையில்
ஆடைகளைத் தெரிவுசெய்ய நாட வேண்டிய இடம்

# பெஸ்ட் இன் ரெக்ஸ்ரைல்



Best In's Textiles

59/2, பெரியகடை, யாழ்ப்பாணம்.
8V, பெரியகடை, யாழ்ப்பாணம்.
(C/14566)(10.6.3)

# புதுவருட வாழ்த்துகள்

**Bank of Ceylon 2nd Branch** முகாமையாளர்
அன்பும் ஆதரவுடனும் வாடிக்கையாளர்களுக்கு ஆலோசனைகளும்
உதவிகளையும் வழங்கும் **திரு. பிறேமதாசன்** அவர்களுக்கும்
அங்கு பணிபுரியும் ஊழியர்களுக்கும் புதுவருட வாழ்த்துக்கள்.
தொடர்ந்தும் பணிபுரிந்து வாடிக்கையாளர்களுக்கு உங்கள் சேவைகளைச்
சிறப்புறச் செய்ய வாழ்த்துகின்றேன்.

**Bank of Ceylon திருநெல்வேலி Branch**
**திரு. சந்திரகுமார்** அவர்களுக்கும்
அங்கு பணிபுரியும் ஏனைய ஊழியர்களுக்கும் புதுவருட வாழ்த்துக்கள்.

**சிசில் Branch** முகாமையாளர் **தவசீலன்** அவர்களுக்கும்
எனது புதுவருட வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

**இராஜேஸ்வரி புடைவைக்கடை** (மின்சார நிலைய வீதி).
உரிமையாளர் **திரு. நித்தியானந்தன்** அவர்களுக்கும்
புதுவருட வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

வாழ்த்துபவர்
**சிறிதரன்**
**Venuga Comminication**
K.K.S.வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
(நாச்சிமார் கோயில்) 077 547 3126

# BRITISH COLLEGE OF HIGHER STUDIES

BCHS

O/L பரீட்சை எழுதிய மாணவர்களினது நன்மை கருதியும்,
வருகின்ற புத்தாண்டு 2014 ற்காகவும்
விசேட கட்டணக் கழிவில் சர்வதேச தரம் கொண்ட கற்கைநெறிகள்

இன்னும் சில மாதங்களில் நீங்கள் உயர்தரத்திற்குச் செல்லலாம், படித்துப் பட்டதாரி ஆகலாம், வேறு சிலர் தொழிற்சந்தையிலே நல்ல வேலைவாய்ப்பைத் தேடலாம் அல்லது வேறு உயர் கற்கைநெறிகளைக்கற்று நீங்கள் வாழ்க்கையை முன்னேற்ற விரும்பலாம். ஆனால் இக் கனவையெல்லாம் நீங்கள் நனவாக்க வேண்டுமானால் தற்போதைய காலகட்டத்திலே ஆங்கில அறிவு மிக மிக அவசியமானது.

## Spoken English With Grammar - Quick Learning Course

Duration: (1 1/2 Months)

- சர்வதேச தராதரத்திற்கேற்ற பாடத்திட்டம்.
- கற்கைநெறிகள் Reading, Writing, Speaking, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகிறது.
- விரிவுரைகள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாக (Audio & Video) நடைபெறுகின்றது.
- ஒவ்வொரு மாணவருக்கும் தனிப்பட்ட கவனம் செலுத்தப்படும்.

**நீங்கள் ஆங்கிலத்தில் உரையாட 100% உத்தரவாதம் தரப்படும்.**

## Diploma In English

Duration: (2 Months)

தற்காலத்திலே ஆங்கிலத்தின் தேவையும், அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. உயர் கல்வி கற்பதாயினும் சரி, அலுவலகத்தில் வேலை புரிவதாயினும்சரி, Internet, E-mail, Internet Chatting மற்றும் நாளாந்த வாழ்க்கையிலே இலத்திரனியல் சாதனங்களை பாவிப்பதிலும் சரி ஆங்கிலத்தின் தேவையை யாரும் புறந்தள்ளமுடியாது. இதை நாம் நன்கு உணர்ந்து எல்லோரும் இலகுவில் கற்கக்கூடிய விதத்தில் ஒரு பாடத்திட்டத்தினைப் புதிய தொழில்நுட்பங்களுடன் (Audio & Video System) அமைத்துள்ளோம்.

## B1 Exam Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது

City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளைவிட மிகவும் இலகுவானதுடன் IELTS-4.5இற்கு ஒப்பானது. இது British High Commission இனால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்குத் தோற்றமுடியும்.

Duration: (2 Months)

## IELTS Acadamic/General

Duration: (2 Months)

(International English Language Testing System)
Student Visa / Migration Visa மூலம் Canada, Newzeland, USA, Australia, UK போன்ற நாடுகளுக்குச் செல்பவர்களுக்கானது.

**We gurantee success rate 6.5 band and above**

## A1 Exam Sponsor / Settlement Visa மூலம் UK செல்பவர்களுக்கானது

- UK அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது (City & Guilds)
- எமது கல்லூரியிலேயே பரீட்சைக்குத் தோற்ற முடியும்.
- சான்றிதழின் கால எல்லை வரையறையற்றது.
- நம்பிக்கைக்குரிய சர்வதேசப் பரீட்சை.
- ஏனைய பரீட்சைகளைவிட மிகவும் இலகுவானது.

எமது நிறுவனத்தினால் 800க்கும் மேற்பட்ட மாணவர்கள் பரீட்சையில் சித்தி எய்தி வெளிநாடு சென்றுள்ளார்கள்

Duration: (2 Months)

**Batches Starting on**
06-01-2014 @ 9.00am
11-01-2014 @ 11.00am
15-01-2014 @ 9.00am
20-01-2014 @ 10.00am
25-01-2014 @ 9.00am

Head Office : No.30 1/5, W.A. Silva Mawatha, Colombo -06. Tel :0112500207
No.15 2/1, Sirambiyadi Lane, Stanley Road, Jaffna. Tel : 021-2224550
No.3, 6th Lane, Vairavarkovil Veethy, Vairavapuliyankulam, Vavuniya. Tel : 024-3245287

Hot Lines : 0777585913, 0777222422 , 0714299935, 0777730074


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுஜீவா வைத்தியசாலை

## (சுஜீவா தாய்மைப் பேற்று சிறப்பு சித்த ஆயுள்வேத வைத்தியசாலை)

கலட்டியம்மன் வீதி (தட்டாதெருச் சந்திக்கும்
நாச்சிமார் கோயிலுக்கும் இடையில்)
கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம். T.P: 077 559 4147

சேவை நேரம்: காலை 7.00 மதியம் 11.00 மாலை 3.00 - 5.00 வெள்ளிக்கிழமை விடுமுறை




**பொறுப்பு வைத்தியர்**
Dr.ச.ஜெயலன் (D.A.M, RIMP), J.P
25ஆவது அனுராதபுர களத்தாவ (நாகர் இராஜ) பரம்பரை
முன்னாள் விரிவுரையாளர் லங்காசித்த ஆயுள் வேத மருத்துவக்கல்லூரி.



Dr.க.ஒ.இராஜரத்னம் (RIMP) 24ஆவது
அனுராதபுர மகா களத்தாவ (நாகர் இராஜ) பரம்பரை,
குடும்பத் திட்டவியலாளர்.
சிங்கள மொழியில் ஆயுள்வேத சர்வாங்க பரீட்சையிலும்
விஷகடி விசேட பரீட்சையிலும் சித்தியடைந்தவர்.



Dr.ஜெ.ஜெயலன் (D.A.M, RIMP) J.P
குடும்பத்திட்டவியலாளர், பயிலுனர்,
சட்டபீடம் இலங்கை திறந்த பல்கலைக் கழகம்,
கௌரவ செயலாளர்,
வட இலங்கை சுதேச வைத்தியசபை.



சுஜீவா வைத்தியசாலைக்கான அடிக்கல்லை சுதேச வைத்திய அமைச்சர், பிரதி அமைச்சர், பேராசிரியர் ந.யோகராஜன் ஆகியோர் நாட்டியபோது

பல நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட எமது 23 தலைமுறைகளுக்குரிய ஓலைச்சுவடிகளிலுள்ள வைத்திய நுணுக்கங்கள் எமக்குக் கிடைத்த பல வைத்திய மேதைகள் (நல்லூர் அரசர்கள் செகராஜ சேகரன் பரராச சேகரன் உட்பட) கையாண்ட வைத்திய முறைகள். யாழ்ப்பாணம் லங்காசித்த ஆயுள்வேத மருத்துவக்கல்லூரி ஆசான்கள் கற்பித்தவை. அதிசிறந்த ஆயுள்வேத நூல்களில் உள்ளவை. நவீன முறைகள் மூலமாகவும் எம்மால் தயாரிக்கப்பட்ட இயற்கை மருந்துகள் மூலமாகவும் மாற்ற முடியாதெனக்கருதிக் கைவிடப்பட்ட வியாதிகளை (வாதம், முட்டு, மாறாச்சளி, வயிற்றுப்புண், மூலம், பாரிச வாதம், சிறுநீர்ப்பை கற்கள், சருமநோய் (சோரியாசிஸ்), உடல் பருமன்; தலைமுடி உதிர்தல், நரம்பு வியாதிகள் உட்பட) நீக்குவதில் பெயர் பெற்றதுடன் விசேடமாகக் குழந்தை இன்மைக்கான சிகிச்சையில் நூற்றுக்கணக்கான குழந்தைகளை உருவாக்கி பிரபல்யமடைந்துள்ளது.

### இந்தியா மற்றும் இலங்கையில் அதிநவீன சிகிச்சைகளால் குணப்படுத்த முடியாது கைவிடப்பட்டு குழந்தைகளுக்கு ஏங்கும் தம்பதிகளுக்காக இங்கு நீக்கப்படும் ஆண், பெண் இருபாலாருக்குமான குறைகள்.

பரம்பரை/பிறவிக்குறைபாடுகள்/வயது வந்தும் பருவமடையாமை/மாதவிடாய் குறித்த காலத்தில் வராமை /அதிக மற்றும் குறைந்த குருதிப்போக்கு/ வயிற்றுவலி / இயல்புக்கு மாறான கருப்பை/சூலக கருப்பைக் கட்டிகள்/முட்டை ப்லோப்பியன் குழாய், கருப்பைக் கழுத்துக் குறைபாடுகள் / கொழுப்பு / நோய்த்தொற்று / கருச்சிதைவு / கருக்கலைப்பு மற்றும் அறுவை சிகிச்சை என்பவற்றால் உண்டான அழற்சிகள் / வெள்ளைபடல் / உளவியற் காரணங்கள் ஓமோன் சமச்சீரின்மை / பெண்ணில் ஆண் இயல்பு (முக உரோமம்) / உடலுறவில் நாட்டமின்மை, உடல் சூடு / உடலுறவில் வலி, நோய், எரிவு/மார்பக வளர்ச்சி குறைபாடு.


விந்து இல்லாமை, எண்ணிக்கை குறைவு, உருவ அமைப்பு பிழைகள், ஓடும் திறன் குறைவு/ நோய்த் தொற்று/விதையில் தடித்த நாளங்கள் (Varicousvein) சுருங்கிய குழாய்கள்/ நோயெதிர்ப்பு பொருள்/ ஆண் குறி சிறுத்தல்/ விறைப்புத் தன்மை குறைவு/ விரைவான விந்து வெளியேற்றம் / சிறுநீருடன் அல்லது தன் பாட்டில் விந்து வெளியேறல்.



வைத்தியர்களின் திருமணத்திற்கு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சோ. சேனாதிராஜா அவர்கள் வந்து ஆசீர்வதித்தபோது



50 வருடங்களின்பின் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற சுதேச வைத்திய மாநாட்டுக்கு வைத்தியர் ஜெ.ஜெயலன் தலைமைதாங்கி உரையாற்றியபோது (2009)



மிக நீண்ட காலத்துக்குப் பின் அமைச்சர்களை ஆயுள்வேத கல்லூரிக்கு அபிவிருத்திக்காக அழைத்துவந்தபோது (கிரான்வீதி)



எமது வைத்தியசாலையின் இலவச சுதேச வைத்திய முகாம் காரைநகரில் (2003)



லங்கா சித்த ஆயுள்வேத கல்லூரி பவள விழாவின்போது ஏடுகள் கண்காட்சியில் (2002)



மாண்புமிகு ஜனாதிபதியின் சொலனரி வைத்தியரின் வீட்டில் (2010)



10000 மரம் நாட்டல் திட்டம்



50 வருடத்தின் பின் அரச அங்கீகாரமுடைய DAM பட்டம் ஆயுள்வேத கல்லூரி சார்பாக உத்தியோகபூர்வமாக வழங்கியபோது



வைத்தியரின் வீட்டில் நா.உ M.K. சிவாஜிலிங்கம் அவர்கள் (2003)



முன்னாள் ஆயுள்வேத அமைச்சர் பியசேன கமகே அவர்களுடன்



பல்வேறு நிகழ்வுகளின்போது



பல நிகழ்வுகளின் போது



பல நிகழ்வுகளின் போது



பல நிகழ்வுகளின் போது



வைத்தியரை கௌரவித்த போது



வைத்தியரை கௌரவித்த போது



வைத்தியரை கௌரவித்தபோது



பல நிகழ்வுகளின்போது



சுஜீவா வைத்தியசாலை (சுஜீவா சிறப்பு சித்த ஆயுள்வேத வைத்தியசாலை) ... அமைச்சர் திறந்து வைத்த போது



எமது வைத்தியசாலையின் சிகிச்சையால் பிறந்த குழந்தைக்கு வைத்தியசாலை ... சுதேச வைத்திய அமைச்சர் பரிசு வழங்கிய போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எமது சுதேச மருத்துவம் சிவபெருமானால் உருவாக்கப்பட்டது. இதற்கு சாதி மத இன பேதம் கிடையாது. எமது வைத்தியம் எல்லோருக்கும் பொதுவானது. எமது வைத்தியத்திற்கு முற்காலத்தில் அரசர்கள் ஆதரவு தந்தார்கள். அதேபோல் இக்காலத்திலும் சகல அரசியலாளர்களும் ஆதரவு தரவேண்டும்" இந்த வழியில் சுதேச மருத்துவம் வளர பாடுபடுவோம்.

# எம்மை என்றும் தாங்கு

காலத்தாயின் புதிய குழந்தை
உன்னை எதிர்பார்க்கிறது என் சிந்தை
உன் அண்ணன் ஓடி மறைந்த
வேகம் விந்தை நீ பிறக்கும் போது
இறக்க வேண்டும் எம் அகந்தை
எம் சிந்தனைகள்
உயர்வாய் வளர புத்தாண்டே
இனிதாய் மலர்க
இரண்டாயிரத்து பதின்நான்கு
எம்மை என்றும் தாங்கு

நா. அகிலன், கொக்குவில்.

வாடிக்கையாளர் அனைவருக்கும்
இனிய புத்தாண்டு
வாழ்த்துக்கள்
ஜெகன் களஞ்சியம்
இல. 477, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 5035

புதிய புத்தாண்டில் சகல ஐஸ்வரியங்களும்
பெற்று வாழ வாழ்த்துகின்றோம்.
மங்களா காட்சியறை
Mangala
Office & Home Furniture
MANGALA SHOW ROOM
536, K.K.S. Road, Jaffna.
021 222 8367, 021 492 1099, 0777 286069
mangalashowroom@gmail.com
Authorized Dealers For
ARPICO DAMRO Nilkamal Piyestra PhoEnix The name for plastic
(C/14551)(10.6.3)

அனைவருக்கும் இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்
R.V.G
ஸ்தாபனம்
58, நல்லூர் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 6806
ஆங்கில மருந்து வகைகள், ஊட்டச்சத்துக்கள் மற்றும் பால்மா வகைகள்
அனைத்தையும் நியாயமான விலையில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்
ஆர்.வி.ஜி மருந்தகம்
504, ஆஸ்பத்திரி வீதி, (O.P.D முன்பாக) யாழ்ப்பாணம். தொ.பே. 0212222129
(C/14544)(10.6.3)

பிறக்கும் புத்தாண்டு அனைவருக்கும் இன்பமாய் அமைய வாழ்த்துகின்றோம்
அபிராமி
ABIRAMI SHOE CENTRE
சூ சென்ரர்
(C/14573)(10.6.3))
155, 156 Model Market. Power House Road, Jaffna. 021 222 3525

அனைவருக்கும் சுபீட்சம் தரும் புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்
திருமணப் பட்டுப் புடைவைகளுக்கும் நவீனரக
ஆடைத் தெரிவுகளுக்கும் சிறுவர்-சிறுமியர்களுக்கான
சிறந்த ரெடிமெற் ஆடைகளுக்கும்
லலிதா ரெக்ஸ்
(கல்யாணப் பட்டுப் புடைவைகளின் கைராசி நிறுவனம்)
இல.5, 6, நவீனசந்தை,
யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 5260
(கி/14574)(10.6.3)
புத்தம் புதிய ஆடைத் தெரிவுகளை மற்றும் நவீன்காலணி வகைகளை
நித்தம் நித்தம் அறிமுகம் செய்யும் ஸ்தாபனம்
நியூ லலிதா ரெக்ஸ்
DSI & ஆ பலஸ்
(கல்யாணப் பட்டுப் புடைவைகளின் கைராசி நிறுவனம்)
இல.42, பஜார் வீதி, வவுனியா. T.P: 024 222 1234

டயானா
புத்தாண்டில் பூத்துக் குலுங்க எமது வாழ்த்துக்கள்
பிளாஸ்ரிக் தொழிலகம் எந்தப்பொருளையும் எரிப்பதை நிறுத்துவோம்
Dayana
Recycle Plastic Industries
புதிய வடிவிலான கீடெக் வியாபார ஸ்தாபனங்களுக்கு
அவர்களின் விலாசம் இடப்பட்டு தொகையாகவோ
சில்லறையாகவோ செய்து கொடுக்கப்படும்
ஓடர்களுக்கு முந்துங்கள்
இல. 06, கனகசபை லேன், சிவலிங்கப்புளியடி,
கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். Tel: 021 222 8680, 0775925088, 0750407430 E-mail: dayanaplastic0@gmail.com
கிளை: இல, 30/27, முத்த விநாயகர் இரண்டாம் ஒழுங்கை, நல்லூர்.

OLYMPIA
SALON
FULL AIR CONDITIONER
Gents & Ladies Hair Cutting
Dye & Colouring, Massage
Facial & Cleanups, Curling
Steam Facial, Straightening
உதிக்கும் புதுவருடத்தில் சகல சுபீட்சமும் பெருக
எமது மனம் நிறைந்த வாழ்த்துக்கள்
SANTHIYA
Multi Courtyard
Dealers in Fancy & Gift Items
No.531, Point Pedro Road, Nallur, Jaffna. 0094 021 2226960
E-mail. santhiyajaf@walla.com
WESTERN UNION
MONEY TRANSFER
MMBL Money Master

பிறக்கும் புத்தாண்டில் புதுப்பொலிவுடன் மிளிர வாழ்த்துகின்றோம்
கஜசங்கவி சென்ரர் & பிறிண்டேர்ஸ்
எம்மிடம் சகலவிதமான திருமண அழைப்பிதழ்கள்,
பூப்புனித நீராட்டுவிழா அழைப்பிதழ்கள், கேக் பெட்டிகள்,
அன்பளிப்புப் பொருள்கள் என்பனவற்றைப் பெற்றுக்கொள்ளலாம்.
(கி/14558)(10.6.3)
இல. 237, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். 021 222 7885, 077 603 1071 No.237, K.K.S. Road, Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளன்போடு... வரவேற்போம்....

புலரும் புத்தம் புதிய ஆண்டில்
தத் தம் மனங்களை தூய்மையாக்கி
நித்தம் இறை பாதம் தொழுதேத்தி..
மானிலம் செழித்து
இல்லங்கள் தோறும்
உள்ளன்போடு உறவுகளை மதித்து- வந்த
இப் புதிய ஆண்டை
மகிழ்வுடனே வரவேற்று..
சாதி, மத பேதமின்றி- எதிர்கால
சந்ததி நிமிர்வுக்காய்
கலை, கலாசார, பண்பாட்டு, விழுமியங்கள் பேணி
பெரியோர் ஆசியுடன்- 2014 ஆம் ஆண்டை
வரவேற்று மகிழ்ந்திடுவோம்...

து.திலக் (கிரி)
யாழ்./உரும்பையூர்



## வருக புத்தாண்டே

- அருவி

இனியாவது என்று
எண்ணி எண்ணித்தான்
உன்னை வரவேற்கிறோம்.....
மாதங்கள் கடந்து
புதிய ஆண்டாய் வருகிறாய்
நாங்கள்
போலிகளைத் தொலைக்க
முடியாது வெறும்சாயம்
பூசிக் கொண்டு
நல்மனிதம் தேடுகிறோம்.......
வருடத்தில் எத்தனை
நாள்கள் தருகிறாய்
கடந்து வந்த பாதையை
மறப்பவர் நாங்கள்தான்
வருடத்தின் முடிவில்
அதனைப் பார்க்க
வைக்கிறாய்.......

ஆண்டுத் திட்டம்
வகுக்கிறோம் - நீயே
அதனை ஆண்டுகொள்கிறாய்
காலத்தின் சுழற்சியால்
இறந்து கொண்டும்
பிறந்து கொண்டும்
இருக்கிறாய் - உன்
பிறப்பை
கொண்டாடிய
நாங்கள்
இறப்பை மறந்து
விட்டோம்.......

உன் நாள்கள்
கொலை
செய்யப்படுகின்றன
நாள்காட்டியில் -
ஆயினும்
கடிகார முட்களாய்
நாளும் எங்களை
சுழன்று சுழன்று
வழிகாட்டுகிறாய்....

போனது
போகட்டும்
வருவது இனிதாய்
இனிவரும் எனும்
வார்த்தைகளின்
நம்பிக்கை
நீயும்
நாங்களும்தான்
வருக
புத்தாண்டே....










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# 2014

## புதிய வரலாறு படைக்க பிறந்து வருக!

புத்தாண்டே வருக!
வடக்கையும் கிழக்கையும் இணைத்து-புதிய
வரலாறு தமிழர் படைக்க
வாழ்த்துச் சொல்லிப் பிறந்து வருக !

வழக்கினால் பிரிந்த வடக்கு கிழக்கை
வாக்கெடுப்பினால் மீண்டும் இணைக்க,
குறுக்கு வழி அரசியல் வெற்றிகளை
குழி தோண்டி மண்ணில் புதைக்க,
ஒடுக்கு முறைகளை உலகில் அழிக்க
ஓங்கார பலத்தோடு பிறந்து வருக!

அடக்குமுறை இல்லாத தமிழர் ஆட்சியை
அன்னை பூமியில் நிலை பெறச் செய்ய
துவக்கு இல்லாத அன்பாட்சியை அமைத்திட
தாயக மண்ணில் தமிழர் வாழ்வு வளமாக
தேசிய இனமான தமிழரின் நிலங்கள்
திட்டமிட்டு அபகரிப்பதை தடுத்து நிறுத்த,
அடைக்கலம் தேடி தமிழர் அயல் நாடுகள் ஓடும்
அவலத்தை நிறுத்த அருள் செய்து பிறந்து வருக!

தியாகங்கள் வீண் போகாது இருக்க
திரும்பிய திசையெல்லாம் தமிழர்
தெம்போடு சுதந்திர கீதம் பாட
புயலின் வேகத்தோடு துரோகங்கள்
புறமுதுகு காட்டி ஓடச் செய்ய
மாற்றுத் திறனாளிகளுக்கு புது வாழ்வு ஏற்பட
மங்கையரின் மாறாத துயரங்கள் மறைய
மகா கருணை மழை சிந்தி 2014 பிறந்து வருக !

வி.ப.செல்வநாதன்
"கங்கா பாம்" நெல்லியடி.













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிங்கப்பூர் ஜுவல்லறி

பிறக்கும் புதிய ஆண்டில் சிறப்புற மக்கள் நலமாக வாழ வாழ்த்துகின்றோம்

**SINKAPOORE JEWELLERY**

றெடிமேற் நகைகளுக்கான சாம்ராஜ்யம்



இல.93, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 4590260

(C/14548)(10.6.3)



# BOMBAY SWEETS & CREAM HOUSE

பொம்பே கீறீம் கவுஸ்

NO.605A, K.K.S ROAD, JAFFNA. T.P:0212223525

இங்கு சுவிற் வகைகள், வடை, றோல், கேக் வகைகள் ஓடர்களுக்கு செய்துகொடுக்கப்படும். அத்துடன் உரிய இடத்துக்கு கொண்டு வந்து தரப்படும்

(C/13083) (10.6.3)

வாடிக்கையாளர் அனைவருக்கும் எமது புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்



No: 605-A, K.K.S. Road, Jaffna. T.P: 021 222 3525

எமது பெருமதிப்பிற்குரிய வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள், கடந்த ஆண்டு தாங்கள் தந்த நல்லாதரவை நன்றியுடன் நினைவு கூரும் அதே வேளை மலரும் புத்தாண்டிலும் தங்கள் ஆதரவை நாடிநிற்கின்றோம்.

# ALL HOSPITALS, NURSING HOMES, PHARMACIES, LABORATORIES & HEALTHCARE ORGANISATIONS.

**Few of the surgical and healthcare items available in our show room**

எம்மிடம் உள்ள பற்பல வைத்திய உபகரணங்களும் சத்திரசிகிச்சைக்குரிய கருவிகளுள் சில...

## ECG Machine



E.C.G. MACHINE - Rs. 60,500.00

## Wheel Chair




Wheel Chair - Normal-Rs.9800.00
Full option Wheel Chair-Rs. 21.500.00
Commode Wheel Chair -Rs. 14,950.00

## Walkers



Walker with Out Wheels- Rs.4,680.00
Walker S.S- Rs.4,900.00
Walker Two Wheel- Rs.5,200.00
My steel Metallic white- Rs.3950.00
My steel Metallic brown- Rs. 3950.00

## Needle Burners



Needle Burnt to Ashes Rs. 11,000.00

## Nebulizers



NunebproBelgium Rs.6,200.00
Nubulizer 3AUSA Rs.6,900.00
Aeon With one Year Warranty Rs.6,400.00

## Gluco Meters



Auto Code Taking - Rs. 4950.00
(Allowance your Redding)
Auto Code Pocket - Rs.3300.00
Major Rs. 2500.00
(Life time Warranty)
Strips Rs. 975.00

Peak Flow Meter

Oxygen Regulator



Oxygen Concentrator

Oxygen Concentrator- Rs. 29,000.00
Oxygen Regulator - Rs.8,450.00

## Examination Beds & Patient's Bed



Examination Bed- Rs.18,000.00
Patient's Bed Normal- Rs.15,100.00
Head side Eluvations & side Trailing- Rs.31,000.00
Head & Leg Side Eluvation Side Trailing Bed- Rs.34,800.00

(C/14569)(10.6.3)

## Few of the surgical and healthcare items available in our show room

| | | |
|---|---|---|
| 1 | Air Cushoin | 500.00 |
| 2 | Air Mattress | 11,500.00 |
| 3 | Anti Embolism Stockings (for deepvein thorombosi | 2,200.00 |
| 4 | Auto Clave | 21,500.00 |
| 5 | Chemical Balance (0.5mg up to 50gm) | 6,825.00 |
| 6 | Bath Room Balance in Varieties | 1500 up to 2850 |
| 7 | Bed Side Cabinet | 12,800.00 |
| 8 | First Aid Box (Large) | 850.00 |
| 9 | Bulb & Vale for B.P Meters | 450.00 |
| 10 | Cuff & Bledder for B.P Meters | 490.00 |
| 11 | Digital B.P Meter Cuff | 900.00 |
| 12 | Cervical Collar | 630.00 |
| 13 | Cervical pillow - silicon | 7,200.00 |
| 14 | Esophageal Varices Band | 6,000.00 |
| 15 | Knee Hummers in varieties | 300 up to 520 |
| 16 | Lumbo sacral belt | 675.00 |
| 17 | Abdominal belt | 800.00 |
| 18 | Mackintosh sheet meter | 520.00 |
| 19 | Illuminated Magnifying glass (Battery Operated) | 420.00 |
| 20 | Mini magnifying Glass (to carry in your purse / pock | 110.00 |
| 21 | Mortar with pestle | 875.00 |
| 22 | Oxygen Regulator (Denmark) | 8,450.00 |
| 23 | Oxygen Regulator (Japan) | 11,700.00 |
| 24 | Diabetic shoe in all size | 1,750.00 |
| 25 | Arm sling pouch | 750.00 |
| 26 | Shoulder immobiliser | 1,100.00 |
| 27 | Safty glass for science lab | 200.00 |
| 28 | Silicon urinary catheter | 2,000.00 |
| 29 | Silicon insole | 4,000.00 |
| 30 | Silicon heal cushion | 2,000.00 |
| 31 | Skin grarting handle & blade | 9,500.00 |
| 32 | Skin traction kit | 950.00 |
| 33 | Sterilizer (Different size) | 7000 to 8250 |
| 34 | Stethos cope | 750.00 |
| 35 | Suction catheters in all size | 48.00 |
| 36 | Surgical dressing drum | 1,450.00 |
| 37 | Humidity thermometer | 2,600.00 |
| 38 | Freezer thermometer | 1,625.00 |
| 39 | Room thermometer | 2,600.00 |
| 40 | I.U.I canula | 450.00 |
| 41 | Spygno manometer in varieties | 3900 up to 12500 |
| 42 | Compression stocking | 2,100.00 |

(C/14569)(10.6.3)

**Any urgent orders for Special Surgical Items shall be executed within 24 hours**

**Vanikaa Surgicals subsidiary of Vanikaa Medicals**
203, Hospital Road, Jaffna.
(20 meters from "Sathira santhi" towords Koddady)

Tel: 021 222 6291, 227 9700 - Hot line: 077 763 6798 Fax: 021 2222445 E-mail: Vanikaa@sltnet.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுவருட நன்நாளில் மக்கள் சுபீட்சமாக வாழ வாழ்த்துகிறோம்
டோனிகா
நகைத் தொழிலகம்
நகை வியாபாரிகள்
நம்பிக்கை, நாணயம், நயமான சேவை
82, ஈச்சமோட்டை வீதி, யாழ்ப்பாணம். T.P. 077 888 6191

எமது இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்
இராஜேஸ்வரி
ரெக்ஸ்ரைல்ஸ்
(இராஜபுரம்)
இல.105, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 6953
(C/14553)(10.6.3)

புதிய ஆண்டில் கஷ்டங்கள் நீங்கி
புதிய பொலிவுடன் வாழ வாழ்த்துகின்றோம்
உற்பத்தியும் மொத்த, சில்லறை விற்பனையும்
செ. இராசரட்ணம்
S.R.P. பம்புகள்
(நீர் இறைக்கும் இயந்திர உதிரிப்பாக உற்பத்தியாளர்)
கே.கே.எஸ். வீதி, கோண்டாவில்.
(C/14560)(10.6.3)

புதிய ஆண்டில் புதுப்பொலிவுடன் வாழ வாழ்த்துகின்றோம்
பானுயன்
அரிவு மில்
சகல விதமான மரவகைகள் குறித்த தவணையில் பலகைகள்,
தீராந்திகள், தளபாட வகைகள் ஓடருக்குச் செய்து தரப்படும்
உரிமையாளர்: T.சுதாகரன் T.P. 077 7987006
48, புங்கன்குளம் வீதி, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.

எமது வாடிக்கையாளர் அனைவருக்கும்
இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்
SNT SERVICE STATION
எஸ்.என்.ரி. சேர்விஸ் ஸ்ரேசன்
உங்கள் வாகனத்தின் இருக்கைகளை
அகற்றாமல் விசேட தொழில்நுட்பம்
மூலம் 2 மணித்தியாலத்தில்
சுத்திகரித்து தரப்படும்.
யாழ்ப்பாணம் வீதி, மானிப்பாய்.
(மானிப்பாய் மகளிர் கல்லூரிக்கு அருகில்)
தொ.பே: 021 7200290
(C/14556)(10.6.3)

புதிய புத்தாண்டில் புதிய பாதையில் மக்கள் நலமுடன் வாழ வாழ்த்துகிறோம்
தரமான புதிய டிசைன்களில் ஆடைகளைக் கொள்வனவு செய்ய நாடவேண்டிய இடம்
தனம்ஸ் ரெக்ஸ்ரைல்
(C/14559)(10.6.3)
இல. 20 H (22A), நவீனசந்தை, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம். T.P. 021 222 8544

வாடிக்கையாளர் அனைவருக்கும் இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்
செல்வி நகை அகம்
Chelvi
Nakai Agam
Manufacturers of Gold Jewels
தங்கப்பவுண் நகை வியாபாரம்
22 கரட் தங்க நகைகள் ஓடருக்கு
உத்தரவாதத்துடன் செய்து கொடுப்பவர்கள்.
1/3, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
1/3, Kasturiyar Road, Jaffna. T.P: 021 222 9441
(C/14563)(10.6.3)

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
எமது புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்
பூரணி
நகை மாடம்
1/4, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P. 021 222 3121

இனித்திடும் புத்தாண்டில் இன்பம் பொங்கிட வாழ்த்துகின்றோம்
கன்னிஹா
ஜுவல்ஸ்
Kanniha
Jewels
Kanniha Jewels
இல. 99E, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: +94 212 22 4448
(C/14565)(10.6.3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சருகுகளில் இருந்து துளிர்க்கட்டும் புத்தாண்டு

துளிர்த்தெழுதலின் சுகம்
சொல்லித்தெரிவதில்லை.
பனியில் நனைந்து
பசுமையில் குளிர்ந்து
பசளையின் செறிநிலத்தில்
முளைவிடுதலில்
ஆச்சரியம் ஏதுமில்லை.
துளிர்த்து எழுதலின் சுகம்
அங்கு இருக்கவே செய்கிறது.
உயிரூட்டும்
மழைத்துளியில்
தரிசு நிலத்திலும்
உயிர் பிறக்கவே
செய்யும்.
ஆண்டவன்
இட்ட பிச்சை அது!
தகிக்கும் சூரிய
வெம்மையில் தீய்ந்து
வரண்ட மண்ணில்
துலா ஒடிப் பாய்ந்த
சிலதுளி நீரில்
விதைகள் முளைக்கவே
செய்யும்
மனித உழைப்பின்
மகிமை அது!
முள்ளிவாய்க்காலின்
நச்சுக் குண்டுகள்
எரித்தழித்த
மண்ணிலும் கூட
உயிரின்
ஓலங்கள் அடங்கி
ஆனந்தக் கீதங்கள்
இசைக்காதோ !
நம்பிக்கையும்
உறுதியும்,உழைப்பும்
திடசங்கற்பமும்
இருந்தால்
மனித நிண
வெட்கை
அனலாய் வீசும்
சுடுகாட்டிலும்
உயிர் முளைக்கும்.
துளிர்த்து எழுதலின் சுகம்
நிஜமாய் அங்கிருக்கும்.
சுயமான சுகம்
வெற்றியின் சுகம்
அது! வேகத்தின் சுகம்
வீரத்தின் சுகம்
சுட்டெரிக்கும்
அழிவிலிருந்து
மீண்டெழும் சுகம்
சொல்லித் தெரிவதில்லை.
சொல்லிப் புரியப்போவதும்
இல்லை.

*- அற்புதன்*

# நிறைவான வாழ்வு மலரட்டும்




கடந்த முப்பது ஆண்டுகளாய் சகல சந்தோசங்களையும் இழந்து பரிதவித்துக் கொண்டிருப்பவர்கள் எமது மக்கள். பண்டிகைகளைக் கொண்டாடாது தலைமுறை தலைமுறையாக சோகத்தில் ஆழ்ந்து கொண்டிருக்கிறது எமது இனம். இன் னமும் விடிவு வந்ததாயிலலை.

வாழ்க்கை என்பது வாழ்வதற்கு. துன்பங்கள் இருந்த போதும் அதனையும் மீறி மனத்தில் மகிழ்ச்சி பெற அவாவ வேண்டும். தாம் பெற்ற இன்பத்தை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும். இல்லையேல் மனச்சோர்வு பிடித்த சமூகமாகத் தாழ்ந்துவிடக் கூடிய அபாயம் உண்டு என்பதை மனோவியல் நிபுணர்கள் கூறுகிறார்கள்.

எனவே வாழ்த்துங்கள்!

வாழ்த்திக் கொண்டே இருங்கள்.

உங்கள், எங்கள் மனதுகளில் தோய்ந்திருக்கும் இருண்ட பக்கங்களை ஒதுக்கி வைத்துவிட்டு வெளிச்சத்துக்கு வாருங்கள்.

முதலில் உங்கள் உள்ளத்தில் ஒளியை ஏற்றுங்கள்.

ஒளி பரவட்டும்.

உங்களுக்குக் கிடைக்கும் மகிழ்ச்சியை மற்றவர்களுக்கும் பரவ விடுங்கள்.

உதவிக் கரம் நீண்டுவதுடன் நின்றுவிடாது அவர்களைப் பார்த்து புன்முறுவல் செய்யுங்கள். இறுகிக் கிடக்கும் முகத்தின் தசை நார்கள் இறுக்கம் தளர்ந்து இலேசாகும் போது மனமும் இறக்கை கட்டி வானில் பறக்கும் மகிழ்ச்சியான நிறைவான வாழ்க்கை அனைவருக்கும் கிடைக்கப் பாடுபடுவோம். அதற்காக உழைப்போம்.

*- கவிதா*







Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யாரண்ணா நீ? எமக்காய் அழுகிறாய்?



சிந்திக்கத் திராணியில்லை
சிதைந்த வாழ்வு அவலம்
முடிவில்லா சிறைப்பயணம்
எங்களை உசுப்பி விட்டவர்கள்
திரும்பிக்கூடப் பாராமல்
பத்திரிகைகளில் பேசுகிறார்கள்

முகமும் தெரியவில்லை
முகவரியும் அறியவில்லை
சிறைக் கைதிகள் என்று
பட்டமும் கொடுத்து
பரிதவிக்க விட்டவர்கள்
நாடாளுமன்றக் கதிரைகளுக்கு
சொந்தக்காரர்கள்

நாங்கள் இன்னமும் சிறையில்
நாட்களை எண்ணினோம்
மாதங்களாகிவிட்டன
மாதங்களை எண்ணினோம்
வருடங்களாகிவிட்டன
யுத்தமும் முடிந்தது
புனரமைப்பும் வந்தது
சத்தங்களும் மைக்கில்
வந்தன வாக்குகள் கேட்க

எங்களுக்கும் ஆசையில்லையா
வீதிகளில் நண்பர்களோடு
சேர்ந்து உலாவ
எய்தவன் இருக்க அம்பை
நொந்து என்ன பயன்
வாலிபம் போகிறது
இளமை கலைகிறது
எத்தனை நாட்கள்
சிறைகளிலே இருந்து
எப்படியாவது எங்களைக்
காப்பாற்றுங்கள் என்று
உறவுகளுக்கு கடிதம் எழுதி
கைகளும் வலித்துவிட்டன

வருவார் போவார்கள்
வறட்டுச் சிரிப்பும் வாழ்வில்லா
வாழ்வும் வாழ
நாம் நிர்ப்பந்திக்கப்பட்டோம்
அம்மாதான் என்ன செய்வார்
அப்பாதான் எங்கே போவார்

வக்கீலுக்கு காசில்லை
வாழ்வு தேட வழியில்லை
சிதறிவிட்டோம் என்பதற்காக
எங்களைப் பழிவாங்காதீர்கள்
அம்மாவோடும் அப்பாவோடும்
அண்ணனோடும் தம்பியோடும்
அக்காவோடும் தங்கையோடும்
ஆசையாய் சண்டைபிடிக்க
எங்களுக்கும் ஆசையில்லையா

முடங்கிக் கிடக்கிறோம்
ஏக்கங்கள் பெருமூச்சுகளாய்
நான்கு சுவர்களுக்குள்
அழுதகண்ணீர் ஆறாகி ஓடும்
கவலைகளும் கண்ணீரும்
வாழ்வு ஆகும் போது ஒருதடவை
விசிட் வரும் உறவுக்காக
அந்த ஒருநாள் மட்டும்
மலர்ந்த முகமாகி வரவேற்க
காத்திருப்போம்

ஆயுள் கைதியா? மரணம் வரை
கைதியா என்று கூட
தெரியாமல் ஏங்குகிறோம்
வக்கீலை பார்க்க அறிமுக
'பீஸ்' கட்ட எங்கே போவது
மூச்சுகள் வேதனைகளாகி
ஏக்கங்கள் வாழ்வாகி
வாழும்போது
ஓர் அசரீரி குரல் கேட்டது
வக்கீலுக்குப் பணம் கட்டி
வாதாடி
நிலைமையைப் புரியவைத்து
எங்களைக் காக்க
ஓர் இதயம் அழுகிறது

அந்த அசரீரி குரலுக்கு
சொந்தக்காரன்
யாரென்று கேட்டபோது
எங்கள் அண்ணன்
எஸ்.கே. கிருஷ்ணா
என அறிந்தோம்

யாரண்ணா நீ
எங்களுக்காய் அழுகிறாய்
எங்களை
காப்பாற்றத் துடிக்கிறாய்
உன் குரல் கேட்டு ஓர் ஆறுதல்
நிம்மதியாய் இனிவரும் காலம்
நீதான் அண்ணா எங்கள் உறவு
நீ எங்களுக்குள்
சொந்தமுமில்லை பந்தமுமில்லை
உறவுமில்லை உரிமையுமில்லை
நீ உண்மையான பசுமையான
இதயம் கொண்டு விளங்கும்
அழும் ஓர் பண்பாளன்

நண்பனுக்காய் உயிர்காத்த
கர்ணன் வரலாறு
ஞாபகம் வருகிறது
உண்மை வாழும்
உயர்வு பெறும் உன் வாழ்வில்
வசந்தம் வீசும்
சிறைக்கைதிகள் என்று
பேரான எங்களையும்
காத்திட நீ உதயமாகிட்டாய்
கருணை கூர்ந்து விடுதலை
பெற்றால் நீயும் இந்த நாடும்தான்
எங்கள் வாழ்வு
ஓரினமாய் சகலதும் மறப்போம்
சமத்துவம் காப்போம்.

சிறையில் வாடும் உறவுகள்

(இது ஒரு கட்டணம் செலுத்தப்பட்ட விளம்பரம்)

# விடுமா புத்தாண்டு...?

அருவி

'அம்மா எனக்கும் பட்டாசு வேணும்.. காசு தாங்கம்மா..' பிருந்தாபன் நூறாவது தடவையாகக் கேட்டிருப்பான். ஆனால் அந்தத் தாயிடம் எந்தச் சலனமும் இல்லை. புத்தாண்டுப் பிறப்பை நெருங்கி விட்டாலே அவள் அப்படியாகி விடுவாள்.

பாவம் ஆறே வயது நெருங்கிய அவனுக்கு அது எப்படிப் புரியும்? மூத்தவன் பார்த்தீபனுக்கு நிலைமை ஓரளவு புரியும். ஆனாலும் தம்பியைச் சமாதானப்படுத்த அவனால் முடியாது. அவனுக்குப் 12 வயது நிரம்பிவிட்டது. குடும்ப நிலைவரத்தைப் புரிந்து நடக்கும் பக்குவம் அவனிடம் இருந்தது. அம்மாவை அவன் எப்போதுமே எந்தத் தொந்தரவும் செய்ய மாட்டான். அவர்களைப் பொறுத்தவரை ஆசைப்படும் சின்னச் சின்ன விளையாடும் பொருள்களையோ, உணவுப் பொருள்களையோ எதைப் பெறுவதாக இருந்தாலும் உடனடியாகப் பெற்றுக் கொள்ள முடியாது . அது அவர்கள் வாங்கி வந்த வரம் போலும். அவனுக்கு அறிவு தெரிந்த நாள் வரை அவனும் தம்பியைப் போல் அழுது குழறி ஆர்ப்பாட்டம் பண்ணி எத்தனையோ செய்து பார்த்தும் அம்மாவிடம் எதுவும் பலிக்காது என்பதை உணர்ந்து விட்டிருந்தான். அம்மாவின் அந்த இறுக்கமும் ஏன் வந்தது என்பதும் அவனுக்குப் புரியும். ஆறு வருடங்களுக்கு முன்னால் வருடப்பிறப்பன்று புத்தாடை உடுத்தி ஆலயத்துக்குப் போய் வழிபாடு செய்து விட்டு வந்த அப்பாவும் நானும் பெட்டி பெட்டியா விதம் விதமான வெடிகள் வாங்கிக் கொளுத்தி எவ்வளவு சந்தோஷமாக இருந்தம்... அப்ப தம்பி அம்மா வயித்தில இருந்தான். அப்பாவையும் என்னையும் சாப்பிட வரச்சொல்லி அம்மா கூப்பிட்டுக் கொண்டே இருந்தா.

ஆனா எனக்கும் அப்பாவுக்கும் வெடி கொளுத்தின திருப்தியேயில்லை.. 'அப்பா இன்னும் வெடி வேணும்..', 'பிள்ளை.. இண்டைக்கு ஆசை தீர வெடி கொளுத்தலாம்..' என்னைக் கட்டி அணைத்து முத்தமிட்டார். 'நான் பட்டாசு வாங்கீட்டு டப்பெண்டு வந்திடுவன்..! அப்பா மோட்டார் சைக்கிளை எடுத்துக் கொண்டு வெளியில் செல்லும் போது கேற் வரை அப்பாவின் மோட்டார் சைக்கிளில் ஏறிச் சென்று அப்பா கொஞ்சி இறக்கிவிட்ட பிறகு. அப்பாவுக்கு டாட்டா காட்டி... எல்லாமே வழமை போலத்தான் இருந்தது. ஆனால் போன அப்பாதான் வழமை போல் திரும்பி வரவே இல்ல.. அம்மாவும் நானும் ரோட்டை ரோட்டைப் பார்த்துக் களைச்சுப் போனம். தகவல் அறிஞ்சு ஆக்கள் வந்து போய்ச் சினம்... அப்பா காணாமற் செய்யப்பட்டு விட்டாராம். பட்டப் பகலில வெள்ளை வாகனத்தில அப்பாவைக் கடத்தியிட்டுப் போயிட்டினமாம்..' அன்று பிடித்த பிரமை, அதில் இருந்து அம்மா விடுபடவே இல்ல... அண்டைக்கு அம்மாவின்ர கையால சமைச்ச நல்ல சாப்பாட்டுக்குப் பிறகு இன்று வரை ஒரு நல்ல சாப்பாட்ட நாங்கள் பார்த்ததே இல்ல... அப்பா இருக்கேக்க ஒட்டின சொந்தமெல்லாம் அப்பா இல்லாததோட தூர விலகிப் போயிட்டினம். எல்லாருக்கும் பயம் எங்கட குடும்பச் சுமையைத் தூக்க வேண்டி வந்திடும் என்று.. ஆனா அம்மம்மா மட்டும் எங்களைக் கைவிடேல்ல. 'என்னையும் கையில பிடிச்சிட்டு ஏறாத இடமெல்லாம் ஏறி இறங்கினா.. ஒவ்வொரு இராணுவ முகாம் முகாமாத் திரிஞ்சா எந்தப் பயனும் இருக்கேல்ல... காணாமற் போனோர் பதிவுகள் கூட்டங்கள் அது இது என்று எதையும் அவா தவறவிட்டதில்ல... இப்ப அம்மம்மாவும் எங்களை விட்டிட்டுப் போயிட்டா..

ஆனா குடும்பத்துக்கு சோறு போட என்னால முடியும்... அம்மம்மா வாழ்வதற்கான வழிய ஓரளவு காட்டி விட்டுப் போனதால உயிர் வாழ முடியுது.. பாவம் அம்மாவுக்குத்தான் நன்மை, தீமை எதுவுமே புரியாதே... சாப்பிடுங்க என்று சாப்பாடு கொடுத்தா சாப்பிடுவா, படுங்க என்று பாய் விரிச்சுவிட்டால் படுப்பா... முகம் கழுவுங்கோ, குளியுங்கோ கடமைகளைச் செய்யுங்கோ எண்டு கூட்டிக் கொண்டு போய் ஒவ்வொன்றாய்ச் சொல்லிக் கொடுத்தாச் செய்வா... பாவம் அவா. ஒரு நடைப்பிணமாப் போனதும் ஒரு வருடப் பிறப்பன்றுதான். என்னைப் பொறுத்தவரை அம்மாவும் ஒரு குழந்தை தான்.. பாவம் தம்பி இதெல்லாத்தையும் புரியும் பக்குவம் இன்னும் அவனுக்கு வரேல்ல...

கண்டிப்பா என்னைப் போல ஒருநாள் அவனும் மாறுவான்.

எல்லா வீட்டிலும் சந்தோசமும், கலகலப்புமாகத் திரியும் புத்தாண்டு எங்களிட்ட மட்டும் தூர விலகிப் போச்சு.. ஒவ்வொரு ஆண்டும் வரும் போகும். ஆனா எங்களுக்கு மட்டும் விடிவே பிறக்கேல்ல.. இந்த வயசிலேயே எங்கள இந்த நிலைமைக்குத் தள்ளியவர்கள் இன்னும் இஞ்ச இருக்கும் வரை எங்களுக்கெப்படி வரும் புத்தாண்டு.. எங்களைப் போல இன்னும் எத்தினை பேர் ஒரு வேளை சாப்பாட்டுக்கே ஏங்குபவர்களாக இருப்பார்களோ... அவன் கண்களின் வழி கசிந்த நீரைத் தட்டிக் கொண்டான். வெளியில் வந்தான். அம்மா மூலையிலே இருந்தா. தம்பியைக் காணவில்லை.. வீதியில் பார்த்தான் . பட்டாசு கொளுத்தி விளையாடும் அவனை ஒத்தவர்கள். பெரியவர்களை ஒரு கல்லில் அமர்ந்திருந்து ஏக்கத்தோடு பார்த்துக் கொண்டிருந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org